பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 மார்கழி 30 புதன்கிழமை (14-01-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:49

## நாட்டு மக்கள் எழுச்சிக்கு முதற்படி

# ஜனாதிபதி-பிரதமர் அதிகார இழுபறிக்கு தீர்வு காணக் காலக்கெடு எச்சரிக்கை!

## தலைவர்களைப் பேசவைக்க 'வர்த்தக போரம்' ஏற்பாடு

கொழும்பு,ஜனவரி14

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையே நீடித்துவரும் அரசியல் அதிகார இழுபறிக்குத் தீர்வுகாண 'வர்த்தக போரம்' எனப்படும் இலங்கை வர்த்தகச் சமூகம் காலக்கெடுவும் எச்சரிக்கையும் விதிக்கவிருக்கிறது. இரு தலைவர்களையும் ஒன்றாக வைத்துப் பேசித்தீர்வு காணவும் 'வர்த்தக போரம்' ஏற்பாடு செய்து வருகிறது. இந்த ஏற்பாடுகளுக்கு மதத் தலைவர்கள், புத்திஜீவிகள் ஆகியோர் ஆதரவு வழங்குகின்றனர்.**

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையே நீடித்துவரும் அரசியல் நெருக்கடி குறித்து பலதரப்பினரும் இப்பொழுது பொறுமையிழந்து வருகின்றனர். இலங்கைக்கு உதவும் நாடுகள், சர்வதேச நிதி நிறுவனங்கள் ஆகியவை ஏற்கனவே பொறுமையிழந்திருப்பதோடு இலங்கை வர்த்தகச் சமூகமும் பொறுமையிழக்கும் எல்லைக்கு வந்திருக்கிறது.

கடந்த நவம்பர் 4ஆம் திகதி ஆரம்பமான இந்த அரசியல் நெருக்கடி தொடர்ந்து வருவதோடு நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையையும், பொருளாதார அபிவிருத்தியையும் பெருமளவில் பாதித்துக் கொண்டிருக்கிறது.

இந்த பாதிப்புக்களைக் கண்டு விரக்தியடைந்திருக்கும் வர்த்தக சமூகம், நாட்டுக்கு கேடுவிளைவிக்கும் அரசியல் தேக்கநிலையைத் தீர்க்க பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் மாற்றுயோசனைகள், எச்சரிக்கை ஆகியவற்றுடனான ஒரு காலக்கெடுவை விதிப்பதென கொள்கையளவில் இணங்கியுள்ளது.

நேற்றுமுன்தினம் இலங்கை வர்த்

(16ஆம் பக்கம் பார்க்க)

**நாளைய உதயனுடன் மேலதிகமாக 22 பக்கங்கள் கொண்ட பொங்கல் மலர் வெளிவருகிறது.**

## எங்கிருந்தோ வந்த ஈர்க்குவாணம் இளைஞரின் கண்ணைத் தாக்கியது!

### திருநெல்வேலியில் நேற்றிரவு சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜன.14

சீறிவந்த ஈர்க்குவாணம் இளைஞரின் கண்ணைத்தாக்கியது. இதில் அவரது வலது கண்ணில் படுகாயம் ஏற்பட்டது.

திருநெல்வேலி பணிக்கர் வளவு ஒழுங்கைப் பகுதியில் நேற்றிரவு 10.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மூன்றாம்வருட மாணவரான மன்னாரைச் சேர்ந்த அருள்சிவம் செந்தூரன் (வயது-23) என்பவரே இந்தச் சம்பவத்தில் கண்ணில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸி.கிராமப் பகுதிகளில் குடியேற விரும்புவோருக்கு 3 ஆண்டுகள் விசா!

### ஜூலை மாதம்முதல் விண்ணப்பிக்கலாம்

சிட்னி,ஜன.14

ஆஸ்திரேலியாவில் கிராமப்பகுதிகளில் குடியேற விரும்புபவர்களுக்கு மூன்று ஆண்டுகள் தற்காலிக விசா வழங்கப்படும் என்று அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது. 2 ஆண்டுகளுக்குப் பிறகு இதை நிரந்தர விசாவாக மாற்றிக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாவுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு ஆங்கில மொழி அறிவும் கல்வித் தகுதியும் ஓரளவு இருந்தாலே போதுமானதாகும் எனவும் தெரிவிக்

(16ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்வரும் 3ஆம் திகதிக்கு முன் ஜே.வி.பி.-ஸ்ரீல.சு.க.ஒப்பந்தம்

### திருமலையில் விமல் வீரவன்ஸ தகவல்

ஜே.வி.பி., - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றுக்கு இடையிலான கூட்டு ஒப்பந்தம் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் கைச்சாத்திடப்படவுள்ளது.

- இவ்வாறு ஜே.வி.பியின் பிரசார செயலாளரான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

திருகோணமலை புதிய பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று இடம்பெற்ற தேசாபிமான தேசிய இயக்கத்தின் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இந்தத் தகவலைக் கூறினார்.

இந்தக் கூட்டத்திற்கு திருகோணமலை மாவட்ட முன்னாள் அரச அதிபா

(16ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேசம் புலிகள் மீதான தடையை நீக்கி யுத்தத்துக்கான ஆதரவை நிறுத்த வேண்டும்

### கிழக்கு பொங்குதமிழ் எழுச்சி குறித்து அறிக்கை

மட்டக்களப்பு,ஜன.14

புலிகளே தமிழர், தமிழரே புலிகள், சர்வதேச சமூகமே உன் போக்கை மாற்று, புலிகள் தடையை நீக்கு, காலம் எமக்கு களம் அமைத்துத் தந்திருக்கிறது என்ற தொனிப் பொருளில் எதிர்வரும் 21ஆம் திகதி கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள பொங்கு தமிழுக்கான பிரசாரங்கள் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நடைபெற்று வருகின்றன.

இதனையொட்டி பொங்குதமிழ் ஏற்பாட்டுக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் பேசும் மக்களின் தாயக விடுதலைப் போராட்டத்தின் மக்கள் எழுச்சியின் பரிணாமம் மீண்டும் புடம் போடும் வேளை வந்துவிட்டது. வரலாறு வாய்ப்பளித்து நிற்கின்றது. எம்மை நாமே எமது நிலத்தில் ஆள யாருடைய நெருக்குவாரங்களும் அற்ற வழிமுறைய

(16ஆம் பக்கம் பார்க்க)

## தனது பதவிக்காலத்தை மேலும் ஓராண்டு நீடிக்க முடியும் என்கிறார் ஜனாதிபதி சந்திரிகா

"தேவையானால் எனது பதவிக் காலத்தை மேலும் ஒரு வருடத்துக்கு - 2006ஆம் ஆண்டு வரை - நான் நீடிக்க முடியும். அது பற்றித் தீர்மானிப்பது நான்தான்",

- இப்படிக் கூறியிருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

சுயாதீன தொலைக்காட்சியில் நேற்றுத் தோன்றி செவ்வியளித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

"எனது முதல் பதவிக்காலம் முடிவதற்கு ஓராண்டுக்கு முன்னரே - 1999 டிசெம்பரில் - அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடந்தது.

எனவே - அரசமைப்புப்படி - எனது முதலாவது பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னர் எனது இரண்டாவது - இறுதி - பதவிக் காலத்தை நான் ஆரம்பித்திருப்பதாகக் கருதத் தேவையில்லை.

எனவே, அக்காலம் முழுவதும் வரை - 2006வரை - நான் ஜனாதிபதியாகப் பணியாற்ற முடியும்.

இப்போது பொதுத் தேர்தல் நடத்த வேண்டிய தேவை எழவில்லை. அப்படி ஒரு தேவை வந்தால் தேர்தல் நடத்தலாம். ஆனால் அது குறித்துத் தீர்மானிக்க வேண்டியவர் நான்தான்.

- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா

(16ஆம் பக்கம் பார்க்க)

## 'யுனிசெவ்' அமைப்பின் திட்டங்களை சுவீடிஷ் குழுவினர் பார்வையிட்டனர்


யாழ்ப்பாணம்,ஜன.14

குடாநாட்டில் 'யுனிசெவ்' அமைப்பு மேற்கொள்ளும் திட்டங்களை சுவீடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்றுப் பார்வையிட்டது.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்த சுவீடிஷ் குழுவினர், அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்தனர்.

கண்காணிப்புக்குழுவின் அதிகாரிகளைச் சந்தித்த இக்குழுவினர் குடாநாட்டின் பாதுகாப்பு நிலைமை குறித்

(16ஆம் பக்கம் பார்க்க)




சில விநாடிகளில் நீங்களும் ஸ்பீட் லோனை பெற்றுக்கொள்ளலாம். விபரங்களுக்கு அருகிலுள்ள NSB கிளைக்கு விரையுங்கள்.

ஸ்பீட்லோன் | NSB

# பாலசிங்கம் எழுதிய 'விடுதலை' புத்தகம் தமிழ்நாட்டில் ஏற்படுத்தியுள்ள பரபரப்பு

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதி வெளியிட்ட 'விடுதலை' நூல் இந்தியாவின் தமிழ்நாட்டில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத் தியுள்ளது.

இது தொடர்பாகத் தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் 'ஜூனியர் விகடன்' சஞ்சிகையின் ஜனவரி 11ஆம் திகதிய பதிப்பில் பிரசுரமாகியுள்ள கட்டுரை வருமாறு :-

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் 'விடுதலை' என்ற தலைப்பில் தமிழில் ஒரு புத்தகத்தை எழுதியிருக்கிறார். அது இன்றைக்கு தமிழக அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்படும் விடயமாக மாறியிருக்கிறது.

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் மற்றும் பிரபாகரன் இடையேயான நட்புக் குறித்து மிக ஆழமான குறிப்புக்களை இந்தப் புத்தகத்தில்அள்ளித் தெளித்திருக்கிறார் 'பிரபாகரனின் குரு' என்கிற அளவுக்குப் பேசப்படும் பாலசிங்கம்

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் தொடர்ந்து வேட்டையாடப்படும் இன்றைய சூழலில் இந்தப் புத்தகம் வெளியாகி இருப்பதுதான் பலரையும் புருவத்தை உயர்த்த வைத்திருக்கிறது.

அந்தப் புத்தகத்தில்.. " எம்.ஜி. ஆரிடம் பிரபாகரன் மிகுந்த பற்று கொண்டிருந்தார். பிரபாகரன் கேட்ட உதவிகளை எல்லாம் முகம் கோணாமல் செய்து வந்தவர் எம்.ஜி.ஆர். தமிழக முதல்வராக அவர் வீற்றிருந்த எண்பதுகளின் மத்தியில் சென்னை துறைமுகத்தின் வழியாக ஒரு 'கொன்டெய்னர்' நிறைய படுபயங்கரமான ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கொண்டு சென்றனர். இதற்கு எம்.ஜி.ஆர்தான் உதவி செய்தார். இதற்காகப் பிரபாகரன் ஒரு நவீன ரக துப்பாக்கியை எம்.ஜி.ஆருக்கு பரிசாகக் கொடுத்தார். அதை ஆவலாக வாங்கிக் கொண்ட எம்.ஜி ஆர். தன் வாழ்நாள் முழுக்க அந்தத் துப்பாக்கியை படுக்கையறையில் தனது தலையணைக்கு அடியில் வைத்திருந்தார்.

ஒருமுறை தனது சகாக்களுக்கு பயிற்சி அளிக்கவும் ஆயுதங்கள் வாங்கவும் கோடிக்கணக்கில் பணம் வேண்டும் என்று எம்.ஜி..ஆரிடம் பிரபாகரன் கேட்டார். இதைத் தொடர்ந்து பத்து 'ரங்'பெட்டிகளில் பணத்தை அனுப்பி வைத்தார் எம்.ஜி.ஆர். அந்தக் காலகட்டத்தில் சென்னை திருவான்மியூரில் விடுதலைப் புலிகளின் பிரதான அலுவலகம் அமைந்திருந்தது. அங்கு கொண்டுவரப்பட்ட அந்தப் பணப் பெட்டிகளுக்கு பொலீஸ் பாதுகாப்பு வாகனங்களையும் அனுப்பியிருந்தார் எம்.ஜி..ஆர்.

இப்படி வந்து சேர்ந்த பணத்தில் விடுதலைப் புலிகள ஆயுதங்களை வாங்கி வரும்போது சென்னை துறைமுகத்தில் அவற்றை அனுமதிக்க மறுத்தனர். இதிலும் எம்.ஜி.ஆர் தலையிட்டு எந்தப் பிரச்சினையும் இல்லாமல் புலிகளின் கைகளுக்கு ஆயுதங்கள் செல்ல உதவினார் என்றெல்லாம் எழுதப்பட்டிருக்கிறது.

'பாலசிங்கம் திடீரென இப்படி ஒரு புத்தகத்தை எழுதக் காரணம் என்ன? அதில் எந்த அளவுக்கு உண்மை இருக்கிறது?- என்ற கேள்விகள் இப்போது பலரது மண்டைக்குள்ளும் ரீங்காரமிடுகின்றன.

எம்.ஜி.ஆரின் அமைச்சரவையில் மூத்த அமைச்சராகவும் அவரது நம்பிக்கைக்குரியவராகவும் அந்தக் காலகட்டத்தில் வலம்வந்த முன்னாள் தமிழக அமைச்சர் க.ராஜாராமைச் சந்தித்து இது குறித்து பேசியபோது கடகடவென அந்தக்கால நினைவுகளில் மூழ்கினார்.

"பிரபாகரனை எம்.ஜி.ஆர். ஒரு விடுதலை வீரனாகவே கருதினார். பிரபாகரனுக்காகவும் அவர் சார்ந்த அமைப்புக்காகவும் தமிழகத்தில் எம்.ஜி.ஆர். வெளிப்படையாக ஆறு கோடி ரூபா நிதி திரட்டினார். அந்த நிதியை சிறுகச்சிறுக பிரபாகரனுக்குக் கொடுத்தார். தமிழர்களுக்காக தனி ஈழம் உருவாக வேண்டும் என்றஆசை எம்.ஜி.ஆருக்கு நிறையவே இருந்தது. அது அவருடன் பழகிய அனைவருக்குமே தெரியும். அந்த ஆசையை பிரபாகரன் ஒருவரால் தான் நிறைவேற்றமுடியும் என்ற நம்பிக்கையும் எம்.ஜி.ஆருக்கு இருந்தது.

"தனி ஈழம் என்ற ஒன்றை உருவாக்கி, அதை நிர்வகிக்கும் வல்லமை படைத்தவர் பிரபாகரன்தான். இலங்கையிலே பல தலைவர்கள் இருக்கிறார்கள், ஆனால், எனக்கு தெரிந்தது பிரபாகரன்தான் பெரிய வீரன்"-என்று எம்.ஜி.ஆர், அடிக்கடி சொல்வார்.

"விடுதலைப் புலிகள் தமிழகத்தில் ஆயுதப்பயிற்சி மேற்கொள்ள விருப்பம் தெரிவித்தபோது, அதற்கு முழுஉதவிகளையும் செய்துகொடுத்தார் எம்ஜி.ஆர். அப்போது எம்ஜி.ஆரை அடிக்கடி ராமாவரம் தோட்டத்தில் பிரபாகரன் சந்தித்து வந்தார். அவர்கள் சந்திக்கின்ற போது எங்களைப் போன்ற அமைச்சர்களையோ மற்றவர்களையோ அருகில் வைதது்க்கொள்ள மாட்டார் எம்.ஜி.ஆர். அவர்கள் இருவரும் தனியாகத்தான் சந்திப்பார்கள். பிரபாகரனும் எம்.ஜி.ஆரை அளவு கடந்துநேசித்தார்.

"நான் சபாநாயகராக இருந்தபோது, பழ நெடுமாறன் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். அப்போது இலங்கைத் தமிழர்களுக்காக ஒரு ஆதரவுத்தீர்மானம் கொண்டுவந்து பேசுவதற்கு அனுமதிகேட்டார். உடனே எம்.ஜி.ஆர். எழுந்து, 'இப்படி ஒருதீர்மானத்தை அரசாங்கமே கொண்டு வரும். அதில் நீங்கள் தாராளமாகப் பேசலாம்' என்று அறிவித்தார். ஒரு நாள்முழுக்க இலங்கைத் தமிழர் பிரச்சினை சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. அன்று முழுவதும் அந்தப் பேச்சுக்களை எம்ஜி.ஆர். ஆழ்ந்து கேட்டுக்கொண்டிருந்தார். விடுதலைப் புலிகளுக்கு எம்.ஜி.ஆர். வெளிப்படையாக உதவியதை அன்று யாருமே குறைகூறவில்லை அவரும் எதையும் மறைத்ததில்லை என்று நிறுத்தினார் ராஜாராம்.

அவரிடம் "பாலசிங்கம் குறிப்பிட்டுள்ள சம்பவங்களைப் பற்றித் தெரியுமா?" என்று கேட்டபோது-

எம்.ஜி.ஆர். உதவியிருக்கலாம். அந்த உதவிகளைப் பெற்றவர்களுக்கு அவற்றின் விவரங்கள் தெரிந்திருக்கலாம். பாலசிங்கம் குறிப்பிட்டுள்ள அளவுக்கு எனக்கு விவரங்கள் தெரியாது. பிரபாகரனை எம்.ஜி. ஆர். தனியாகத்தான் சந்தித்தார். ஒருவேளை பாலசிங்கம் குறிப்பிட்டுள்ள விஷயங்கள் அப்போதிருந்த உயர் பொலீஸ் அதிகாரிகளுக்குத் தெரிந்திருக்கலாம். அவர்கள் அப்போதைய முதல்வரின் விருப்பத்தை நிறைவேற்றி இருக்கலாம்"-என்று சொன்னார்.

"இன்றைய தமிழக அரசு,புலி ஆதரவாளர்களைக் கடுமையாக அடக்கி வரும் இந்த வேளையில் பாலசிங்கம் இப்படியொரு புத்தகத்தை எழுதியிருப்பதில் அரசியல் காரணங்கள் ஏதாவது இருக்குமா?' என்று கேட்டதற்கு-

"நான் அப்படி நினைக்கவில்லை. வரலாற்றுச் சம்பவங்களை விளக்கி ஒருவர் புத்தகம் எழுதும்போது எந்த உள்நோக்கத்தோடும் எழுத மாட்டார். தவிர பாலசிங்கத்துக்கு உடல் நிலை சரியில்லை. நவீன சிகிச்சைகள் மற்றும் மருந்துகளாலும் தான் அவர்காலம் தள்ளிக் கொண்டிருக்கிறார் என்ற தகவல்களும் வந்து கொண்டிருக்கின்றன. தன் வாழ்நாளில் தனக்குத் தெரிந்த வரலாற்று உண்மைகளை வெளி உலகுக்குச் சொல்ல வேண்டும் என்ற ஆதங்கத்துடன் அவர் எழுதியிருக்கலாமல்லவா?.

'அடுத்து ராஜிவ்காந்தி மரணத்துக்கு முன்புவரையிலும் விடுதலைப் புலிகளைப்பற்றிய எண்ணங்கள் இந்தியா முழுக்க ஒரே மாதிரியாகத்தானே இருந்தன. அந்தச் சம்பவம் மட்டும் நடைபெறாமல் இருந்தால் இன்றைக்கும் கூட தமிழகத் தலைவர்கள் புலிகளுக்கு பெரிய உதவிகளைச் செய்து கொண்டுதானிருப்பார்கள்.

"சமரசப் பேச்சு வெற்றி பெற்றிருந்தால் உலகத்தில் பிரபாகரன் குறிப்பிடத்தக்க தலைவரான எம்.ஜி. ஆரின் விருப்பத்தையும் நிறைவேற்றியிருப்பார்."-என்று ஆதங்கம் பொங்கச் சொல்லி விடை கொடுத்தார் ராஜாராம்.

- இப்படி அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★

## முதலில் மாகாணசபைத் தேர்தலா, பொதுத்தேர்தலா?

# கட்சியினருடனான ஆலோசனைகளையடுத்து ஜனாதிபதி தீர்மானிப்பார் என எதிர்பார்ப்பு

கொழும்பு,ஜன.14

நாடாளுமன்றத் தேர்தல்களுக்கு முன்னோடியாக மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவது குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது கட்சி எம்பிக்கள், தொகுதி அமைப்பாளர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோருடன் தொடர்ந்து ஆலோசனை நடத்திவருகிறார். கட்டம் கட்டமாக நடத்திவரும் இந்த ஆலோசனையை அடுத்து மாகாண சபைத் தேர்தலையோ பொதுத்தேர்தலையோ முதலில் நடத்துவதென்பதை ஜனாதிபதி தீர்மானிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுத்தேர்தலை முதலில் நடததுவதற்காக நாடாளுமன்றத்தை எதிர்வரும் 26ஆம் திகதி ஜனாதிபதி கலைப்பார் என்று கூறப்படும் ஹேஷ்யங்களை அவரே நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மறுத்திருக்கிறார்.

"பொதுத்தேர்தலை நடத்துவது குறித்து நான் எந்த ஒரு தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை. ஆயினும் பொதுத்தேர்தல் முதலில் நடத்தப்படவேண்டுமென்ற பல கோரிக்கைகளை நான் ஆராய்ந்து வருகின்றேன்" என்று ஜனாதிபதி அக்கூட்டத்தில் கூறினார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் ஊவா, வடமேல் ஆகிய மாகாணங்களின் கட்சி உறுப்பினர்களை ஜனாதிபதி சந்தித்தார். தெற்கு, மேல் ஆகிய மாகாணங்களின் கட்சி உறுப்பினர்களை அவர் நேற்றுச் சந்தித்தார்.

மாகாணசபைத் தேர்தல்களையோ அல்லது பொதுத்தேர்தலையோ முதலில் நடத்த வேண்டும் என்பது தொடர்பாக கட்சி உறுப்பினர்களின் கருத்துக்களை ஜனாதிபதி கேட்டறிந்து வருகிறார்.

மாகாணசபைத் தேர்தல்களுக்குமுன் பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டுமென்று பெரும்பாலான கட்சி உறுப்பினர்கள் கருத்து கூறியுள்ளனர் என்று அறியப்படுகிறது.

இதற்கிடையே, சுதந்திரக்கட்சியுடன் கூட்டு ஒப்பந்தம் செய்வதற்கு ஜே.வி.பி நிபந்தனை விதிப்பதாக அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

சு.க. - ஜே.வி.பி. ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டால் ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்ட மூன்று வாரங்களுக்குள் நாடாளுமன்றத்தைக் கலைக்க ஜனாதிபதி இணங்க வேணடும் என்பதே ஜே.வி.பி முன்வைத் திருக்கும் நிபந்தனை என கூறப்படுகிறது.

# வைகோ நேற்று பிணை மனுத்தாக்கல் 21 ஆம் திகதி நீதிமன்றம் விசாரணை

'பொடா' வழக்கில் பிணை கோரி பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்தில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ நேற்று மனுத்தாக்கல் செய்தார்.

மனு மீது எதிர்வரும் 21ஆம் திகதி விசாரணை நடத்தப்படும் என நீதிபதி ராஜேந்திரன் அறிவித்தார்.

விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதாகக் கைது செய்யப்பட்டு, கடந்த 18 மாதங்களாக வைகோவுடன் சிறையில் இருந்த ம.தி. மு.க.நிர்வாகிகள் 8 பேருக்கும் நேற்று முன்தினம் சென்னை உயர் நீதிமன்றம் பிணை வழங்கியதையடுத்து வைகோ சார்பிலும் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீது விசாரணை நடக்கும்போது சட்டத்தரணியை வைத்துக்கொள்ளாமல், தானே நேரடியாக வாதாட வைகோ முடிவு செய்துள்ளார்.

# பொது நம்பிக்கையாளர் நாட்டைவிட்டு வெளியேற நீதிமன்றம் தடை விதிப்பு

கொழும்பு,ஜன,14

பொது நம்பிக்கையாளர் என்.எஸ். ஏ.செனவிரத்ன நாட்டைவிட்டு வெளியேறத் தடை விதித்து கொழும்பு பிரதம நீதிவான் ஈ.எம்.வை.பி. போயாகொட நேற்றுமுன்தினம் உத்தரவு பிறப்பித்தார். இலஞ்ச புகார் விசாரணைகள் ஆணைக்குழு விடுத்த ஒரு கோரிக்கையின் பேரிலேயே இவ்வாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பொது நம்பிக்கையாளர் திணைக்களத்தின் 40 கோடி ரூபாவை பிரமுக வங்கியில் வைப்பிடப்பட்டதன் மூலம் அந்த வங்கியிடமிருந்து 19 லட்சத்து 14ஆயிரத்து 525 ரூபாவை லஞ்சமாகப் பெற்றார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைக்கு உட்படாமல் இருக்கும் பொது நம்பிக்கையாளர் வெளிநாடு செல்ல ஆயத்தமாகியிருப்பதால் அதைத் தடுக்குமாறு ஆணைக்குழு நீதிமன்றத்தைக் கோரியிருந்தது.

மத்தியவங்கியின் வங்கி நடவடிக்கைகள் மதிப்பீட்டு அதிகாரியினால் செய்யப்பட்ட ஒரு முறைப்பாட்டின் படி அச்சம்பவம் குறித்து இலஞ்ச புகார் விசாரணை ஆணைககுழு விசாரணைகளை நடத்தி வருகின்றது.

## நிலைமை இன்னும் சீராகவில்லை:

# பொதுமக்கள் விருப்பத்தின்பேரில் தபாற்பொதிகளை ஏற்கத் தயார்!

## பிரதம தபாலதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.14

பொதுமக்களின் சுயவிருப்பத்தின் பேரில் தபாற்பொதிகள் ஏற்றுக்கொள்ளப்படும் இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பிரதம தபாலதிபர் எஸ். இராசதுரை.

ஏ-9 வீதியூடாக தபாற்பொதிகளைப் பரிமாறிக்கொள்வதில் ஏற்பட்டுள்ள தடங்கல்கள் காரணமாக யாழ்.பிரதம தபாலகத்தில் தபாற்பொதிகள் தேங்கியுள்ளன. அவற்றை வைத்திருப்பதில் பெரும் இடநெருக்கடியை தபால் அலுவலர்கள் எதிர்நோக்குகின்றார்கள்.

இது தொடர்பாக யாழ்.பிரதம தபாலதிபர் மேலும் தெரிவித்ததாவது- தரைவழிப்பாதை ஊடாக கடிதங்கள் மற்றும் தபாற்பொதிகளைப் பரிமாறிககொள்வதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் குடாநாட்டிலிருந்து அனுப்பப்படவேண்டிய தபாற்பொதிகள் யாழ்.பிரதம தபாலகத்தில் தேங்கியுள்ளன. இதன் காரணமாகத் தற்போது பிரதம தபாலகத்தில் தபாற்பொதிகளை வைப்பதற்கு இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது எனினும் தபாற்பொதிகளை ஏற்கும் பணி முற்றாக நிறுத்தப்படவில்லை. தபாற்பொதிகளை அனுபபும் பணி சீராக நடைபெறாத போதும், அனுப்புபவரின் சுயவிருப்பத்தின் பேரில் தபாற்பொதிகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. நிலைமை விரைவில் சீராகாது விட்டால் பொதிகளை தபாலகத்தில் வைப்பதற்கு இடமில்லாமல் போகக்கூடும். - இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(ஒ-6)

# விமான நிலைய பயணிகள் சோதனையில் விமானப் படையினர் ஈடுபடமாட்டார்கள்!

## பாதுகாப்புக் கடமைகளில் மட்டும் தொடர்ந்து ஈடுபடுவர்

கொழும்பு,ஜன.14

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சிவில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த விமானப் படையினர் நேற்றுமுன்தினம் முதல் அக்கடமையிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டனர். விமானப் படையினருக்குப் பதிலாக விமான நிலைய நிறுவன பாதுகாப்புப் பிரிவினர் அக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

விமான நிலையத்துக்குள் செல்லும் வாகனங்களும், பயணிகளின் பொதிகளும் இதுவரைகாலம் விமானப் படையினராலேயே சோதிக்கப்பட்டு வந்தன. இக்கடமைகளில் இருந்து விமானப்படையினர் நீக்கப்பட்டிருக்கின்ற போதிலும் விமான நிலைய பாதுகாப்புக் கடமைகளில் அவர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

விமான நிலையத்தின் உயர் பாதுகாப்பு வலயம், அந்த வலய சுற்றாடலில் உள்ள காவல்நிலைகள் ஆகியவற்றில் விமானப் படையினர் தொடர்ந்து கடமையில் ஈடுபட்டிருக்கின்றனர் என்று பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

சர்வதேச சிவில் விமானச்சேவை சங்கத்தின் விதிகளின்படி ஆயுதம் தரித்த ஒரு படை விமான நிலைய உள்வாரி கடமைகளில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டு இருப்பதால் விமானப் படையினரே இவ்வாறு விலக்கிக்கொள்ள தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

# அமெரிக்காவில் சதாம் ஹுசைன் விசாரணை

# அமெ.ஜனாதிபதி புஷ் முன்னிலையில் நடந்தது

கெய்ரோ,ஜன.14

மயக்கிப் பிடிக்கப்பட்ட ஈராக்கிய முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் அமெரிக்கப் படையிடம் விற்கப்பட்ட உடனேயே வாஷிங்டனுக்குக் கடத்தப் பட்டார். ஜனாதிபதி புஷ்ஷின் முன்னிலையில் அவரிடம் புலனாய்வு அதிகாரிகள் விசாரணை நடத்தினர். 'ஒகாஸ்' என்ற அரபுலக பத்திரிகை இந்த அதிர்ச்சி தரும் தகவலை அம்பலப்படுத்தியுள்ளது.

குர்திஷ் படையினரால் மயக்கிப் பிடிக்கப்பட்டு பின்னர் அமெரிக்காவுக்கு விற்கப்பட்ட சதாம் ஹுசைனை, தாமே கைது செய்தோம் என்று அமெரிக்கப் படை கூறியிருந்தது. இது பொய் என்று தெரியவந்துள்ள இந்நிலையில், சதாம் ஹுசைன் வாஷிங்டனுக்குக் கடத்தப்பட்ட விடயமும் அம்பலமாகியுள்ளது.

குர்திஷ் படையினர்தான் முதலில் சதாமின் உணவில் மயக்க மருந்து கொடுத்துப் பிடித்தனர். அதன் பின்னரே அவர் அமெரிக்காவுக்கு விற்கப்பட்டார். சதாமைக் காட்டிக் கொடுப்பவர்களுக்கு சன்மானமாக வழங்கப்படும் என்று அறிவித்த இரண்டாயிரத்து ஐநூறு கோடி ரூபாவை குர்திஷ் படைக்கு அமெரிக்கா வழங்கவில்லை. அதற்கு மாறாக குர்திஷ் மக்களுக்கு தனிநாடு உருவாக்கிக் கொடுக்க அமெரிக்கா உறுதியளித்திருக்கிறது.





அமெரிக்கப் படையிடம் விற்கப்பட்ட சதாம் உடனடியாக வாஷிங்டனுக்குக் கடத்தப்பட்டார். அங்கு ஜனாதிபதி புஷ் முன்னிலையில் அவரிடம் விசாரணை நடந்தது.

அந்த விசாரணை முடிந்த பின்னர் அவர் உடனடியாக பக்தாத்திலுள்ள இரகசிய இடத்திற்கு மீண்டும் கொண்டு வரப்பட்டார்.

அதன்பின்னரே, திக்ரித்திலுள்ள பண்ணை வீடு தெரிவு செய்யப்பட்டு, கைது நடவடிக்கை திட்டமிட்டு அறிவிக்கப்பட்டது.

சதாம் திக்ரித்தில் வைத்து கைது செய்யப்படவில்லை என்பதை அவர் கைது செய்யப்பட்ட பண்ணை வீட்டின் அயலில் உள்ளவர்கள் உறுதி செய்துள்ளனர்.

அவர் ஈராக்கிய வடபகுதிக் கிராமம் ஒன்றில் வைத்தே கைதுசெய்யப்பட்டிருக்கலாம் என்றும் அவர்கள் கருதுகின்றனர். இப்பகுதி, குர்திஷ் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள போதும் இங்கு சதாமுக்கு விசுவாசமான ஆதரவாளர்களும் உள்ளனர்.

சதாமைப் பிடித்துக் கொடுத்தற்குப் பிரதியீடாக குர்திஷ் மக்களுக்கு தனிநாடு உருவாக்கிக் கொடுக்க அமெரிக்கா உறுதியளித்திருப்பது குறித்து சவூதி அரேபியா கவலை தெரிவித்திருக்கிறது.

'குர்திஷ் மக்கள் வாழும் பகுதி, சுனி மக்கள் வாழும் பகுதி, ஷியா மக்கள் வாழும் பகுதியென ஈராக்கை கூறுகளாக்க முயற்சிகள் நடப்பதை ஒருபோதும் சவூதி அனுமதிக்காது' - என்று பிரிட்டனுக்கான சவூதித் தூதர் இளவரசர் துர்க்கி அல்-பைசல் தெரிவித்திருக்கிறார்.

சதாம் கைது குறித்தும் அதற்குப் பின்னால் நடந்த சம்பவங்கள் குறித்தும் இதுவரை கருத்துத் தெரிவிக்காத அமெரிக்கா, வழக்கம்போல் சதாம் வாஷிங்டனுக்குக் கடத்தப்பட்டது குறித்தும், குர்திஷ் மக்களுக்கு தனி நாடு வழங்க உறுதியளித்திருப்பது குறித்தும் எதுவும் தெரிவிக்கவில்லை.

## மற்றொரு ஹெலி ஈராக்கில் வீழ்ந்தது!



அமெரிக்கப் படையினரின் 'அப்பாச்சி'ரக ஹெலி ஒன்று நேற்றுக் காலை பக்தாத்தின் தென் பகுதியில் வீழ்ந்து நொறுங்கியது. ஹெலி வீழ்ந்ததற்கான காரணம் இன்னமும் கண்டறியப்படவில்லை என்று அமெரிக்கப் படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஹெலியின் வால் பகுதியில் திடீரென தீப்பற்றியதை அடுத்து அதனை அவசரமாகத் தரையிறக்க விமானி முயன்றார், எனினும் அது தரையில் வீழ்ந்து நொறுங்கியது. விமானியும் அதிலிருந்த மற்றொருவரும் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

ஹெலி வீழ்ந்து நொறுங்கிய இடத்தை அமெரிக்கப் படையினர் உடனடியாக சுற்றிவளைத்தனர். அப்பகுதியில் தேடுதல்களும் நடந்தன. எனினும் எவரேனும் கைதுசெய்யப்பட்டார்களா? என்பது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. சதாம் ஹுசைனின் ஆதரவு கெரில்லாக்களே ஹெலியை சுட்டு வீழ்த்தியிருக்கலாம் என்று கூறப்படுகிறது. கடந்தவாரம் அமெரிக்கப்படையினரின் கறுப்புப் பருந்து ரக ஹெலி ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.


## கிளிண்டனுக்கு புதிய பதவி!

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி கிளிண்டன் தொலைக காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளர் வேலைக்குச் செல்வரா? அல்லது பிரிட்டனில் பேராசிரியராகப் பணியாற்றுவாரா? என்ற கேள்விகள் எழுந்தன.

இந்த நிலையில், அவருக்கு பிரிட்டனின் இன்னொரு பதவி காத்திருக்கிறது. பிரிட்டனின் கிழக்கு பகுதியில் உள்ள 6 துறைமுகங்களை நிர்வகிக்கும் பொறுப்பை அவரிடம் வழங்க பிரிட்டன் முன்வந்துள்ளது.

1226 ஆம் ஆண்டு இந்தப் பதவியில் பல்வேறு நாட்டு தலைவர்கள் இருந்தனர். கிளிண்டன் இந்தப் பதவியை ஏற்றுக்கொள்வது பற்றி இன்னும் எந்த முடிவும் அறிவிக்கவில்லை. (ம)

## கொலையாளி டாக்டர் தூக்குமாட்டி மரணம்!



பிரிட்டனில் 15 நோயாளிகளை விஷ ஊசி ஏற்றிக்கொன்றார் என்ற குற்றச் சாட்டின்பேரில் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த ஹரோல்ட் ஷிப்மன் நேற்று தனது சிறை அறையில் தூக்குமாட்டிக் கொண்டு இறந்துபோனதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 54 வயதான அவருக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

## அணுசக்தி விண்வெளி ஒத்துழைப்பு: அமெரிக்காவும் இந்தியாவும் முடிவு!

மெச்சிக்கோ,ஜன.14

சமாதானப் பணிகளுக்கான அணுசக்தித்திட்டம், விண்வெளித் திட்டம் மற்றும் உயர் தொழில் நுட்பத்தை பிற நாடுகளுக்கு வழங்குவது ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த அமெரிக்காவும், இந்தியாவும் முடிவு செய்துள்ளன.

இரு நாடுகளும் ஏவுகணைத் துறையில் இணைந்து செயற்படவும், இது குறித்த பேச்சுக்களை நடத்தவும் முடிவு செய்துள்ளன.

மேற்படித் துறைகளில் ஒத்துழைப்புப் பெருகுவதால், இரு நாடுகளுக்குமிடையே வர்த்தகம், நட்புறவு அதிகரிக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி புஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

உலகில் அமைதி நிலவவும், வளம பெருகவும், இரு நாடுகளும் இணைந்து பணியாற்றிவருகின்றன. பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்திலும் கூட்டாகச் செயறபடுகின்றன. பேரழிவு ஆயுதங்கள, அவற்றை செலுத்தும சாதனங்கள் பரவாமல் தடுக்கவும் இரு நாடுகளும் தொடர்ந்தும் பாடுபட்டு வருகின்றன - என்று அந்த அறிக்கையில் புஷ் கூறியிருக்கிறார்.

## முத்தம் கொடுத்து உலக சாதனை



சிலி நாட்டின்தலைநகர் சாண்டியாகோவில் ஒரே நேரத்தில சுமார் ஒன்பதாயிரம் பேர் முத்தம் கொடுத்து உலக சாதனை படைத்தனர்.

சிலி நாட்டினர் எப்போதும் ஏதாவது ஒரு உலக சாதனை செய்து மக்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுப்பவர்கள். தற்போது முத்தம் கொடுத்து உலகசாதனை புரிந்துள்ளனர். தலைநகர வீதிகளில் ஒன்பதாயிரம பேர் குவிந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் 30 வயதுக்கு உட்பட்டவர்களாக இருந்தனர். ஒரே நேரத்தில் இவர்கள் அனைவரும் ஜோடியாகச் சேர்ந்து சுமார் பத்து விநாடிகள் முத்தம் பகிர்ந்து கொண்டனர். கனடாவில் ஆன்டரியோவில் உள்ள சர்னியாவில் கடந்த 2000ஆம் ஆண்டு ஆயிரத்து 588 ஜோடிகள் முத்தம் பகிர்ந்து கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிலி நாட்டினர் சமுதாய பாரம்பரியத்தை விரும்புகின்றவர்கள். அவ்வாறான ஒரு நாட்டில் இப்படி ஒரு புரட்சி நடந்துள்ளது.

கடந்த ஆண்டு இதே சாண்டியாகோ வீதிகளில் சுமார் மூவாயிரம் பேர் கூடி நிர்வாணமாக போட்டோவுக்கு 'போஸ்' கொடுத்தனர் என்பதும் குறிபபிடத்தக்கது. (ம)

## பாக். அமைச்சர் கடத்தப்பட்டார்!

இஸ்லாமாபாத்,ஜன.14

பாகிஸ்தான் அமைச்சர் ஒருவர் ஆப்கானிஸ்தான் எல்லையில் கடத்தப்பட்டிருக்கிறார். கடந்த மூன்று நாள்களுக்கு முன்னர் இவர் கடத்தப்பட்டார் என்று பாகிஸ்தானியப் பொலீஸார் தெரிவித்தனர்.

பாகிஸ்தானின் கிழக்குப் பஞ்சாப் மாகாண அமைச்சரான நைம் உல்லா சஹானியே கடத்தப்பட்டவராவார்.

கார் வாங்குவதற்காக ஆப்கானிஸ்தான் எல்லைப்புற நகரமான மிரான் ராவுக்குச் சென்ற இவரை, தலிபான்கள் கடத்தியிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

இதுகுறித்து பொலீஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில்:- அமைச்சரை தலிபான்கள் கடத்தியிருக்கலாம் அல்லது ஆப்கானியப் படையினர் கைது செய்திருக்கலாம். விரைவில இவரை மீட்டுவிடுவோம் - என்றார்.

## அமெரிக்கர்களுக்கு வீரப்பனால் ஆபத்து?

பெங்களூர்,ஜன.14

மீன் ஆராய்ச்சி செய்வதற்காக வந்துள்ள எட்டு அமெரிக்க ஆய்வாளர்களுக்கு, வீரப்பன் தாக்குதலில் இருந்து பாதுகாப்பு அளிக்க விசேட பொலீஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது .அமெரிக்காவைச் சேர்ந்த எட்டுப்பேர் காவிரி நீர்ப்பாசனப் பகுதியில் உள்ள காளிபோரோ என்ற இடத்தில் மீன்களைப் பற்றிய ஆராய்ச்சி நடத்துவதற்காக கடந்த 5 ஆம் திகதி வந்தனர்.

உலக அரங்கில்

சத்தியமங்கலம், மலைமாதேஸ்வரா பகுதியில் வீரப்பன் தங்கியுள்ளார் என்ற தகவல் கிடைத்திருப்பதால், இந்த எட்டு வெளிநாட்டு ஆய்வாளர்களுக்கும் பாதுகாப்புக் கொடுக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

இவர்களை வீரப்பன் கடத்திச் செல்லக்கூடும் என்ற பயம் இருப்பதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விசேட பொலீஸ் படை நிறுவப்பட்டுள்ளது.

மூன்று துப்பாக்கி ஏந்தியப் பொலீஸார் இவர்களுக்கு பாதுகாப்பு வழங்குகின்றனர். இவர்கள் மூன்று மாதங்கள் தங்கியிருந்து ஆய்வுப்பணியை மேற்கொள்வார்கள். அது வரை இவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும்.

## சார்ஸ் நோய் தீவிரமாகப் பரவலாம் சீனாவுக்கு நிபுணர் குழு எச்சரிக்கை

பீஜிங்,ஜன.14

'சார்ஸ்' நோய் மீண்டும் பரவு வதைத் தடுப்பது குறித்து ஆராய உலக சுகாதார நிபுணர்கள் சீனாவில் ஆய்வு மேற்கொண்டுள்ளனர். அவர்கள் சீனாவுக்கு இது குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சீனாவின் குவாங்டாங் மாகாணத்தில் பரவத்தொடங்கிய 'சார்ஸ்' நோய் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை 30 நாடுகளுக்குப் பரவியது. 8 ஆயிரம் பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டனர். 800 பேர் பலியானார்கள்.

கடந்த ஆண்டு இறுதியில் இந்த நோய் முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்டதாக நம்பப்பட்டது. ஆனால், சீனாவை சேர்ந்த நிருபர் ஒருவருக்கு சமீபத்தில் இந்த நோய் தொற்றியிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இதை தொடர்ந்து அவர் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டார். இவரைத் தொடர்ந்து குவாங்டாங் மாகாணத்தின் ஹோட்டலில் பணிபுரிந்த 20 வயது பெண்ணுக்கு 'சார்ஸ்' தொற்றியிருப்பது கண்டு பிடிக்கப்பட்டு அவரும் தனிமை படுத்தப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

தற்போது, மூன்றாவது நபருக்கு சார்ஸ் நோய் தொற்றியுள்ளது.

புனுகுப் பூனை மூலம்தான் 'சார்ஸ்' நோய் பரப்பக்கூடிய கரோனா வைரஸ் பரவுவதாக டாக்டர்கள் கூறுகின்றனர்.

இதைத் தொடர்ந்து சீனர்களின் விருப்ப உணவான புனுகுப்பூனை கறிச் சுத்தடை விதிக்கப்பட்டுள்ளது. சீனாவில் வளர்க்கப்பட்டு வந்த புனுகுப் பூனைகள் பெருமளவில் தற்போது கொல்லப்பட்டு வருகின்றன.



இந்தோனேஷியத் தலைநகர் மணிலாவிலுள்ள சேரிப்புறமொன்று தீப்பற்றி எரிந்ததில் 4 ஆயிரத்து 500 குடும்பங்கள் தமது வீடுகளை இழந்துள்ளன. தீயில் கருகிய தனது வீட்டிலிருந்து மீட்கக்கூடியவற்றை மீட்டுச்செல்லும் ஏழு வயதுச் சிறுமி இவள்.

# பதவி வெற்றிடம்

## நேரக்கணிப்பாளர்கள்

யாழ். மாவட்டத் தனியார் பஸ் உரிமையாளர்களின் தலைமைச் செயலகத்தின் கீழ் பணியாற்ற நேரக்கணிப்பாளர்கள் தேவை.

விண்ணப்பதாரிகள் தங்களுடைய தகைமைச் சான்றிதழ்களுடன் எதிர்வரும் (20.01.2004) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு எமது பணிமனையில் இடம்பெறும் நேர்முகப்பரீட்சைக்குச் சமுகந்தரவும்.

*கல்வித் தகைமை* : ஜி.சீ.ஈ.(சா)தரம் சித்தி

*வயதெல்லை* : 20 முதல் 40 வரை

(வாகனப போக்குவரத்துச் சம்பந்தமான அனுபவம், அறிவு உள்ளோருக்கு முன்னுரிமை)

(271459) (22-11-18)

*யாழ்.மாவட்டத் தனியார் பஸ் உரிமையாளர்களின் தலைமைச் செயலகம்,*
50/1, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தலைவர்,
பொ.கெங்காதரன்.

# அறிவித்தல்

மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்,
மல்லாகம்,
06-01-2004.

**மல்லாகம் நீதிவான் நீதிமன்ற வழ.இல:-ஏ ஆர் 289/2003**

இம் மன்றில் மேற்கூறிய இலக்க வழக்குடன் தொடர்புடைய மானிப்பாய் பொலீஸாரால் கைப்பற்றப்பட்ட பொருள்கள் நீதிமன்றக் களஞ்சிய அறையில் உள்ளன. இப்பொருள்களுக்கு யார் உரிமையாளர் எனத் தெரியாததால் இப்பொருள்களுக்கு உரிய உரிமையாளர் தகுந்த ஆதாரத்துடன் இம்மன்றில் 27-01-2004 ஆம் திகதி காலை 9.00மணிக்கு சமுகம் தருமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். மேற்கூறப்பட்ட வழக்கு இம்மன்றில் 27-01-2004ஆம் திகதி கூப்பிடப்படும் என்பதை அறியத்தருகிறேன்.

(C/32773)

ம.செல்வரத்தினம்
பதிவாளர்,
மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்,
பிரதி பிஸ்கால்/சமாதான நீதிவான்,
மல்லாகம்.

பொருள்களின் விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | 1அடி 7அங்குலம் உயரமான பித்தளை குத்துவிளக்கு | 03 |
| 2. | 1அடி உயரமான தூக்கும் பித்தளை குத்துவிளக்கு | 01 |
| 3. | 7அங்குலம் உயரமான தூக்கும் தூண்டாமணி விளக்கு பித்தளை குத்து விளக்கு | 02 |
| 4. | குத்துவிளக்கு இணைக்கும் துண்டுகள் (பகுதிகள்) | 11 |
| 5. | குத்துவிளக்கு மேற்பாகம் | 05 |
| 6. | மயில்கள் 4, சிறிது 2, பெரிது 2 | |
| 7. | 2½ அடி விட்டமான விளக்கு, கீழ்ப்பகுதி துண்டுகள் | 02 |
| 8. | கற்பூர ஆரத்தி | 03 |
| 9. | 1அடி அளவான மணி | 01 |

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
23 - 08 - 1944



மறைவு
05 - 01 - 2002

அமரர் **பொன்னுத்துரை துரைராசா**

உம் நிழலில் நாம்
வாழ்வோம் என்றிருந்தோம் - ஆனால்
நீங்களோ எம்முடன் நிழலாக வாழ்கின்றீர்
நாங்கள் வாழும் காலங்கள்
உம் நினைவுகளுடன்....

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(C/32772)(21-14)

துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்

*டச்சு வீதி,*
*கோப்பாய் தெற்கு.*

## ஓட்டோ நொறுக்கப்பட்டது

வலி.வடக்கு,ஜன.14

காலைநேரம் பாண் விநியோகத்தில் ஈடுபட்டிருந்த ஓட்டோ இனம் தெரியாதவர்களினால் அடித்து நொறுக்கப்பட்டது.

மல்லாகம் பகுதியைச் சேர்ந்த பேக்கறி ஒன்றின் வாகனமே உரும்பிராய் சந்திக்கு அண்மையாக உள்ள ஆலயத்திற்கு அருகில் வைத்துத் தாக்கப்பட்டது.

தொழில் ரீதியாக ஏற்பட்ட போட்டியே தாக்குதல் ஏற்படக் காரணம் எனக் கூறப்படுகிறது. (ம-86)

## பயிற்சி நிலையம் இடம்மாற்றம்

தெல்லிப்பழை ஜன.14

தொழிற்றுறை திணைக்களத்தின் கீழ் வலி.தெற்கு பிரதேச செயலகத்தால் இயக்கப்பட்டு வந்த தும்புத் தொழிற் பயிற்சி நிலையம் இணுவில் மஞ்சத்தடி பகுதிக்கு இடம்மாற்றப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி நிலையம் இதுவரை காலமும் சுன்னாகம் மின்சார நிலையத்திற்கு அருகில் இயங்கி வந்தது.

(10-150)

## பட்டமளிப்பு விழா மார்ச்சில்

யாழ்ப்பாணம்,ஜன.14

யாழ். பல்கலைக்கழகத்தின் 23 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா மார்ச் மாதம் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 24ஆம்திகதி இந்தப் பட்டளிப்பு விழா நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தபோதும் தற்போது மார்ச் மாதம் 27ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார். (ம-10)

## தும்பளையில் பாதை திறப்பு

வடமராட்சி,ஜன.14

கடந்த ஏழு வருடங்களாக மூடப்பட்டிருந்த தும்பளை கிழக்கு மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்லும் பாதை தற்போது திறக்கப்பட்டுள்ளது. 1996ஆம் ஆண்டு படையினர் வடமராட்சிப் பகுதியை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்ததைத் தொடர்ந்து தும்பளை கிழக்கு மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாதவாறு அப்பாதைக்குக் குறுக்கே அணைபோடப்பட்டிருந்தது.

இப்பகுதி மீனவர்களுக்கும் இராணுவத் தளபதிக்கும் இடையே அண்மையில் நடைபெற்ற சந்திப்பின்போது இப்பாதையைத் திறந்துவிடுமாறு மீனவர்கள் கோரியிருந்தனர்.

இதனையடுத்து படையினர் புல்டோசர் மூலம் அணையை அகற்றி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பாதையைத் திறந்துவிட்டனர்.

(ம-8-173)

## மதில் அமைப்பு

தெல்லிப்பழை,ஜன.14

2003ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வழங்கிய நிதியின் மூலம் வசாவிளான் குட்டியபுலம் அ.த.க. பாடசாலையில் 150 அடி நீளமான முன்புற மதில் அமைக்கப்பட்டு வருகிறது. (10-150)

### தவறிவிட்டது

*யாழ்ப்பாணத்திற்கும் முகமாலைக்கும் இடையில் திரு. தர்மராசா தயாளனின் மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள்,*

இல.25, சிவன் புதுவீதி,
நல்லூர்.

*என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும்.*

T.P-222 7076

*சன்மானம் வழங்கப்படும்*

(27152)(35-21-14)

# கற்பிட்டியில் கடைகளின் கண்ணாடிகள், தள்ளுவண்டிகள் தாக்கப்பட்டுச் சேதம்!

கற்பிட்டி,ஜன.14

கற்பிட்டியில் கடந்த சனியிரவு இனந்தெரியாத காடையர்களால் கற்பிட்டி பஸாரில் உள்ள கடைகளின் கண்ணாடிகள், சிறுவியாபாரிகளின் தள்ளுவண்டிகள் ஆகியவை தாக்கி சேதமாக்கப்பட்டுள்ளன. கற்பிட்டி பஸாரில் உள்ள முச்சக்கர வண்டிகள நிறுத்துமிடத்தில் முச்சக்கர வண்டிச் சாரதிகள் சங்கத்தினால் அமைக்கப்பட்டிருந்த பெயர்ப்பலகையும் இக் காடையர்கள் உடைத்துள்ளனர்.

இச்செயல்களைக் கண்டித்து நேற்று கற்பிட்டியில் உள்ள முச்சக்கர வண்டி சாரதிகள் சேவைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இச்செயல்களில் ஈடுபட்டோரைக் கைதுசெய்து நீதியான விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும் என்று கற்பிட்டி முச்சக்கர வண்டிச் சாரதிகள் சங்கம் கற்பிட்டிப் பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளது. (ஐ)

# மீளக்குடியமர்வு தொடர்பான கலந்துரையாடல்

கைதடி,ஜன.14

இடம்பெயர்ந்து வேறிடங்களில் தற்போது வசித்துவரும் தனங்களப்பு, மறவன்புலோ மற்றும் கைதடி நாவற்குழி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பொதுமக்களை இலங்கை இராணுவத்தின் வரணிப் பிரதேச இராணுவ அதிகாரி இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு கோயிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்தில் சந்தித்துப் பேசவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அப்பகுதிகளில் மீளக்குடியமர்வது தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளதால் மக்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தல் பலாலி இராணுவத் தளபதி ஊடாக தென்மராட்சிப் பிரதேச செயலருக்குத் தெரியப் படுத்தப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் மீளக்குடியமர மக்களை அனுமதிக்கும்படியும் மறுத்தால் இலங்கையின் 56ஆவது சுதந்திரதினமன்று தென்மராட்சி பிரதேச செயலகம் முன் சாகும்வரையான உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப்போவதாகவும் தெரிவித்து மறவன்புலோ பாரதி சனசமூக நிலையம் கடந்த வாரம் பிரதமருக்கு மகஜர் அனுப்பி வைத்தமை குறிப்பிடத்தக்கது.(ம-75)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### கேள்விப்பத்திரம்

**லொறி வாடகைக்கு அமர்த்தல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு கொழும்பிலுள்ள எமது களஞ்சியத்திலிருந்து பொருள்களைக் கொண்டுவருவதற்கு தகுதியுள்ள லொறி உரிமையாளர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. கூறுவிலைகள் 20அடி நீளமுடைய லொறிகளுக்குப் பொருந்தும். சோதனைச் சாவடிகளில் இறக்கி, ஏற்றும கூலி உட்பட அமைந்திருத்தல் வேண்டும். அதேநேரத்தில் தங்களால் ஒரேநேரத்தில் எத்தனை லொறி வழங்க முடியும் என்பதனையும் குறிப்பிடல் வேண்டும். கூறுவிலைகள் "நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்" என்ற முகவரிக்கு 19-01-2004 முற்பகல் 12.00மணிக்கு முன்னதாக தபால் மூலமாகவோ நேரடியாகவோ அனுப்பிவைக்கப்படல்வேண் டும். கூறுவிலைகளின் இடது பக்க மேல் மூலையில் "UJ/SK/F/T/05/2 லொறி வாடகை" எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

(சி-32774)(21-14)

**பதிவாளர்**
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

## இதயபூர்வமாக வாழ்த்துகின்றோம்



எமது சங்கத்தின் கணக்காளராக (Accountant)வும் பனை, கொடிகாமம் சங்கங்களின் பொதுமுகாமையாளராக (General Manager)வும் கடமையாற்றி தற்போது யாழ்.கூட்டுறவுத் திணைக்களத்தில் கூட்டுறவுப் பரிசோதகராக (Co-Operative Inspector) கடமை புரிந்துவரும்

**உயர்திரு.சி.சபாரத்தினம்**

அவர்கள் நீதி அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்றுள்ளமையையிட்டு அவரை இதயபூர்வமாகப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரது பணி மேன்மேலும் சிறந்து விளங்கவேண்டுமென இறை ஆசிவேண்டி பிரார்த்திக்கின்றோம்.

*பணிப்பாளர்கள், பணியாளர்கள்,*
*அங்கத்தவர்கள்,*
சாவகச்சேரி பனை தென்னைவள,
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

(27154)(35-21-14)

கணனியில் பூரண அறிவைப் பெறவேண்டுமா?

சர்வதேச அங்கீகாரம்!

அரச சான்றிதழ் !!

தொழில் வாய்ப்புக்கான வழிகாட்டல் !!!

மிக விரைவில்... மருதனார்மடத்தில்

eTouch COMPUTER SYSTEM
"The right way to touch IT"

(சி-32729)(36)

உதயன்

## அரசியல் பொறுப்பாளரின் அர்த்தம் நிறைந்த பதில்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான அரசியல் அதிகார இழுபறி காரணமாக இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் சமாதான முயற்சிகள் இழுபறிப்பட்டுப் போய்த் தடைப்பட்டு நிற்கின்றன. இந்த விவகாரம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன என்பதை புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

சர்வதேச செய்தி நிறுவனமான ரோய்ட்டருக்குத் தாம் வழங்கிய விசேட செவ்வியிலேயே புலிகளின் நிலைப்பாடு குறித்து கோடி காட்டியிருக்கின்றார் தமிழ்ச்செல்வன்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான அரசியல் இழுபறி ஈழத்தமிழர்களின் பொறுமையைச் சோதிக்கின்றது என்பதை அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

'தமிழர்களின் பொறுமை எல்லைக்குப் போய்க் கொண்டிருக்கின்றது. நம்பிக்கை குறுகி வருகின்றது. எமது மக்கள் குழப்பமடையும் நிலைமை ஏற்பட்டால் அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்துச் செயற்பட வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்படுவோம்!' - என்பதையும் அவர் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

"எமது மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்துச் செயற்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம்!" - என்ற சாரப்பட எச்சரிப்பதன் மூலம் தமிழ்ச்செல்வன் என்ன விடயத்தைக் கூறமுற்படுகின்றார்? தாங்கள் மீண்டும் யுத்தத்திற்குப் போவோம் என்பதையே அவர் சூசகமாக இப்படிக் குறிப்பிடுகின்றாரோ என்ற கேள்வி எழுவதும் தவிர்க்க முடியாததாகிறது. ஆனால், இக் கேள்விக்கும் அவர் பதில் சொல்லியிருக்கின்றார்.

"தற்போதைய யுத்த நிறுத்தத்தை எக்காரணம் கொண்டும் நாங்களாக மீறமாட்டோம். யுத்தத்தை மீளத் தொடங்கியவர்கள் புலிகள் அல்லர் என்ற நிலைப்பாட்டை நிலை நாட்டுவதில் நாம் மிக உறுதியாக உள்ளோம்" - என்று திட்டவட்டமாகக் கூறியதன் மூலம் தாங்களாக யுத்தத்துக்குப் போகமாட்டார்கள் என்பதை மிகமிக வெட்டவெளிச்சமாக - தெட்டத் தெளிவாக - வெளிப்படுத்தியிருக்கின்றார் அவர்.

அப்படியானால், தமிழர்களின் பொறுமை எல்லைமீறும் போது - அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்துச் செயற்பட வேண்டிய பொறுப்பு தங்களுக்கு உள்ளது என்று கூறும் - விடுதலைப் புலிகள், அத்தகைய சந்தர்ப்பத்தில் என்ன நடவடிக்கையைத்தான் எடுக்கப் போகின்றார்கள்? அது குறித்து தமிழ்ச்செல்வன் கூறுவது என்ன?

"மக்கள் பொறுமையை இழக்கும்போது என்ன நேரும் என்பதை இப்போதே கூறுவது புத்தசாலித்தனமானதல்ல" - என்று இராஜதந்திரத்தோடு பதில் தந்திருக்கின்றார் தமிழ்ச்செல்வன்.

ஆனால், அதேசமயம், "மீண்டும் ஆயுதங்களைத் தூக்கும் ஒரு நிலைக்குத் தமிழர்களைத் தள்ளிவிடாமல் இருப்பதை அரசும் அதன் இராணுவ இயந்திரமும் உறுதிப்படுத்துவதில்தான் எல்லாமே தங்கியுள்ளது" - என்பதைத் தெரிவிக்கவும் அவர் தவறவில்லை.

ஆயுதங்களைக் கையில் வைத்திருக்கும் விடுதலைப்புலிகள் அதற்கு வேலை கொடுக்காமல், ஓய்வுகொடுத்திருக்கின்றார்கள். அதற்குக் காரணம் யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏற்பாடுகள் புலிகள் இயக்கத்தின் கையைக் கட்டிப்போட்டிருப்பதாகும்.

இந்த யுத்தநிறுத்த ஏற்பாடுகள் அடங்கிய புரிந்துணர்வு உடன்படிக்கையில் இலங்கை அரசுத் தரப்பில் ஒப்பமிட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அந்தப் பொறுப்பிலிருந்து விலகிவிட்டார்.

இலங்கை அரசுப் பக்கத்தில் யாருமே பொறுப்பேற்காத நிலையில் அநாதரவாக உள்ள யுத்தநிறுத்த உடன்பாட்டை மதித்துத்தான் புலிகள் தமது ஆயுதங்களையும் போர் நடவடிக்கைகளையும் கட்டிப் போட்டிருக்கின்றார்கள்.

எந்த நேரமும் எதுவும் நேரக்கூடிய ஆபத்துநிறைந்த விவகாரம் போர்நிறுத்த நடவடிக்கை. எதுவும், எவ் வேளையிலும் திடீரென நேரலாம். அப்படி நேர்கையில் இருதரப்பிலும் அர்ப்பணிப்போடு - பொறுப்பேற்று - விடயத்தைக் கையாளும் தலைமைகள் தேவை; அவசியம்; கட்டாயம் வேண்டும்.

அரசுப் பக்கத்தில் அவ்வாறு விடயத்தைக் கையாளும் பொறுப்பு - பாதுகாப்பு அமைச்சைப் பிடுங்கி எடுத்துத் தம்வசம் வைத்திருப்பதால் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வசமே போய்ச் சேர்ந்திருக்கின்றது. ஆனாலும், போர்நிறுத்த உடன்பாட்டுச் சிக்கல்களைப் புலிகளோடு சம அந்தஸ்தில் இருந்து கையாளக்கூடிய நிலையும் பொறுப்பும், நிதானமும், கட்டுப்பாடும், தீர்வுகாணும் தகைமையும் அவருக்கு உண்டா என்பது கேள்விக்கும் சந்தேகத்துக்கும் உரியதே.

இதை மனதில் வைத்தே "மீண்டும் ஆயுதங்களைத் தூக்கும் ஒரு நிலைக்குத் தமிழர்களைத் தள்ளிவிடாமல் இருப்பதை அரசும், அதன் இராணுவ இயந்திரமும் உறுதிப்படுத்துவதில்தான் எல்லாமே தங்கியுள்ளது" - என்று தமிழ்ச்செல்வன் கூறியிருக்கின்றார் எனக் கருதவேண்டியுள்ளது.

மிகுந்த இராஜதந்திரத்தோடு, நுணுக்கமானவகையில் தமது நிலைப்பாட்டைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் புலப்படுத்தியிருக்கின்றார். அதில் பொதிந்துள்ள ஆழமான கருத்துக்களின் அடிப்படையை சிங்களத் தலைமை புரிந்துகொள்ளுமா என்பதே கேள்வி.

புரிந்துகொண்டால் அமைதி முயற்சிகள் தொடர வாய்ப்பு ஏற்படும். சமாதானத் தீர்வு சாத்தியமாகும். புரிந்து கொள்ளத் தவறினால் போர் மூளுவது உறுதியாகும்.

# (கு)டாநாட்டில் கடந்த ஆண்டில் மட்டும் 54 பேர் மிதிவெடியால் பாதிக்கப்பட்டுள்ளனர்

## ஊனமுற்றோர் நிறுவன அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.14

குடாநாட்டில் கடந்த ஆண்டில் மட்டும் 54 பேர் மிதிவெடியினால் [illegible]து அவயவங்களை இழந்து பாதிக்கப்பட்டுள்ளனர் என [illegible] யாழ்ப்பாணம் ஊனமுற்றோர் புனர்வாழ்வு நிறுவன உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களில் 90 வீதமானோர் 30 வயதுக்குட்பட்டவர்கள் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யுத்தம் ஓய்வடைந்து இரண்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் மிதிவெடியின் தாக்கம் குடாநாட்டில் தொடர்ந்துகொண்டே வருகிறது.

இதன்படி, கடந்த ஆண்டு பாதிக்கப்பட்ட 54 பேரில் 32 பேர் 30 வயதுக்குட்பட்டவர்கள் எனப் புள்ளிவிவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. பாடசாலை மாணவர்கள் 14 பேரும் இதில் அடங்குகின்றனர். கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் காரை நகரில் 6 பாடசாலை மாணவர்கள் ஒரு மிதிவெடிச் சம்பவத்தில் போது பாதிப்புக்குள்ளானமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இம் மிதிவெடிப் பாதிப்புக்கள தென்மராட்சிப் பகுதிகளிலேயே அதிகளவில் இடம்பெற்றுள்ளன. சரசாலை, மட்டுவில், சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் 18 பேர் மிதிவெடிப் பாதிப்புக்குள்ளாகி ஊனமுற்றுள்ளனர்.

தற்போது குடியமர்ந்துவரும் மக்களும், வறுமை காரணமாக விறகுவெட்டி விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டு வருபவர்களுமே மிதிவெடியால் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர் - என்றார்.

அத்துடன், புதிய ஆண்டில் 10 நாள்களுக்குள் ஒருவர் மிதி வெடிப் பாதிப்புக்குள்ளாகியுள்ளார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-8-6)

# அரச ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் அந்தஸ்து முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் வேண்டும்

வலிகாமம் தெற்கு,ஜன.14

முன்பள்ளிகளில் கடமையாற்றிவரும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுவரும் ஊதியம் அதிகரிக்கப்படவேண்டும். அரச சேவை ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் அந்தஸ்து, ஊதியம், முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் கிடைக்கவேண்டும். முன்பள்ளி ஆசிரியர்கள் அதிகரித்த ஊதியத்தைப் பெறுவதற்கு உள்ளூராட்சித் திணைக்களம், கல்வித் திணைக்களம், தமிழர் புனர்வாழ்வுக கழகம் என்பன இணைந்து கூட்டாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற முன்பள்ளி ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வில் உரையாற்றிய பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.இராசையா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வலிகாமம் தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசத்தினால ஏற்பாடுசெய்யப்பட்ட இந்த இந்நிகழ்வில் வலிகாமம் தெற்குப் பிரதேசத்தைச் சேர்ந்த 85 இற்கும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் இ.அரிகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கே.இராசையா கலந்துகொண்டார். முன்பள்ளி ஆசிரியர்களைப் பாராட்டி உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

வலிகாமம் தெற்கில் கடமையாற்றிவரும் முன்பள்ளி ஆசிரியர்களில் சுமார் 60 பேர் பிரதேசசபையால் வழங்கப்படும் 1000 ரூபாவை ஊதியமாகப் பெறுகிறார்கள். இது அவர்களின் சேவைக்குப் போதுமானதல்ல. அவர்களின் ஊதியத்தை அதிகரிக்க வழிசெய்யவேண்டும். தொண்டர் ஆசிரியர்கள், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் தமது நிரந்தர நியமனத்துக்காகப் போராடி வெற்றிபெற்றுள்ளார்கள். முன்பள்ளி ஆசிரியர்களும் தமது ஊதியம், நிரந்தர நியமனம் போன்றவற்றிற்காக முயற்சிக்க வேண்டும் - என்று கூறினார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ். மாவட்ட திட்டப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் உரையாற்றுகையில் -

கல்வித் திணைக்களம் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வேண்டிய பயிற்சிகளை மட்டும் வழங்கிவருகிறது. பிரதேசசபை சிறு தொகையை ஊதியமாக வழங்கிவருகிறது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்பள்ளிகளை ஒன்றிணைத்து ஒரு பொதுவான கல்வி முறையை ஒழுங்கமைத்துள்ளது.

எந்தவொரு நிறுவனமும் பொறுப்பேற்று உதவிகள் வழங்காத பல முன்பள்ளிகள் செயற்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் ஒரே கட்டமைப்பின்கீழ் கொண்டுவரவேண்டும். எந்தவித ஊதியமும் பெறாத முன்பள்ளி ஆசிரியர்களின் விவரம் திரட்டப்படுகின்றது. இவர்களுக்கு இவ்வாண்டு பெற்றோரின் பங்களிப்புடன் சிறுதொகையாவது ஊதியம் வழங்க தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

சகல முன்பள்ளிகளும் ஒரே கல்வித்திட்டத்தைப் பின்பற்றக் கூடியதான பாடத்திட்டம் அமைக்கப்பட்டு வருகின்றது. இதன் முதற்கட்டமாக முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் எதிர்காலத்தில் பாடத்திட்டம் அமுல்படுத்தப்படும் - என்றார்.

வலி.தெற்கு பிரதேச செயலர் திருமதி ச.சொக்கலிங்க[illegible] சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சி.செல்வவிநா[illegible]கம், பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க[illegible] கொத்தணித் தலைவர் க.மெய்யழகன் உட்படப் பலர் உ[illegible] நிகழ்த்தினர்.

முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்ற[illegible] (ஐ-15[illegible]

# நுகர்வுப் பண்டங்களின் விவரங்கள் பொதிகளில் பொறிக்கப்படவேண்டும்

## நுகர்வோர் அதிகாரசபை வலியுறுத்து

கொழும்பு,ஜன.14

ஒருசில நுகர்வுப் பண்டங்களின் விவரங்கள், அவற்றின் பொதிகள் மீதோ, பொட்டலங்கள் மீதோ பொறிக்கப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தக் கட்டுப்பாடு 34 பொருள்களுக்குச் செல்லுபடியாவதாக அதிகாரசபை வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றில் ஆகக்கூடுதலான சில்லறை விலை, உற்பத்தித் தொகுதி, காலாவதியாகும் திகதி என்பன குறிப்பிடப்படவேண்டும்.

உற்பத்தியாளர்களும், வர்த்தகர்களும் இதனை உறுதிசெய்ய வேண்டும் என அறிவித்தலில் கோரப்பட்டுள்ளது. இந்தப் பொருள்களில் மா, சவர்க்காரம், சிறுவர்களுக்கான உற்பத்திகள், பால், போத்தலில் அடைக்கப்பட்ட குடி தண்ணீர் என்பனவும் அடங்கும். (ஐ-8-9)

**நாளை**

தை 01
வியாழக்கிழமை
(15.01.2004)
திதி : அட்டமி
மாலை 6.26 வரை
நட்சத்திரம்: சித்திரை
மாலை 6.23 வரை
தைப்பொங்கல் திருநாள்
சுபநேரம்: 8.04-9.34
ராகுகாலம்: 3.04-3.34
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

நல்ல இதயம் இறைவனின் சரணாலயம்.

# பொதுமக்களுக்கு இடையூறாக வெடிகொளுத்துவோர் மீது நடவடிக்[கை]

## கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்சரிக்[கை]

யாழ்ப்பாணம்,ஜன.[illegible]

பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையி[ல்] பட்டாசு கொளுத்தும் இளைஞர்களுக்கு எதிராக நடவடிக்[கை] எடுக்கப்படும் என்று கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகா[ரி] அருணகிரி ஸ்ரீசெல்வம் எச்சரித்துள்ளார்.

கடந்தகாலங்களில் பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறாகவும் வீடுகளுக்குள்ளும் வெடிகளைக் கொளுத்தி எறியு[ம்] சம்பவங்கள் அதிகம் இடம்பெற்றுள்ளன. இதனை அடுத்[தே] பொலீஸார் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளன[ர்].

பொதுமக்கள் மீதும், பெண்கள் மீதும் வெடிகொளுத்[தி] எறிபவர்களுக்கு எதிராகக் கோப்பாய் பொலீஸ் நிலையத்து[க்கு] உட்பட பகுதிகளில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று [எச்]சரித்தார் பொறுப்பதிகாரி செல்வம்.

இத்தகைய சேஷ்டைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக [நட]வடிக்கை எடுப்பதற்கு வசதியாக அவர்கள் பற்றிய தகவல்களை[த்] தமக்குத் தந்துதவுமாறும் அவர் பொதுமக்களிடம் கேட்டுள்ளா[ர்].

# தச்சுத் தொழிலிலும் இனி பெண்கள் திறமை காட்டுவ[ர்]

பெண்கள் தற்போது எல்லாத் துறைகளிலும் கால்பதி[க்க] ஆரம்பித்துவிட்டனர். அந்தவகையில், தச்சுத்தொழிலிலு[ம்] பெண்கள் தற்போது ஆர்வம் காட்டுகின்றனர். பளைப்பிரதே[சத்]தில் முதற்றடவையாக 28 பெண்கள் தச்சுத்தொழில் பயிற்சி[யை] மேற்கொண்டுள்ளனர்.

மார்ச் மாதமளவில் அவர்கள் தமது பயிற்சியை முடி[த்து] வெளியேறவுள்ளனர். இவர்களுக்கான ஆறுமாதகாலப் பயிற்சி[க]ள பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பழைய கட்[டடத்]துக்கு அருகில் உள்ள பயிற்சி நிலையத்தில் நடைபெற்று வரு[கின்]றன. இந்தப் பயிற்சிகளுக்கு கிளிநொச்சி மாவட்ட அரச [செய]லகம் அனுசரணை வழங்குகின்றது.

விதவைகள், யுவதிகள் உட்பட 28 பெண்களும் இரு அ[illegible]களும் இப்பயிற்சி நிலையத்தில் தற்போது பயிற்சிபெ[ற்று] வருகின்றனர். பயிற்சியை முடித்து வெளியேறியதும் இவர்[கள்] தச்சுத்தொழிலில் ஈடுபடுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

வடமாகாணத்தில் தச்சுத்தொழிலாளர்களுக்குப் பெ[ரும்] பற்றாக்குறை நிலவும் இந்த நேரத்தில், பெண்கள் இந்[தத்] துறையில் ஈடுபடுவது பெரிதும் வரவேற்கத்தக்கது என்[று] தெரிவிக்கப்படுகிறது. ([illegible]

# பொருளாதாரத்தை மேம்படுத்த சமூக அபிவிருத்தி மன்றம் கடனுத[வி]

யாழ்ப்பாணம், ஜ[ன.14]

யாழ்.சமூக அபிவிருத்தி மன்றம் தனது சேமிப்புக்க[ழக] உறுப்பினர்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்த 4 லட்[சத்து] 50 ஆயிரம் ரூபாவை குறுங்காலக் கடனாக வழங்கியுள்[ளது].

கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, விவசாயம் மற்றும் சிறு[கைத்] தொழில் முயற்சியாளர்கள் ஆகியோருக்கு சுமார் 30 ஆ[யிரம்] ரூபா முதல் 50 ஆயிரம் ரூபா வரை இக்கடன் குறைந்த [வட்டி] வீதத்தில் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் நல்லூர், உடுவில் மற்றும் கோ[illegible] ஆகிய பிரதேச செயலர் பிரிவிலுள்ள 21 குடும்பங்க[ளுக்கு] இந்தக் குறுங்காலக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

தேசிய நம்பிக்கை நிதியம் 10 லட்சம் ரூபா நிதியி[னை] சமூக அபிவிருத்தி மன்றத்திற்குக் கடனாக வழங்க முன்[வந்]துள்ளது. இந்த நிதியின் மூலம் சிறந்த ஊக்கமுள்ள குடு[ம்ப]த் தலைவர்களுக்கு வருமானத்தை மேம்படுத்தும் வகையில் க[டன்]கள் வழங்கப்படவுள்ளதென யாழ். சமூக அபிவிருத்தி மன்[றத்] தலைவர் திருமதி என்.ஜெகதீஸன் தெரிவித்துள்ளார்.(ம-[illegible]

தைப்பொங்கல் தினத்தை குதூகலத்துடன்
குதூகலிக்க சம்பியன் பட்டாசுகள் பல
அவற்றில் சில 404 ROLLவெடி, பூந்திரி,
ஈர்க்குவாணம் மற்றும் பல
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

மொத்தக் கொள்வனவிற்கு விசேட விலைக்கழிவு

உடனே முந்துங்கள்:

*சிவா நறுமணப்பூங்கா*

*இல. 288, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம. T.P.-222 2567*

# சேவை நலன் பாராட்டு

## திரு. வேலுப்பிள்ளை கைலைநாதன்

(முதன்மை ஆசிரியர், விவசாயம் - யாழ்.கல்வி வலயம்)



**தொழில் தகைமை**

- விவசாய டிப்ளோமா (குண்டகசாலை)
- விவசாய விஷேட பயிற்சி (பலாலி)

**ஆசிரியப் பணி**

- யா/முத்துத்தம்பி ம.வி.
- யா/மத்திய கல்லூரி
- வ/வவுனியா ம.வி.
- வ/முஸ்லீம் ம.வி.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் முதன்மை ஆசிரியராக எம்மோடு இணைந்து 35 வருடங்கள் ஆசிரியராகப் பணியாற்றி, அகவை அறுபது நிறைவில் ஓய்வுபெறும் திரு.வே.கைலைநாதன அவர்கள் இன்னும் பல உன்னதங்கள் பெற உளமார வாழ்த்துகின்றோம்.

– *முதன்மை ஆசிரியர் கழகம்.*

யாழ்.கல்வி வலயம்.

(27128)(21-14-19)

## மத்தியஸ்தர் பரீட்சை ஒத்திவைப்பு

குருநகர்,ஜன.14

உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களைத் தெரிவுசெய்வதற்காக யாழ்பபாணத்தில் கடந்த 11ஆம் திகதி நடைபெறவிருந்த பரீட்சை பிற்போடபபட்டுள்ளதெனவும் பரீட்சை நடைபெறும் திகதி பின்ன் அறிவிக்கப்படுமஎனவும் யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் கப்டன் டி.ஏ. எம். குணசிங்கம் அறிவித்துள்ளார்.

அகில இலங்கை உதைபந்தாட்டச சம்மேளனத்தினால் நடத்தப்படும் இபபரீட்சை கொழும்பில் உள்ளவர்களுக்கு கடந்த 11ஆம் திகதி நடைபெற்றதாகவும் பரீட்சையை நடத்துபவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகைதராததாலேயே இப்பரீட்சை நடைபெறவில்லையெனவும் இப்பரீட்சைக்கு யாழ்பபாணத்திலிருந்து சுமார் 60 பேர்வரை தோற்றவுள்ளனர் எனவும் அவா தெரிவித்தார் (ம-8-51)

## சீருடை விண்ணப்பத்தை விரைவில் ஒப்படைக்க கோரிக்கை

தென்மராட்சி,ஜன.14

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் ஒன்றில் இணைந்துள்ள மாணவர்களுக்கு சீருடை வழங்குவதற்கான விண்ணப்பப்படிவஙகளை இதுவரை ஒப்படைக்காதவர்கள பாடசாலை அதிபரின் சிபாரிசுடன் படிவத்தினை தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் உடனடியாகக் கையளிக்குமாறு பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.(8-117)

## யாழ்.பல்கலை பட்டதாரிகளுக்கு

யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றுத் தொழில்வாய்ப்புத்தேடும் பட்டதாரிகள் யாழ்.பல்கலைக்கழகத்தில் உள்ள 'தொழில் வழிகாட்டுநர்' அலுவலகத்தில் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

நேரில் சமுகமளித்து பதிவுகளை மேற்கொள்ள முடியாதவர்கள் தபால மூலம் 'இயக்குநர், தொழில்வழிகாட்டுநர் அலுவலகம், யாழ்.பல்கலைக்கழகம்' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கலாம் என்று பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார். (ம-ரி)



சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சித்தங்கேணி அருள்மிகு

## ஸ்ரீநாக கன்னியம்பாள் ஆலய வருடாந்த

# தைப்பொங்கற் பெருவிழா

*நாககன்னியம்பாள் மெய்யடியார்களே!*

நிகழும் சுபானு வருடத் தைத்திங்கள் முதலாம் நாள் (15-01-2004) வியாழக்கிழமை முற்பகல் சித்திரை நட்சத்திர சுபமுகூர்த்தத்தில் அபிஷேகம் 8.00மணி அளவில் ஆரம்பித்து உற்சவ மூர்த்தி அலங்காரத்தோடு வசந்த மண்டப தீப, தூப உபசாரத்தோடு நாககன்னியம்பாள் திருவீதி எழுந்தருளி ஒரு மணியளவில

## தீ மிதிப்பு நடைபெறும்

*குறிப்பு:* சுபானு வருடத்தின் எட்டாம் நாள் (22-01-2004) வியாழக்கிழமை தீமிதிப்பு நடைபெற்று அக்கினி குண்டத்தின் மீது அபிஷேக பூசைகள் நடைபெறும். அதற்குரிய பால், தயிர், விபூதி, கற்பூரம், மலர்கள், தேங்காய் எண்ணெய் முதலியவற்றைக் கொடுத்து அபிஷேக ஆராதனைகளை நிகழ்த்தி நாககன்னி அம்பாளின் அருளாசிகளைப் பெற்றுக்கொள்க.

**ஆலயஞானகுரு இந்திரன் ஐயாவும் ஆலயத் தொண்டர் சபையும்**

"அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்"

**SUBRA (14) கல்வி நிறுவனம்**

(21-26-14-19) சித்தன்கேணி. (C/32759)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1957 |  | 2002 |
| 01 | | 01 |
| 31 | | 05 |

அமரர் **ஐயாத்துரை கனகசபாபதி**

(செல்வநாயகம்)

திதி: 14.01.2004

உயிரிலும் மேலான அப்பாவே!
வசந்தம் வீசும் வாழ்வுக்கு
விடை கொடுத்து- நீவிர்
எம்மைப் பிரிந்த நாள் முதலாய்
நீந்துகின்றோம் துயரில் மூழ்கி
உம்மை எண்ணி நெடுநாளாய்
உறங்காத நினைவலையின்
சரணடுகள் நகர்ந்திடுவோ!

மனைவி,
பிள்ளைகள்.

சிறுப்பிட்டி மேற்கு. நீர்வேலி. (27115)(21-14-19)

# பிறவுண்ஸ் தரும்

# பொங்கல் வெகுமதிகள்!



## பொங்கல் திருநாளில் இரட்டிப்பு மகிழ்ச்சி!

29" தொலைக்காட்சிக்கு
ரூ.10,000/-வரை விலைக்கழிவு!

குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம் ஆகியவற்றையும்
நம்பமுடியாத விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்!!

ஏனைய மின் உபகரணங்களுக்கு 10% வரையிலான விலைக்கழிவு

| பொருள் | கழிவு |
|---|---|
| 14" தொலைக்காட்சி | ரூ. 3,000/- |
| 20" தொலைக்காட்சி | ரூ. 5,000/- |
| 21" தொலைக்காட்சி | ரூ. 6,000/- |
| 29" தொலைக்காட்சி | ரூ.10,000/- |
| SJ19 குளிர்சாதனப்பெட்டி | ரூ.2,000/- |
| BJ22 குளிர்சாதனப்பெட்டி | ரூ.4,200/- |
| SJK20U குளிர்சாதனப்பெட்டி | ரூ.3,000/- |
| SJK21 குளிர்சாதனப்பெட்டி | ரூ.4,000/- |
| SJK25 குளிர்சாதனப்பெட்டி | ரூ.4,000/- |
| ES429 சலவை இயந்திரம் | ரூ.3,000/- |
| ES60W சலவை இயந்திரம் | ரூ.3,000/- |
| ES550 சலவை இயந்திரம் | ரூ.4,000/- |
| ES3300 சலவை இயந்திரம் | ரூ.2,500/- |

**இச்சலுகை பின்வரும் பிறவுண்ஸ் காட்சியறைகளில் மட்டுமே வழங்கப்படும்**

42/1, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பே: 065-222 6385
89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021-222 5150
99, வடக்கு கடற்கரை வீதி (NC Road), திருகோணமலை. தொ.பே: 026-222 0005
08, முதலாம் குறுக்குத் தெரு, வவுனியா. தொ.பே: 024-222 0081
20, கண்டி வீதி, நுவரெலியா. தொ.பே: 052-223 5590

SHARP be sharp · ELBA · Moulinex · OLYMPUS · Sunrest · Cornell

TNT Grafix

# மழை இல்லாததால் குடாநாட்டு வயல்களில் மாடுகள் மேயும் நிலை

வலி.வடக்கு,ஜன.14

இம்முறை மாரி பொய்த்துப் போனதில் நெல்வயல்கள் அழிந்துபோகும் நிலையை அடைந்துள்ளன. பயிர்கள காய்ந்து கருகிப் போவதை விட அவை கால்நடைகளுக்காவது உணவாகட்டும் என்ற ரீதியில் பல விவசாயிகள் தமது வயல்களில் மாடுகளை மேயவிட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

அடுத்தமாதம் வரைக்கும் மழை பெய்வதற்கான அறிகுறிகள்இல்லை என்று வானிலை அவதான நிலையம் கூறிவிட்டதனால் தமது பயிர்கள் காப்பாற்றப்படும் என்ற நம்பிக்கை விவசாயிகளிடத்தில் அற்றுப்போய்விட்டது. சில் கிணறுகளில் இருந்து பம்பிகள் மூலம் தண்ணீர் இறைத்து நெற்பயிர்களைக் காப்பாற்றுவதற்குப் பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டு வருகின்றனர்.

அருகிலுள்ள கிணற்றில் இருந்து தனது வயலுக்கு நீர் இறைத்துக் கொண்டிருந்த விவசாயி ஒருவர் தெரிவித்ததாவது:-

"இனியாவது மழை வரும் என்ற நம்பிக்கையில்தான் நீர் இறைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். வானம் ஏமாற்றினால் பெரும்நட்டமடைய வேண்டிவரும்" - என்றார்.

குடாநாட்டின் கிராமப் புறங்கள் பலவற்றிலும் மழைவேண்டி கொடும்பாவி இழுக்கும் நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன.

மழை முழுமையாகப் பொய்த்துப் போனால் விவசாயிகள் பெரும்நஷ்டமடைய நேரிடும் என்று தெரிவிக்கப் படுகின்றது.

(ம-86)

# போதையில் மகனது விரலை கடித்துத் துப்பினார் தந்தை

கைதடி, ஜன.14

மதுபோதையில் இருந்த குடும்பஸ்தர் ஒருவர் தனது மகனின் கைவிரலைக் கடித்துத் துப்பினார். கைதடிப் பகுதியில் கடந்த ஞாயிறன்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

போதையில் வீட்டுக்கு வந்த குடும்பஸ்தர் மனைவியுடன் வாக்குவாதப்பட்டு விட்டு நஞ்சருந்தித் தற்கொலை செய்ய முயன்றுள்ளார். அவரது 18வயது மகன் அதனைத் தடுத்துள்ளார். ஆத்திரத்தில் மகனது கைவிரலைக் கடித்துள்ளார். வலது கைவிரல் துண்டாடப்பட்டு விட்டது. அவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ம-75)

# யாழ்.பல்கலைக்கழக வணிக பீடத்துக்கான மாணவர் அனுமதியிலும் இம்முறை வெட்டு

## புதுமுக மாணவரைப் பதிய வேண்டாம் என ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.14

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கை நெறிக்கான அனுமதியிலும் இம்முறை பாரிய வெட்டு வீழ்ந்துள்ளது. 150பேர் கற்க வசதி இருந்தும் 10 மணாவர்கள் மட்டுமே இத்துறையில் அனுமதி பெற்றுள்ளனர்.

இது குறித்து யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியம் தனது கவலையை வெளிப்படுத்தி உள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக மாணவர்களை அனுமதிக்க ஆவன செய்யுமாறும் ஒன்றியம் பல்கலைக்கழகத் துணைவேந்தர், நாடாளு மன்ற உறுப்பினர்கள் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

போதுமான மாணவர்கள் அனுமதிக்கப்படும் வரை தமது பீடத்துக்கான புதிய மாணவர்கள் பதிவுகளை மேற்கொள்ள வேண்டாம் என்றும் ஒன்றியம் கேட்டுள்ளது.

கடந்த காலங்களில் வணிகத் துறைக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இம்முறை மாணவர் அனுமதியில் தமிழ் மாவட்டங்களில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த காலங்களுடன் (1993/94) ஒப்பிடும் போது யாழ்.மாவட்டத்துக்கான கோட்டா ரீதியான ஒதுக்கீட்டில் குறைந்தது 23மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இம்முறை மாவட்டக் கோட்டாவில் 6 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த வெட்டு ஏன் என்பது குறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விளக்கமளிக்கவில்லை. ஏற்கனவே யாழ். மாவட்டத்திலிருந்து பொறியியல் துறைக்கான மாணவர் அனுமதியிலும பெரும் வெட்டு வீழ்ந்துள்ளது. இதனால் கொந்தளித்துள்ள மாணவர்களை வணிகத்துறையிலும் மேற்கொளளப்பட்டுள்ள வெட்டு மேலும் ஆத்திரமடைய வைத்துள்ளது.

"எமது பல்கலைக்கழக வணிகத் துறையானது சுமார் 150 மாணவர்களிற்குக் கற்பிப்பதற்கான வசதிகளைக கொண்டுள்ளது எனினும், 10 மாணவர்கள் மட்டுமே அதற்கு அனுமதி பெற்றுள்ளனர். இது ஒரு நகைப்புக்கிடமான விடயமாகும். மேற்சுட்டிக்காட்டப்பட்ட 150 மாணவர்கள் என்ற இயலளவானது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் வழங்கப்படும் மாணவர் அனுமதிக்கான முதற்படிவத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது" என்று வணிகபீட மாணவர் ஒன்றியம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.(ம)

## பொலீஸ் பாதுகாப்பு யாழ்.நகரில் பலப்படுத்தப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,ஜன.14

யாழ்.நகரப் பகுதியில் தற்போது பொலீஸாரின் பாதுகாப்புப் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

பண்டிகைக்காலத்தை முன்னிட்டு நகரில் காணப்படும் சனநெருக்கடியை அடுத்து விபத்துக்களைத் தவிர்க்கும் பொருட்டு - சந்திக்கு சந்தி பொலீஸார் நிறுத்தப்பட்டுள்ளனர். வீதி ஒழுங்குப் பணிகளில் அவர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

ஒழுங்கற்ற பயணங்களை மேற்கொள்ளும் வாகனங்களைத் தடுத்து சாரதிக்கு வாகனம் செலுத்த வேண்டிய தகைமைகள் உள்ளனவா என்பதை அவர்கள் பரிசோதிக்கின்றனர்.

(ம-15)

## கூட்டுறவுச் சங்கத்தில் பொங்கல் பொருள்கள்

அரியாலை,ஜன.14

பொங்கல் தினத்தை முன்னிட்டு யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அதன் கிளைகள் ஊடாக பாவனையாளர்களுக்கு பொங்கல் பொருள்களை விநியோகித்து வருகின்றது.

பயறு, சர்க்கரை, பச்சை அரிசி, பிளம்ஸ், கஜு என்பன கிளைகள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

(ஐ.17)

# உழவர் திருநாளைக் கொண்டாட வன்னியில் விரிவான ஏற்பாடுகள்

கிளிநொச்சி,ஜன.14

உழவர் திருநாளாம் தைப்பொங்கல் தினத்தை வன்னிப்பிரதேசத்தில் வெகுசிறப்புடன் கொண்டாடுவதற்கு உழவர்கள், வேளாண் அமைப்புக்கள், வேளாண் நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் என்பன விரிவான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

இதன்படி, நாளை வியாழக்கிழமை காலை 9மணிக்கு கிளிநொச்சியில் உள்ள வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவன முன்றிலில் தைப்பொங்கல் விழா நடைபெறவுள்ளது.

சுடரேற்றல், தேசியக் கொடியேற்றல், அகவணக்கம் ஆகியனவற்றைத தொடர்ந்து பொங்கல் விழா ஆரம்பமாகும் இந்நிகழ்வில் உரைகள் மற்றும் சிறப்பு நிகழ்வுகள் என்பன இடம் பெறவுள்ளன.

நிகழ்வுகள் யாவற்றையும் சர்வதேச வானொலிகளுடன் இணைந்து தமிழீழ வானொலி நேரடியாக ஒலிபரப்புச் செய்யவுள்ளது.

வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனம், சோழன் நிறுவனம், தமிழீழ வானொலி, நிதித்துறை, வணிக நிறுவனங்கள், தமிழீழ வைப்பகம் ஆகியன விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

(எ-10)

## 59 வருடங்களின் பின்னர்

# யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு அமைச்சு தளபாடங்கள் வழங்கியது!

யாழ்ப்பாணம்,ஜன.14

மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திறமைகளை வளர்த்துக் கொள்ளும் திட்டத்தின் கீழ் யாழ்.தொழில்நுட்பக்கல்லூரிக்கு ஒரு தொகுதி தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன. 59 வருடங்களின் பின்னர் அமைச்சு ஒன்றினால் யாழ்தொழில் நுட்பக்கல்லூரிக்கு தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளமை இதுவே முதற்றடவை.


சுமார் ஒருலட்சம் பெறுமதியான இத்தளபாடங்களை மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சர் கபீர்காசீம் சார்பாக அவருடைய பிரதிநிதிகள் யாழ்தொழில நுட்பக்கல்லூரி அதிபர் என்யோகராஜனிடம் நேற்றுமுன்தினம் கையளித்தனர்.

அலுவலக மேசைகள், கதிரைகள், கண்ணாடி அலுமாரி, காட்சிப்பொருள கள் வைக்கக்கூடிய றாக்கைகள், விளம்பரப்பலகை, கணனிமேசைகள, தொலைக்காட்சி நிறுத்தி என்பன தளபாடத்தொகுதியில் அடங்கியுள்ளன.

சுமார் 59வருட இடைவெளிக்குப பின்னர் இத்தளபாடங்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

(ம-5-6)

# சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் புதிய கட்டடம் இன்று திறப்பு



சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் 27 வருடங்கள் அதிபராகச் சேவையாற்றிய செல்வி பேஜ் அவர்களின் ஞாபகார்த்த கட்டடத்திறப்பு விழா இன்று புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

குருநாகல் மறை மாவட்ட பேராயரும், அங்கிலிக்கன் திருச்சபை பாடசாலைகளின் ஆளுநர் சபைத் தலைவருமான அதி. வணக்கத்திற்குரிய குமார இலங்கசிங்க இக்கட்டடத்தினைத திறந்து வைப்பார்.

1904 ஆம் ஆண்டு கடல் கடந்து இலங்கை வந்து கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்த செல்வி பேஜ் அம்மையாரின் நினைவுச் சின்னமாக இது திகழ்கின்றது.

பிரார்த்தனை அறை, கேட்போர் கூடம், கணனி வகுப்பறைகள் என்பனவற்றை இக்கட்டடம் உள்ளடக்கியுள்ளது. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள பழைய மாணவிகள் இக்கட்டடத்தின் கட்டுமாணப் பணிக்குப் பெருமளவில் நிதியுதவி வழங்கியுள்ளனர்.

புதிய கட்டடத்தின் ஒரு தோற்றத்தையே படத்தில் காண்கிறீர்கள்.

(ஐ)

# கேணல் கிட்டுவின் நினைவாக குடாநாட்டில் சிரமதானங்கள்

யாழ்ப்பாணம், ஜன.14

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டுவின் 11ஆவது நினைவு தினம் எதிர்வரும் 16ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுவதையொட்டிக் குடாநாட்டின் பல இடங்களிலும் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

நேற்று முன்தினம் காலை யாழ். நல்லூர் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற சிரமதான நிகழ்வில் தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர்கள், யாழ் ப.நோ.கூ. சங்கப் பணியாளர்கள், சர்வோதயம் அமைப்பின் ஊழியர்கள், மாநகர சபை ஊழியர்கள் ஆகியோா கலந்துகொண்டனர்.

போதனா வைத்தியசாலை வளவில் இருந்த குப்பை, கூளங்கள், புல்கள் என்பன சுத்தம் செய்யப்பட்டு அகற்றப்பட்டன.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சிரமதான நிகழ்வில் வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் பங்குபற்றினார்கள். காலை 9மணி முதல் பிற்பகல் 2 மணிவரை இச் சிரமதானம் இடம்பெற்றது.

தென்மராட்சி சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலும் நேற்று முன்தினம் சிரமதானப் பணி இடம் பெற்றது.

ஆஸ்பத்திரியின் சேதமடைந்த கட்டடப் பகுதியில் உள்ள செடி, கொடிகள் வெட்டி அழிக்கப்பட்டன.

(ம-8-15-30-117-173)

## துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ்

# கடற்றொழில் திணைக்களத்திற்கு ரூ.5 கோடி 40 லட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஜன.14

குடாநாட்டின் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 5 கோடி 40 லட்சம் ரூபா நிதி கடற்றொழில் நீரியல்வளத திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது எனத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மீனவர்களுக்கான பயிற்சிக் கல்லூரி அமைத்தல், இறங்குதுறைகளை ஆழப்படுத்துதல், படகுகள் மற்றும் கடல் உணவுகளைச் சந்தைப்படுத்துவதற்கான வாகனவசதிகளை ஏற்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளுக்கென இந்தநிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ் செயலகத்தில் இந்த வருடத்துககுரிய துரித அபிவிருத்தித் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இதன்போதே இந்த நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

(ம-8-7)

# வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார் என சிறுமி ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டவர் என்று கூறப்படும் 16 வயதுச் சிறுமி ஒருவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்நகரை அண்டிய பகுதியைச் சேர்ந்த இந்தச் சிறுமியின் பேர்த்தியார் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் -

அவரைப் பராமரிப்பதற்காக இந்தச சிறுமி அவருடன் தங்கியிருந்தார் என்றும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் கடந்த ஞாயிறு இரவு 9.45 மணியளவில் ஆஸ்பத்திரிக்கு வந்துள்ளார். அவரது நிலைமையைக் கண்ட பாதுகாப்பு ஊழியர்கள் அவரை மருத்துவர்களிடம் ஒப்படைததனர். அத்துடன், இதுகுறித்து பொலீஸாரிடமும் தகவல் தெரிவித்தனர்.

இதனையடுத்து பொலீஸார் சிறுமியை விசாரித்தனர்.

கடந்த ஞாயிறு மாலை தான் ஆஸ்பத்திரியில் இருந்து வெளியே சென்றார் என்றும் - ஆஸ்பத்திரியில் பழக்கமான ஒருவர் அப்போது தன்னைக் கூட்டிச் சென்று கோட்டைப் பகுதியில் வைத்து வல்லுறவுக்கு உட்படுத்தினார் என்றும் - பின்னர் மேலும மூவர் பாலியல் இம்சைக்குத் தன்னை உள்ளாக்கினர் என்றும் -

அதன் பிறகு சைக்கிளில் ஏற்றி வந்து ஆஸ்பத்திரி வாசலில் இறக்கி விட்ட போதே பாதுகாப்பு ஊழியர்கள் தன்னை விசாரித்தனர் என்றும -

விசாரணையின் போது சிறுமி தெரிவித்தார்.

பின்னர் சிறுமி மருத்துவ சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். ஒப்பந்த அடிப்படையில் வைத்தியசாலைச் சுத்திகரிப்புப் பணியை மேற்கொள்வோரில் இருவர் இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களது சகாக்கள் இருவரையும் பொலீஸார் தேடிவருகின்றனர்.(ஒ-6-15-139)

## ஆரம்ப கணனி ஆசிரியர் தேவை

அரியாலை சனசமூக நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்குக் கற்பிக்க ஆரம்ப கணனி ஆசிரியர் தேவை. தகுதியானோர் நேரில் வரவும்.

தொடர்பு : திரு.சோ.சிவசுந்தரம் (தலைவர்)
சரஸ்வதி சனசமூக நிலையம்,
272, ஆனந்தன்வடலி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
021 222 6338

(27091)(32-11-16)







## நீங்காத நினைவில் நான்காம் ஆண்டு அஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 01 | 14 |
| 09 | 01 |
| 1974 | 2000 |

**முதலி பகீரதன்**
(பருத்தித்துறை நகராட்சி மன்றம்)

வீதி வரைந்த பாதையில் பயணம்
தொடர்ந்ததனால் கதியிழந்த
நாம் கலங்கியே நிற்கின்றோம்.

*புலோலி மேற்கு,*
*பருத்தித்துறை.*

(27105)(32-11-16) - குடும்பத்தினர்.

## திட்ட முன்மொழிவுகள் நல்லூரில் தயாரிப்பு

இந்த ஆண்டில் நடைமுறைப் படுத்தப்பட்ட துரித அபிவிருத்தித் திடடம் தொடர்பான முன்மொழிவுகள் நல்லூர் பிரதேச செயலகத்தில் கடந்த 5ஆம் திகதி நடைபெற்றன.

பிரதேச செயலாளர் திருமதி எஸ்.தெய்வேந்திரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இத்திட்ட முன்மொழிவுகள் அங்கீகரிக்கப் பட்டதாக கூறப்பட்டது. (எ-6)

## ஊனமுற்றோர் சங்க ஆண்டுவிழா

ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 14 ஆம் ஆண்டு நிறைவு விழா அடுத்த மாதம் 4ஆம் திகதி திருநெல்வேலியில் அமைந்துள்ள அதன் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

ஊனமுற்றவர்களை உள்ளடக்கி நடைபெறும் இந்த நிகழ்வில் முச்சக்கர வண்டி, இருசக்கர வண்டி, நடன நிகழ்வு மற்றும் வினோதஉடைப் போட்டி என்பன நடைபெறவுள்ளன. இதேவேளை, ஆண்டு நிறைவை முனனிட்டு எதிர்வரும் 26ஆம் திகதி முதல் 30ஆம் திகதிவரை ஊனமுற்றவர்களுக்கான மாலை கட்டல், கோலம போடுதல், பண்ணிசை, ஓவியம் வரைதல், கதிரை பின்னுதல் மற்றும் தலையலங்காரம் செய்தல் ஆகிய போட்டிகள் இடம்பெறும். (எ-6)

## கூட்டுறவுக்கிளையை மீண்டும் இயக்க ஏற்பாடு

தென்மராட்சிகிழக்கு பல நோ.கூட்டுறவுச் சங்கத்தின் தவசிகுளம் கிளை மீண்டும் திறக்கப்படவுள்ளது.

கடந்த தென்மராட்சி இராணுவ நடவடிக்கையின் போது மிருசுவில் பகுதியில் இயங்கிவந்த தவசிகுளம் மற்றும மிருசுவில் நவஜீவனம் ஆகிய இரு கிளைகளும் மூடப்பட்டிருந்தன.

இவற்றுள், தவசிக்குளம் கிளையை மீண்டும் திறக்க நடவடிக்கையெடுக்குமாறு மேற்படி கிளையின் நிர்வாகக் குழு யாழ்.அரசஅதிபரைக் கோரியிருந்தது.

இதனையடுத்து தவசிகுளம் கிளையை மீண்டும் திறக்குமாறு யாழ். அரச அதிபர் கூட்டுறவுத்திணைக்களத்தினூடாக தென்மராட்சிகிழக்கு பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்திற்கு பணிபுரை விடுத்துள்ளார். (எ-15)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை செல்வி க.ஒளிவளர்மதி அவர்களின் பாசமிகு பேரனார்

**நாகரத்தினம் பொன்னுத்துரை**

அவர்களின் மறைவினால் அவரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு ஏற்பட்டுள்ள துயரில் நாமும் பங்கு கொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தி அடையவும் பிரார்த்திக்கின்றோம்.

*யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை* (27093)(32-11-16)

அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

## நினைவு கூருகின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அலுவலராகக் கடமையாற்றும்
செல்வி கா.சத்தியதர்சினி
அவர்களின் அன்புத் தந்தையார்

**முத்து காசிப்பிள்ளை**

அவர்கள் 15.12.2003 இல் இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் இல்லத்தில் இன்று (14.01.2004) புதன்கிழமை நடைபெறுகின்ற அவரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையில் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லூர் பிரதேச செயலரும் அலுவலர்களும் நலன்புரிச் சங்கம்.
(27094)(32-11-16)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் கடந்த 25 வருட காலமாகப் பிரான்ஸ் மற்றும் மெல்போர்ன், ஆஸ்திரேலியாவில் வசித்தவருமான கனகசபாபதி சண்முகசுந்தரம் அவர்கள் 15.12.2003 அன்று மல்லாகத்தில் சிவபதமடைந்தார். இவர் காலஞ்சென்ற வழக்கறிஞர் கனகசபாபதி அவர்களதும் திருமதி பொன்னுப்பிள்ளை அவர்களதும் அன்பு மகனும் கோபாலகிருஷ்ணன் அவர்களின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.12.2003 இல் மல்லாகத்தில் நடைபெற்றன.

*ஸ்கூல் லேன்,*
*மல்லாகம்*

- திரு.க. கோபாலகிருஷ்ணன்.
(27120)(32-11-16)


# முழங்காவில் பிரதேசத்தில்

## 14 சனவரி 2004 முதல்
## உங்கள் அருகில் உங்கள் தெரிவில்
## உங்களுக்காகவே

உங்கள் நம்பிக்கையின் சின்னம்

தமிழீழ வைப்பகம்
BANK OF TAMILEELAM

**வைப்பு வசதிகள்**
- தேட்ட வைப்புக்கள்
- நிலையான வைப்புக்கள்

# தமிழீழ வைப்பகம்

**கடன் வசதிகள்**
- தங்க அடைவுக் கடன் சேவை
- ஏனைய கடன் வசதிகள்
- மேலும் பலவகை வைப்பகப் பணிகள்

## வாருங்கள் உங்கள் வளமான வாழ்வுக்கு வழிகாட்டுகின்றோம்

# தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

(C-32757)(32-18-16)

# வெகுஜன தொடர்பு சாதனங்களால் எமது அடிவேரான பண்பாடு சிதைகிறது

வெகுஜனத் தொடர்பு சாதனங்கள பழமைகளை அப்புறப்படுத்திவிட்டு புதியவைகளை அறிமுகப்படுத்துவதனால் எமது அடிவேராகவுள்ள பண்பாடு சிதைவுறுகின்றது.

- இவ்வாறு தெரிவித்தார் எழுத்தாளர் ரி.இராஜகோபால் (செம்பியின் செல்வன்). யாழ். அகவொளி குடும்ப வளத்துணை நிலையத்தில் நடைபெற்ற போயா தினக் கருத்தரங்கில் 'குடும்ப உறவில் தொடர்பூடகங்களின செல்வாக்கு' என்ற தலைப்பில் அவர் கருத்துரையாற்றினார். அவரது உரை இங்கு தொகுத்துத் தரப்படுகிறது.

வெகுஜனத் தொடர்பு சாதனங்கள தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் உருவானவையாகும் எந்தத் தளத்திலிருந்து- அதாவது எந்த நிலையிலிருந்து- அதனைத் தரிசிக்கிறோம் என்பது முக்கியமாகும். நவீன கண்டுபிடிப்புகள் எவ்வாறு எம்மை வழிநடத்துகின்றன என்பது முக்கியம். எந்தக் கண்டுபிடிப்பு அல்லது எந்தச் சிந்தனையாக இருந்தாலும் சரி அது மனிதனை நோக்கியே செல்கின்றது. எல்லா வடிவமும் மனிதனை நோக்கி வரும்போது அது மனிதனது எண்ணத்தில்- சிந்தனையில்- ஒரு தாக்கத்தை - மாற்றத்தை - ஏற்படுத்துகின்றது. இதனை மனிதன் நல்வழிப்படுத்தினால் அவனது மனது சிந்தனை நல்நிலைக்குச செல்கிறது. தீயவழியில் சிந்தித்தால் அவனது சிந்தனை தீய நிலைக்குச் செல்கிறது. இதனால், அவனது வாழ்க்கை போராட்டக் களமாக மாற்றமடைகிறது. அதில் எது மேல்நோக்கி நிற்கிறது என்பதே முக்கியமாகும்.

**முழுநிலாநாள் கருத்தரங்குத் தொகுப்பு**

குடும்பம் என்று சொன்னால் பல்கலைக்கழகம் என்றும், தெய்வீக ஸ்தலம் என்றும் எம் முன்னோர்கள் கூறி வைத்துள்ளார்கள். அவ்வாறான புனிதமான குடும்ப உறவில் இன்று தொடர்பூடகங்கள் எந்தவகையில் நன்மை பயக்கின்றன, எந்தவகையில் தீமை பயக்கின்றன என்று பார்த்தால் நிச்சயம் நன்மை ஓரளவு இருந்தாலும் தீமையே பெருமளவு காணப்படுகிறது.

இன்று விஞ்ஞானத்தின் விந்தை விண்ணைமுட்டும் அளவில் பரிணமித்துள்ளது. அதனால், தொடர்பூடகங்களின் செல்வாக்கு எம்மவர் மத்தியில பரந்துவிட்டது. பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி, இன்ரநெற் போன்ற ஊடகங்கள் முன்னொரு காலத்தில் எமது சூழலிலிருந்து சற்று அப்பால் தள்ளியிருந்தன. ஆனால், இன்று எல்லாமே எம் வீட்டுக்குள்ளே குவிந்து கிடக்கின்றன.

அதனால் நாம் அதனுள்ளே முடங்கிவிட்டோம் என்றுதான் சொல்ல வேண்டும்.

எங்கள் மத்தியில் அறிவென்பது இன்று எல்லோரிடமும் குவிந்து நிறைந்து உள்ளது. அதனை நாங்கள் பயன்படுத்தும் முறையில்தான் சற்று வித்தியாசம் இருக்கிறது. அதே போல்தான் ஊடகங்களும் வெவ்வேறான சிந்தனைகளையும் அறிவுகளையும் தன்னுள்ளே வைத்திருக்கின்றன. மக்கள் மத்தியில் ஒவ்வொரு ஊடகமும் வெவ்வேறான கருத்துக்களைத் தாங்கி மக்களைச் சென்றடைவதால் மக்கள் மனதில் ஒரு சர்ச்சை எழுகிறது.

தொடர்பூடகங்களை ஒரு கல்லாக நோக்குவோமானால் இந்தத் தொடர்பூடகங்கள் மக்களை நோக்கி எறியக்கூடியதாக இருக்க வேண்டும். எறியும் கல்லு பிரயோசனமான முறையில் அமையவேண்டும் ஆனால் இன்று மக்கள் மத்தியில் இந்தக்கல்லு தேவையற்ற அநாவசியமற்று ஊடகங்களூடாக தவறான வழியில் எறியப்படுகினறது.

### பத்திரிகை


பத்திரிகை என்ற ஊடகம் இன்று எல்லா குடும்பத்தினதும் ஊடகமாகத் திகழ்கின்ற விடயம் யாவரும் அறிந்ததே.

அந்தவகையில், இன்று பல வகையான பத்திரிகைகள் ஒவ்வொரு குடும்பங்களைச் சென்றடைகின்றன. இதில் என்ன விநோதம் என்றால் பத்திரிகைகளில் குடும்பத்தினர் வாசிபதற்கு அறிவு சம்பந்தமான விடயங்கள் இல்லை.

பத்திரிகைகளின் பக்கங்கள் விரசமானவையாகவே அதிகளவில் காணப்படுகின்றன. குறிப்பாக, வாரப் பத்திரிகைகள் மக்கள் மத்தியில் விரசத்தையும் விசனத்தையும் உண்டு பண்ணக்கூடியதான சினிமா நடிகை, நடிகர்களின் கவர்ச்சிப் படங்களைப் பிரசுரிக்கின்றன. இதனைப் பார்க்கின்ற ஒரு பிள்ளை அந்தப் பத்திரிகையில் இருக்கின்ற நாயகிபோல் அல்லது நாயகன் போல் தன்னை மாற்றிக் கொள்ள முயற்சிக்கிறது. இது உண்மை; யதார்த்தம்.

### தொலைக்காட்சி

தொலைக்காட்சிப் பெட்டி என்பது இன்று கிராமங்களிலும் சரி,



நகரங்களிலும் சரி பெருமளவு குவிந்துள்ளது. வீட்டுக்கு வீடு காணப்படுகிறது. இது ஒரு விஞ்ஞானத்தில் வளர்ச்சிப்படியென்றாலும் அதனுடைய விளைவுதான் பாரதூரமானது. எல்லோரும் தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்னே இன்று முடங்கிக் கிடக்கிறார்களே. அதனுடைய விளைவு பற்றி யாரும் சிந்திப்பதில்லை.

எனக்கு மிகவும் நெருங்கிய நணபர் ஒருவர் நான் கல்வி அதிகாரி யென்றபடியால் என்னிடம் வந்து ஒரு முறைப்பாட்டைச் சொன்னார். "சேர், யாழ்ப்பாணத்தில் இருக்கிற பிரபல ஆண்கள் கல்லூரியொன்றில் உயர்தரம் படிக்கிற மாணவர்கள் சிலர் தினமும் 11 மணிக்கு மதில் பாய்ந்து வெளியே போகிறார்கள். அவர்கள் எல்லோரும் ஒரு வீட்டுக்குப் போய் தொலைக்காட்சியில் ஏதோ ஓர் அலைவரிசையில் 11 மணிக்கு 'ஆபாசப் படம் பார்க்கிறார்கள். இவர்களைக் கட்டுப்படுத்த முடியாதா?" என்று மிகவும் கவலையோடு என்னிடம் கேட்டார். அதனை நான் விசாரித்தபோது, தொலைக்காட்சியில் ஆபாசப் படம் பார்க்கிற வீடு ஒரு பேராசிரியரின் வீடு. பேராசிரியரின் மகனும் சேர்ந்துதான் அதனைப் பார்த்தார் என நான் அறிந்தேன்.

சரி, இந்தத் தொலைக்காட்சிப் பெட்டியை ஏன் ஒரு குடும்பத்தினர் வாங்கி வைக்கிறார்கள்? உலகத்தில் நடக்கும் அறிவு ரீதியான சிந்தனைகளையும் அன்றாடம் நடக்கும் விடயங்களையும் பார்க்கத்தான் அவற்றை வாங்கி வைக்கிறார்கள். இதில் ஒரு வித நன்மையிருந்தாலும் மறுபக்கத்தில் பாரியதொரு தாக்கம் ஏற்படுகிறது.

இதுமட்டுமல்ல, விளம்பரங்களில் கூட காட்சிகளைப் பார்ப்போமானால் நிச்சயம் அதிலும் ஒரு விரசம் இருககத்தான் செய்கிறது. இவ்வாறு பல்வகையான காட்சிகள், மனிதனை தவறான சிந்தனைக்குத் தூண்டுகிறது.

### இன்ரநெற்

சர்வதேச வலைப்பின்னல் என்று சொல்லிவிட்டு நாம் இன்ரநெற்றை ஓர் உயர்ந்த இடத்தில் வைத்துப் பார்க்கிறோம். ஆனால், அதனுடைய மறு தாக்கத்தைப் பார்ப்பதில்லை. அதிலும் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளைச் சிந்திப்பதில்லை. ஒரு காதலன், காதலி இன்ரநெற்றில் காதலிக்கிறார்கள். இவ்வாறு காதலிக்கும்போது ஒருவருடைய குணம் எவ்வாறானது, மொழி எவ்வாறானது, அவருடைய இயல்பு எவ்வாறானது என்று தெரியாமல் காதலித்துத்திருமணம் புரிந்ததன் பின்னர்தான் அவர்களுடைய இனம், மொழி, கலாசாரம், பண்பு, நடத்தை என்பன வெளிவருகின்றன. இதனால் இங்கு பிரச்சினை எழுகின்றது. இதுவும் ஒரு குடும்பச் சிக்கலாகவே அமைகின்றன.

### செல்போன்

இன்று உலகம் சுருங்கிவிட்டது என்று சொல்லி நாமெல்லோரும் காற சட்டைப்பைகளில் செல்போனைக் கொண்டு செல்கின்றோம். அதிலும் இந்த இளைஞர்களிடம் செல்போன் இருந்தால் காணும் வீதிகளில் நின்று கதைத்தபடி நிற்பார்கள். அப்படி என்ன தான் கதைக்கிறார்கள் என்று பார்த்தால் பக்கத்து ஊரில் இருக்கிற சிததப்பாவோட அல்லது சித்தியோட கதைத்துக் கொண்டு நிற்பார்கள். இதனால் நேரம் வீணடிக்கப்படுகிறது. அத்துடன், வீணான பொருளாதார இழப்பும் ஏற்படுகிறது.

எனவே, தொடர்பூடகங்கள் இன்று விஞ்ஞான ரீதியாக சுலபமாக விரிந்து கிடந்தாலும் அதன் விளைவுகளும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. தெரிந்தோ, தெரியாமலோ வெளிநாட்டில் நடக்கும் ரகசியங்களையும், ரகசியமாக நடக்கக்கூடிய விடயங்களையும் நாங்கள் தொடர்பூடகங்களினூடாகப் பார்க்கும்போது நாம் எம்மை அதுவாகப் பாவிக்க முனைகின்றோம். இதனால், கலாசார பிறழ்வுகள், சமூகச் சீரழிவுகள், குடும்பச்சிதைவுகள் என்பன எம்முன்னே புரையோடி வருகின்றன.

தவறான சிந்தனைகளும் தவறான எண்ணங்களுக்கு கருவாக இந்தக் குடும்ப உறவில் தொடர்பூடகங்கள் உதவுகின்றன என்பது மறுக்கமுடியாத உண்மைகள்.

**தொகுப்பு: க.ரசிகன்**

விளம்பரங்களினாலும், நவீன கண்டுபிடிப்புக்களினாலும் எமது பெண்கள் தமது வேலைகளை இலகுபடுத்தினாலும் அவர்களது நேரம் தேவையற்ற வழிகளில் செலவாகிறது. அவர்களின் உடற்பருமன் அதிகரித்து நோய் உருவாவதையும் நாம் உணரக்கூடியதாக உள்ளது. நாம் எல்லோரும் பிறருக்குத்தான் என்ற எண்ணம் எமது உள்ளத்திலேயே உள்ளது. ஒப்பனையில் மிதப்பவர்களே சினிமா நடிகர், நடிகைகள் என்ற உண்மையை எமது பெண்கள் உணரவேண்டும்.

நவீன கண்டுபிடிப்புகளினால் பெண்கள் சமயலறை வேலைகளைத தமது கணவன்மார் செய்தால் என்ன? நான் ஏன் அவருக்குச் சமைத்துப் போடவேண்டும் என்று எண்ண ஆரம்பித்து விடுகிறார்கள். இதனால், கணவன்- மனைவி உறவில் விரிசல்கள் உருவாகிவருகின்றன. பிள்ளைகளும வீட்டில் பெரும்பாலான நேரங்களை தொலைக்காட்சி பார்ப்பதிலும் கணனிக்கு முன் இருப்பதிலும் செலவிடுகிறார்கள். இதனால் பிள்ளைகள் பெற்றோர்களை மதிக்கும் நிலை குறைந்து வருகிறது. இதனால், எமது சமுதாயம் சீரழிந்து வருகிறது. (ம-51)

# இளைஞர் சமாதான மாநாடு மீண்டும் சிங்கப்பூரில்

இலங்கையில் முரண்பாட்டைத் தீர்ப்பதில் இளைஞர் சமுதாயத்தினின் பங்களிப்பை மேம்படுத்தும் நோக்கில் 'இலங்கை மீதான பார்வை-2004' என்ற மாநாடு இரண்டாவது தடவையாக சிங்கப்பூரில் நடைபெறவுள்ளது.

சிங்கப்பூரைத் தளமாகக் கொண்டு இயங்கும் சமாதானத்திற்கான முன்னெடுப்பு(Initiative for peace) என்ற அமைப்பு இந்த மாநாட்டை ஏறபாடு செய்துள்ளது. 20 முதல்26ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்தமாநாடு நடைபெற உள்ளது. இவ்வமைப்பின் தொழிற்பாட்டுத் தளமாக இயங்கும் தென்கிழக்காசியாவுககான ஐக்கிய உலகக் கல்லூரியில் (United Cuorled College of Suth East Asia) மாநாடு நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

16 முதல் 19 வயதுக்குட்பட்ட இளைஞர்கள், யுவதிகள் இந்த மாநாட்டில் பங்குபற்ற விண்ணப்பிக்க முடியும்.

ஐந்து குறிக்கோள்களை அடையும் நோக்கில் இந்த மாநாடு கூட்டப்படுகின்றது.

☆ இளைஞர் சமுதாயத்தினரால் தலைமைத்துவ வகிபாகங்களை ஏறறுக் கொள்ள முடியும் என்பதோடு அரசியல் மற்றும் சமூகம்சார்ந்த நெருககடிகள் மற்றும் பிரச்சினைகளிற்குத் தீர்வுகாண்பதில் அவர்கள் பங்களிக்க முடியும் என்பதனை உணர்தல்.

☆ மாநாட்டுப் பங்குபற்றுநர்களுக்கிடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பல்.

☆ இலங்கை முரண்பாட்டிற்கான காரணங்களையும் அதனைத் தீப்பதறகான முயற்சியில் தடங்கலகளுக்கான காரணங்களையும் விமர்சன ரீதியில் ஆராய்தல்.

☆ முரண்பாட்டுத்தீர்வு, தப்பபிப்பிராயங்களைக் களைதல் என்பவற்றை அடையும் பொருட்டு புதிய, நடைமுறைச் சாத்தியமுள்ள வழிமுறைகளைக் கண்டறிதல்; முன்னெடுத்தல்.

☆ 'இலங்கை மீதான பார்வை-2003' (Focus on Sri Lanka-2003) மாநாடடில் உருவாக்கம் பெற்ற 'சமாதானத்திற்கான குரல்' எனும் இளைஞர்களால் முன்னெடுக்கப்படும் அமைப்பைப் பலப்படுத்தலும் அபிவிருத்தி செய்தலும்.

இம் மாநாட்டில் பங்குபற்றுவதற்கு ஆங்கில மொழியில் உயர் பரிச்சயம அவசியமான முன்நிபந்தனையாக மாநாட்டு ஏற்பாட்டாளர்களால் கருதப்படாதபோதிலும், மாநாட்டு நிகழ்ச்சிகள ஆங்கிலத்தில் நடத்தப்பட இருப்பதால இம்மொழியில் அடிப்படை புலமை விரும்பத்தக்கது.

அதேவேளை, இயலுமானவரை மொழி பெயர்ப்பு வசதிகளும் செய்து கொடுக்கப்படும். மாநாட்டில் பங்கு பற்றுவதற்காக நிதியுதவி பெறவிரும்புவோர் அதற்கான பிரத்தியேக படிவங்களை பூர்த்திசெய்து அதற்காக விண்ணப்பிக்கமுடியும்.

விரிவுரைகள், கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள், குழுக்கலந்துரையாடல்கள் என்பன மாநாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளீடுகளாக அமையும். இவை புலமையாளர்கள், சமாதானச் செயற்பாட்டாளர்கள் (peace Actirists) மற்றும் துறைசார் புலமையாளர்கள் மற்றும் பல்வேறு தேசங்களிலிருந்தும் வருகைதரவிருக்கும் மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோரால் நெறிப்படுத்தப்படும்.

நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வெளிப்புறச் செயற்பாடுகள், கலாசார மற்றும் சமூக நிகழ்வுகள் மாநாட்டின நிகழ்ச்சித்திட்டத்திற்கு மெருகூட்டும் விதத்தில் உள்ளடக்கப்படவுள்ளன. முரண்பாடு பற்றிக் கலந்துரையாடப்படும் விடயம் பரபுக்களாக இலங்கை வரலாற்றின் பன்முகத்தீட்டல்கள், முரணபாட்டின் வளர்ச்சித்தீர்வில் ஊடகங்களின் பங்கு, உள்ளகரீதியாக இடம்பெயர்ந்தோரின் அவலநிலை என்பன உள்ளடக்கப்படுவதோடு முரண்பாட்டு முகாமைத்துவம், இளைஞர் தலைமைத்துவம் மற்றும் வினைத்திறனான சமூக ஒருங்கிணைப்பு என்பனவும் மாநாட்டில் விவாதிக்கப்படும். மாநாடடில் பங்குபற்றிய பின்னர் 'சமாதானதற்கான குரல்' அமைப்பில் இணைந்து அதனது செயற்பாடுகளில் பங்கெடுபதற்கு விண்ணப்பதாரிகளின் ஆர்வமும், ஈடுபாடு அவர்களுக்குள்ள நேரமும அவர்களது விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான பிரதான தகுதி விதியாக அமையப்பெறும்

- குருபரன்-
*இணைப்பாளர்*
*'சமாதானத்தின் குரல்', யாழ். பிராந்தியம்*

இம்மாநாட்டில் பங்குபற்றுவதற்கான விண்ணப்பப்படிவங்களையும் மேலதிக தகவல்களையும் யாழ்ப் பாணம் இந்துக்கல்லூரியில் அமைந்துள்ள 'சமாதானத்திற்கான குரல்' அமைப்பின் யாழ்பிராந்திய நிலையத்தில் பாடசாலை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் சமாதானத்திற்கான முன்னெடுப்பின் இணையத் தளமான www. initiative for peace. org என்ற இணைய முகவரிககுச் சென்றும் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். மாநாட்டு ஏற்பாட்டாளர்களால் பாடசாலைகளுக்கு இவ் விண்ணப்படிவங்கள் நேரடியாக அனுப்பிவைக்கபட்டுள்ளன எனவும் அறியத்தருகின்றோம். விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைப்பதற்கான இறுதிநாள் 16.02.2004 ஆகும். ✽

'சமாதான்த்திற்கான குரல்' (voice for peace) என்ற அமைப்பானது கடந்த வருடம் ஜூன் மாதம் சிங்கப்பூரில், சமாதானத்திற்கான முன்னெடுப்பு (Initiative for peace) என்ற அமைப்பினால் நடத்தப்பட்ட 'இலங்கை மீதான பார்வை - 2003' (focus on SriLanka - 2003) என்ற மாநாட்டில் பங்குபற்றிய 37 இளைஞர்கள், யுவதிகளினால் உருவாக்கப்பட்டது. இவ் அமைப்பானது ஐந்து பிராந்திய நிலையங்களினூடாக இயங்கி வருகின்றது.

இவ் ஐந்து பிராந்திய நிலையங்களினதும் இணைப்பாளர்களினால் இவ்வமைப்பு தேசிய மட்டத்தில் ஒருங்கிணைக்கப்படுகின்றது. பின்வரும் சமாதான முன்னெடுப்புக்களை இவ்வமைப்பு இணங்கண்டு செயற்பட்டு வருகின்றது.

☆ உள்ளகவாரியாக இடம்பெயர்ந்த மக்கள், குறிப்பாக, இளைஞர்கள் மற்றும் சிறார்களது வாழ்க்கைத்தர நிலை உயர்ச்சிக்கு உதவுதல்.

☆ போரால் பாதிப்புற்ற சிறார்களது புனர்வாழ்வு முயற்சிகளில் ஒரு பங்காளியாகவிருத்தல்.

☆ மொழி மற்றும் கலாசார ஊடாட்டத்தினூடாக தப்பபிப்பிராயங்களைக் களைதலும், புரிந்துணர்வை ஏற்படுத்தலும்.

அவ்வகையில், முதலாவது குறிப்பிட்ட விடயம் சார்பாக இவ்வமைப்பின் யாழ். பிராந்திய நிலையம் செயற்றிட்டம் ஒன்றைத் தீட்டி முன்னெடுத்து வருகின்றது. உள்ளகவாரியாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வசிக்கும் இளைஞர்களது கல்வி அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இச்செயற்றிட்டம் தொடர்பாகவும் அமைப்பின் ஏனைய செயற்றிட்டங்கள் தொடர்பாகவும் ஆதரவையும் நிதியையும் திரட்டும் முகமாக ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களோடு அமைப்பு தொடர்புகளையும் ஏற்படுத்தி வருகின்றது.

கடந்த டிசெம்பர் மாதம் சமாதானத்திற்கான முன்னெடுப்பு அமைப்பின் இணைப்பாளர் தனது இலங்கை வருகையின்போது யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்து பிராந்திய நிலையத்தின் செயற்பாடுகளை ஆராய்ந்ததோடு பல்வேறு பிரமுகர்களையும் சந்தித்து அமைப்பின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

## கௌரவிப்பு

காரைநகர்,ஜன.14

காரைநகர் பாடசாலைகளைச் சேர்ந்த மூன்று மாணவிகள் கடந்த வாரம் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெற்ற மணிவாசகர் விழாவின் போது தங்கப்பதக்கம் சூட்டி பாராட்டப்பட்டனர்.

மணிவாசகர் சபையினால் காரைநகர் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட சமயபாடப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவிகளே இவ்வாறு நல்லை திருஞானசம்பந்த ஆதன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளால் கௌரவிக்கப்பட்டனர்.

செல்வி தி.பவிதா தரம் 11 (யா/ கலாநிதி அதியாகராசா ம.ம.வி.) ம.சாம்பவி தரம்8 (யாழ்ற்ரன் கல்லூரி), வி. கோபிகா தரம் 4 (வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை) ஆகிய மாணவிகளே தங்கப்பதக்கம் பெற்றுள்ளனர். (எ-73)

## மோட்டார் சைக்கிள் திருட்டு

வீட்டு முன்விறாந்தையில் பூட்டாத நிலையில் விடப்பட்ட மோட்டார் சைககிள் இரவு நேரம் இனந்தெரியாதோரால் களவாடப்பட்டுள்ளது. இச்சம்பவம் கடந்த வாரம் சங்கானையில் இடம்பெற்றது.

சித்தன்கேணிப் பிரிவில் கிராம சேவை அலுவலராகக் கடமைபுரிந்து வரும் சங்கானை முருகமூர்த்தி கோவில் வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி கந்தசாமி என்பவரின் 'ஜமாகா மேற் - 50', 137 - 8614 ஆம் இலக்கம் கொண்ட மோட்டார் சைக்கிளே இவ்வாறு களவாடப்பட்டுள்ளது. இதுபற்றி சங்கானை, மானிப்பாய் பொலீஸ் நிலையங்களில முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.(ம-29)

## தபால் பெட்டிகள் புதுப்பொலிவு

கோப்பாய்,ஜன.14

கோப்பாய் தபால் பிரதேச எல்லைக்குட்பட்ட சேகரிப்பு மையங்கலில் உள்ள தபால் பெட்டிகள் அனைத்தும் வர்ணம் பூசப்பட்டு பழுது பார்க்கப்பட்டுள்ளன. (எ-72)

# முதலாம் ஆண்டு நினைவுச் சிமிழ்

மண்ணில்
13
05
1928



விண்ணில்
14
01
2003

## திருமதி V.M.கணபதிப்பிள்ளை பராசக்தி

### திதி: வைகுந்த ஏகாதசி

ஆண்டொன்று அகன்றதுவோ அருமைத் தாயே!
அனுதினமும் உமைநினைந்து தொழுதோம் நாமே!
வேண்டியயா வையுமீந்தீர் வித்தை ஈந்தீர்!
வெற்றியுற விரும்புபல தர்மம் ஈந்தீர்!
பூண்டபே ஏறத்தாயே புதுமை ஊற்றே!
புரந்தெம்மை வளர்த்தெடுத்த புகழின் தாயே!
ஈண்டுங்கள் புகழ்வாழும்! புலமை வாழும்!
என்றுமே உம்வழியில் உயர்வில் நாமே!

பாச மாதாவின் அமரவுலக வாழ்வு சிறக்க
பரமன் தாள் அஞ்சலித்தோம்!

நியூ வீ.எம்.கே. ஜீவலர்ஸ்,
கண்டிவீதி, சாவகச்சேரி.

(சி-32741)(36-11-16)

# பாடசாலைகள் மூடப்படும் அபாயத்திற்கு தீர்வு காண்பது பற்றிச் சிந்திக்க வேண்டியது அவசியம்

**நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் காரணமாகப் பிறப்பு வீதம் குறைந்துள்ளது. பெற்றோர்கள் பிரபலமான நகர்ப்புற பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகளைச் சேர்க்கப் போட்டியிடுகின்றனர். இதனால் பல கிராமப் புறப்பாடசாலைகள் மூடப்படும் நிலையில் உள்ளன. 'லங்கா தீப' வார இதழில் சீ.ஜே.அமரதுங்க எழுதிய கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**



## பிறப்பு வீதம் குறைந்ததால் மாணவர் எண்ணிக்கையில் வீழ்ச்சி

**போ**திய அளவில் மாணவர் தொகை இல்லாத காரணத்தால் நாடு பூராகவுமுள்ள அதிக எண்ணிக்கையான பாடசாலைகள் மூடப்படும் அசசம் உருவாகியுள்ளது. இதற்கு வேறு காரணங்கள் உள்ள போதும் முக்கியமான காரணம் இலங்கையின் சனத தொகை அதிகரிப்பு வேகத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியேயாகும். அது பறறிய ஆய்வே இங்கு தரப்பட்டுள்ளது.

இது பாடசாலைகளில் மாணவர்கள் அனுமதிக்கப்படும் காலமாகும். பிரபல்ய பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்ப்பதில் பெரும் போட்டி நிலவுகிறது. அதேவேளை, வேறு பெரும்பாலான பாடசாலைகளில் சேரும் மாணவர்கள் தொகை போதுமானதாக இல்லை. கல்வியமைச்சின் தகவல்களுக்கு அமைய இந்நாட்டிலுள்ள 9826 பாடசாலைகளுள் சுமார் 500 பாடசாலைகளுக்கு 2004 ஆம் ஆண்டில் பாடசாலையில் சேர்வதற்கான விண்ணப்பங்கள் ஒரு மாணவரிடமிருந்தாவது கிடைக்கவில்லை. சுமார் 2000 பாடசாலைகளுள் சேர்ந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை தலா பத்துக்குக குறைவாக உள்ளது. முதலாம் ஆண்டுக்குப் போதுமான மாணவர்களே இல்லாத பாடசாலைகள் 5 ஆயிரத்துக்கும் அதிகமாக உள்ளன. அதாவது, இத்தீவில் உள்ள பாடசாலைகளின் முழுத்தொகையில் அரைப்பங்கு பாடசாலைகளிலும் போதியளவு மாணவர்கள் சேரவில்லை.

பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்ப்பதிலுள்ள போட்டியை பற்றி அநேகமானோர் தமக்குள் விமர்சித்துக கொள்கின்றனர். சுமார் 2000 பாடசாலைகளிலேயே பெருமளவிலான மாணவர்கள் சேர்வது புலனாகிறது. அவற்றுள்ளும் சிறு தொகையான 500 முதல்தரப் பாடசாலைகளில் சேர்வதற்கே கடும் போட்டி நிலவுகிறது.

இத்தகைய சமநிலையற்ற நிலை காரணமாகவும் சில பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. இனிவரும் காலங்களில் பெரும் தொகையான பாடசாலைகள் மூடப்படுவதற்கு அச்சமும் உருவாகியுள்ளது. மறுபுறத்தில் பெருமஎண்ணிக்கையான பாடசாலைக்கட்டடங்களும் மற்றும் வசதிகளும் பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளன. அதேவேளை, அநேகமான பாடசாலைக் கட்டடங்களையும் மற்றுமுள்ள வசதிகளையும் பயன்படுத்துவதற்கு மாணவர்கள் இல்லாதுள்ளனர். இதுவரையில் பூரணமாக செயலிழந்துள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை 500 ஆகும். இன்னமும் ஆயிரக்கணக்கான பாடசாலைகள் செயலிழக்கவுள்ளன. 2700 பாடசாலைகளில் 100 இற்குக் குறைவான மாணவர்களைக் கொணடுள்ள நிலையைக் கவனத்தில் கொளளும்போது இதன் பாரதூரமான நிலை தெளிவாகத் தெரிகிறது.

இதற்கான முக்கிய காரணங்களாக நகர்ப் புறத்திலுள்ள முதல் தரப் பாடசாலைகளை நோக்கி மாணவர்கள் கவரப்படுவதும் புதிதாகப் பாடசாலைகளில் சேரவுள்ள மாணவர்களின் தொகையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியுமாகும்.

### குழந்தைகள் பிறப்பு வீதம்

கடந்த காலங்களில் சிறிலங்காவில் நடைமுறைப்படுத்தப்பட்ட சனத் தொகையைக் கட்டுப்படுத்தும் செயற்றிட்டங்கள் பெரும் பயனை அளித்துள்ளன. அதன் பயனாகக் கிடைத்துள்ள பெறுபேறு, குழந்தை பிறக்கும வீதத்தின் வீழ்ச்சியாகும். 1980 முதல் 2000 வரையுள்ள இருபது ஆண்டுகளுக்குள் சிறிலங்காவில் பிறந்துள்ள குழந்தைகள் தொடர்பான ஆய்வுகள இந்நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துகின்றன.

1980 இல் சிறிலங்காவில் பிறந்துள்ள குழந்தைகளின் தொகை 4 லட்சத்து 18 ஆயிரத்து 373 ஆகும். 1981 இல் அது 4 லட்சத்து 23 ஆயிரத்து 793 ஆகும். அது படிப்படியாகக் குறைந்து 1998 இல் 3 லட்சத்து 25 ஆயிரத்து 821 ஆக வீழ்ச்சி அடைந்துள்ளது. இதுவரையில் கிடைத்துள்ள குறைந்த எண்ணிக்கை அதுவேயாகும். 1999 இல் பிறந்துள்ள குழந்தைகளின் தொகை 3 லட்சத்து 29 ஆயிரத்து 511 ஆக உள்ளதோடு 2000 இல் 3 லட்சத்து 40 ஆயிரத்து 144 ஆக அது அதிகரித்துள்ளது.

1980 இல் பிறந்த குழந்தைகள் 1986 ஆம் ஆண்டிலேயே பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பர். 5 வயதுக்கும் குறைந்த குழந்தைகள் இறந்து போகும் தொகையைச் சுமார 7 ஆயிரமாக மதிப்பிடும்போது, 1986 இல் பாடசாலைக்கான அனுமதி யைப் பெற்றுள்ளோர் எண்ணிக்கை 4 லட்சத்து 11 ஆயிரமாகும். இந்த ஆண்டில் அதாவது, 2004 இல் பாடசாலைக்கு அனுமதிக்கப்படவுள்ளோர 1997 இல் பிறந்த சிறுவர்களாவர். மேற்குறிப்பிட்டதற்கிணங்க இதுவரை பாடசாலைக்கு அனுமதிக்கப்படவுள்ளோரின் தொகை சுமார் 3 லட்சத்து 25 ஆயிரமாகும். இதனடிப்படையில் நோக்கும்போது கடந்த 20 ஆண்டுகளுள் பாடசாலைகளுக்குச் செல்லத் தகுதிபெற்றவர்களின் எண்ணிக்கை சுமார் 90 ஆயிரமாகக் குறைந்துள்ளது.

எமது பாடசாலைகளுக்கான திடடம் சனத்தொகை அதிகரிப்பை கருதத திற்கொண்டே மதிப்பிடப்பட்டுள்ளது. 80 களில் இருந்து வருடாந்தம் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள நான்கு லட்சம் மாணவர்களுக்கு அமையவே பாடசாலைக்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், தற்போது அத்தகைய தொகையினர் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை.

இத்தகைய வீழ்ச்சி ஆரம்ப வகுப்புகளுக்கான மாணவர் தொகையில் மாத்திரம் ஏற்படவில்லை. பாடசாலைக்குச் செல்லும் வயதுடைய மாணவர்கள் அதாவது, 5 வயது முதல் 17 அல்லது 18 வயது வரையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. அதற்கமைய பாடசாலை அனுமதி 2 முறை மதிப்பீடுகளின் படியும் இந்த எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

மாணவர் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதோடு, எஞ்சியுள்ள மாணவர்கள் வசதிகூடிய பாடசாலைகளுக்குச் செல்வதால் பிரச்சினை பெரிதாகிறது. அதனால் வசதி குறைந்த கிராமப்புறப் பாடசாலைகளிலும் மற்றும் நகர்ப் புறங்களிலுள்ள சிறு பாடசாலைகளிலும் மாணவர் எண்ணிக்கையில் பாரதூரமான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதும். மூடப்படுவதற்கான அச்சம் ஏற்பட்டுள்ளதும் இத்தகைய பாடசாலைகளுக்கேயாகும்.

போதியளவு மாணவர்கள் இல்லாதவிடத்து அப்பாடசாலைகளுக்கு வசதிகள் ஏற்படுத்தப்படுவதும் சிரமமான காரியமே. ஐந்தாறு மாணவர்கள் பயிலும் பாடசாலைகளில் பத்துப் பதினைந்து ஆசிரியர்கள் கடமையாற்றுவது ஏற்கக்கூடியதா?

பாடசாலைகள் மூடப்படுவதே பிரசசினைக்குத் தீர்வாகும் எனக் கருதுவது பொருத்தமுடையதல்ல. அப்பாடசாலைகள் கொண்டுள்ள இடவசதி மற்றும் வசதி வாய்ப்புகளைப் பயன்படுததிக் கல்வியின் தரத்தை மேலும் உயர்த்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படல்வேண்டும். நகர்ப்புற பாடசாலைகள் இடநெருக்கடியைத் தவிர்க்கும் விதத்தில் வேறு பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படுவதே இதற்கான மாற்றொழுங்காகும். இருக்கும் வசதிவாய்ப்புகளை இயன்றளவு பயன்படுத்தி பாடசாலைகளிலுள்ள பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு தமது கவனத்தைச் செலுத்துவது கல்வி தொடர்பான நிபுணர்களின் கடமையாகும்.

ஒரு நாட்டின் அபிவிருத்திக்குப் பிறப்பு வீதம் குறைக்கப்பட வேண்டும் என்பது இன்று அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நிலைப்பாடாகும். அது அபிவிருத்திக்கு வாய்ப்பளிக்கும் என்பதே இன்றுள்ள நம்பிக்கையாகும். அதுபோன்றே நாடு மேன்மேலும் அபிவிருத்தியடையும்போது பிறப்பு விகிதாசார வீழ்ச்சியிலும் அதிக முன்னேற்றம் காணப்படக்கூடும். ஆதலால், நாம் எதிர்காலத்தில் உருவாகவுள்ள அது தொடர்பான நிலைப்பாட்டையும் கருத்திற்கொண்டு இன்று உருவாகியுள்ள பிரச்சினைக்குத் தீர்வு காண்பது பற்றிச சிந்திக்க வேண்டும்.

### கல்வித்தரம்

ஒரு நாடு அபிவிருத்தி அடைவதோடு அந்நாட்டின் கல்வித்தரமும் உயரவேண்டும். இதற்கு முன்னர் எமது நாட்டின் அரசைப்போன்றே மக்களும் குறிக்கப்பட்ட அளவிலேயே கல்வி தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்று சிந்தித்து வந்துள்ளனர். அதனால் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வி புகட்டப்படவேண்டுமென்ற வகையில் மட்டும் செயற்பட்டுள்ளோமேயன்றி கல்வியின் தரம் உயர்வாக இருக்கவேண்டும் என்பது தொடர்பாக நாம் அதிகமாகக் கவனம் எடுக்கவில்லை. அதன காரணமாக ஒரு வகுப்பறையில் 45,50 மாணவர்கள் திணிக்கப்பட்டனர். ஓர் ஆசிரியரே பாடங்கள் பலவற்றைக் கற்பிக்க வேண்டியதாயிற்று.

ஆனால், இன்று கல்வியின் தரம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டிய, கவனம் செலுத்தக்கூடிய - காலம் உருவாகியுள்ளது. அது மக்களின் தேவையாக மாறியுள்ளதை முதல்தர பாடசாலைகள் தொடர்பான போட்டி எமக்குணர்த்தியுள்ளது.

எனவே, சனத்தொகைப் பெருக்கத்தின் வேகம் குறைந்துள்ளதால் உருவாகியுள்ள நிலைப்பாட்டுக்குப் பொருத்தமான வகையில் அதை ஒரு வரப்பிரசாதமாக மாற்றும் செயற்பாடுகளை நாம் கைக்கொள்ளவேண்டும். அதன் மூலம் பிரபலமான பாடசாலைகளில் மாணவர்கள் திணிக்கப்படுவதை எம்மால் நிறுத்தமுடியும்.

**- சரா -**

உயர்ந்த தரமான கல்வியைப் பெறும் வகையில் அவ்வகுப்புகளில் மாணவர்கள் தொகையை வரையறுக்கவும்முடியும். மேலதிக மாணவர்களை நெருக்கடி குறைந்த பாடசாலைக்கு அனுமதித்து, அப்பாடசாலைகளின கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான வசதிகளை வழங்கவும முடியும். இத்தகைய தொடர் நடவடிக்கைகள் மூலம் பாடசாலைகளுக்கிடையில் இன்று உருவாகியுள்ள, சமனற்ற நிலையைக் குறைப்பதற்கும் பாடசாலை மூடப்படும் நிலையைத் தவிர்ப்பதற்கும் முடியும். இதில் கவலைக்குரியவிடயம் யாதெனில் இன்னமும் எமது கல்வி அதிகாரிகளால் அத்தகைய செயற்றிறன்மிக்க செயற்றிட்டங்கள் முன்வைக்கப்படவில்லை. அதற்குக் காரணம் எமது மக்களின் எதிர்காலத் தொலைநோக்கற்ற சிந்தனைகளின் பிரதிபலிப்பே. ☆

---

## விஞ்ஞானப் பாடங்களில் பல்கலைக்கழக அனுமதிக்கான தேவை விருத்தி செய்யப்படும்

கொழும்பு,ஜன.14

விஞ்ஞான பாடங்களில் பல்கலைக்கழக அனுமதிக்கான தேவைகளை விருத்தி செய்வதற்குத்திட்டம் வகுக்கப்படுகின்றது எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜி.சீ.ஈ.சாதாரண தரத்தில் இருந்து மாணவர்களின் கணிதத் திறமையை மேம்படுத்த இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். உயிரியல், பௌதீகவியல் துறைகளில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுவோரின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது.

இதனைக் கவனத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அமைச்சுக் கூறுகிறது.

2001ஆம், 2002ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடும்பொழுது ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் பௌதிகவியல், உயிரியல், கணக்கியல் ஆகியவற்றில் 75 புள்ளிகளுக்குக் கூடுதலாகப்பெற்ற மாணவர்களின் விகிதாசாரம் கடந்த ஆண்டு குறைந்திருக்கின்றது.

கடந்த ஆண்டுக்கு முன்னைய மூன்று ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் விஞ்ஞானபாடங்கள் நான்கிலும் மொத்தமாக சித்தியடைந்திருப்பவர்களின் தொகை குறைந்திருப்பதாகவும் அமைச்சு மேலும் கூறுகிறது.

### யாத்திரைஸ்தல பெருவிழா

குருநகர்,ஜன.14

கொட்டடியில் அமைந்துள்ள வணக்கத்துக்குரிய யோசவ்வாஸ் யாத்திரைஸ்தலப் பெருவிழா ஆயத்த நாள் வழிபாடுகள் நாளை 5 மணிக்கு ஆரம்பமாகின்றன.

எதிர்வரும் 17ஆம் திகதி 4.30 மணிக்கு நற்கருணை வழிபாடும் ,18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலியும இடம்பெறும். (ம-8-51)

### வைத்தியசாலை வீதி திருத்தம்

யாழ். போதனா வைத்தியசாலையின் உள் வீதிகள் தார் ஊற்றப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. நீண்டகாலமாக இந்த வீதிகள் திருத்தப்படாமல் காணப்பட்டன. வீதி அபிவிருத்தி அதிகார சபை புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. (ம-8-139)

## சண்டிலிப்பாய் பகுதியில் இந்து ஆலயங்களுக்கு பாதுகாப்பு ஊழியரை நியமிக்குமாறு பிரதேச செயலர் பணிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.14

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள இந்து ஆலயங்களில் இரவு நேரத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவதற்கு ஒருவரை நியமிக்குமாறு கோரி பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணியசர்மா சகல இந்து ஆலயங்களுக்கும் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளார்.

அண்மைக்காலமாக இந்து ஆலயங்களில் உள்ள பழைமை வாய்ந்த விக்கிரகங்கள், பொருள்கள், நகைகள் என்பன திருடப்படும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதனால் அவற்றைத் தடுக்கும் நோக்கிலேயே பிரதேச செயலர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-8-139)

## அமைச்சரின் உறவினர் தாக்கப்பட்ட சம்பவம்: விசாரணைகள் சி.ஐ.டியினரிடம் ஒப்படைப்பு

கொழும்பு,ஜன.14

ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் கடந்த சனிக்கிழமை, அமைச்சர் கபீர்காசிமின் மகனும் உறவினர்களும் தாக்கப்பட்டனர் என்று கூறப்படும் சம்பவம் குறித்த விசாரணை சி.ஐ.டியினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்களான மகிந்த விஜயசேகர, எஸ்.பி.திஸநாயக்க ஆகியோரின் புதல்வர்கள் இந்த சம்பவத்துடன் தொடர்புபட்டிருக்கின்றனர் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர். இரு அமைச்சர்களின் புதல்வர்களையும் கைது செய்வதற்கான விசாரணை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவிக்கிறது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மூன்று பேர் தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

கடந்த சனிக்கிழமை அதிகாலை நடந்த இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிகளைக் கைது செய்யுமாறு ஜனாதிபதி, பொலீஸ்மா அதிபருக்குப் பணித்திருக்கிறார். (ம-8-9)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள CD 100 SS மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.துரைசிங்கம், கற்பக்குளை, கந்தரோடை, சுன்னாகம். எந்நேரமும் பார்வையிடலாம். (27144)

## முட்டை விற்பனைக்கு

தரமான (எங்கள் சொந்த) கோழி முட்டைகள் குறைந்த விலைக்கு விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். (27135)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

சுத்தமான Dobbermann Pincher மற்றும் Great Dane நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (27136)

## கார் விற்பனைக்கு

Toyota-Carina 16-xxxx இலக்கம் கொண்ட கார் விற்பனைக்குண்டு (கலர் அப்பிள்பச்சை). தொடர்பு:- எஸ். பாக்கியராஜா, மீசாலை வடக்கு, மீசாலை (மீசாலை புத்தூர் சந்திக்கு அருகில்).T.P.:0777 986943.(27079)

## மணமகள் தேவை

1970 ஆம் ஆண்டு, ஆனி 4ஆம் திகதி பிறந்த, உயர் கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்த, லண்டனை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட Computing & Electronic Engineering படித்த பட்டதாரி மணமகனுக்கு, படித்த, பண்புள்ள, மணமகள் தேவை. மணமகன் தை மாதக் கடைசியில் இலங்கை வரவுள்ளார். தொடர்பு விளம்பர இல. 2142 C/o உதயன், யாழ்ப்பாணம். (27116)

## ஓட்டோ விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 21-9 தொடர் இலக்கமுள்ள ஓட்டோ உடன விற்பனைக்குண்டு. தொடர்பு: எம்.எவ். ஸ்ரனிஸ்லாஸ் (மேக்கப்), 1/1, றக்கா ஒழுங்கை, யாழ்ப்பாணம். (27132)

## English Classes

ஆங்கில மொழிமூல பட்டதாரி ஆசிரிய தேர்விற்கான வகுப்புகளும், G.C.E. A/L(2006)இற்கான General English வகுப்புகளும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஆங்கிலமொழி தேர்ச்சி வகுப்புக்களும் ஆரம்பம்: 14.01.2004. தொடர்பு: கோ.சுப்பிரமணியம், இல.62, பழம்றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (27084)

## காணி விற்பனைக்கு

பெரிய கடை, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்த 3 பரப்பும் 12 குழியும் உடைய காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 142, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம் (முன்னர் மீன் வியாபாரம் நடைபெற்ற இடம்). (27132)

## தபால்மூலம் சிங்களம்

இப்போது நீங்களும் வீட்டில் இருந்தபடியே சிங்கள மொழியைப் படித்து எழுத/வாசிக்க/பேச தேர்ச்சி பெறலாம். வழமையான நேரடி வகுப்புகளுமுண்டு. விவரங்களுக்கு: ஆசிரியர் திரு.மல்வான, இலக்கம் 56, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (27099)

## தேவை

யாழ்.நகரிலுள்ள கொமினிக்கேஷன் ஒன்றில் தங்கியிருந்து பணிபுரிவதற்கு ஆண் உதவியாளர்கள் தேவை.
தொடர்பு:
M.இராஜநாயகம்,
T.P.:011 2505179.
(21-34-11-19) (27145)

# 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## நடராஜா சந்திரராஜா [போஸ்]

(முன்னாள் உரிமையாளர், குகன் ஸ்ரோர்ஸ், தலவாக்கலை)

மண்ணுலகில் 20-02-1948 — விண்ணுலகில் 19-12-1989

திதி: 14-01-2004

*அன்பான உள்ளம் கொண்டவரே – அப்பா!*
*அரவணைக்க நீங்களிருப்பீர்கள் என்றிருந்தோம்*
*நினைப்பதெல்லாம் நடப்பதில்லை காலமெல்லாம்*
*நிலைத்திருப்பது எதுவுமில்லை – எல்லாம் விதிவசமே*
*நம் வாழ்க்கை மண்ணுலகில் எல்லாம் மாயை என்று*
*எண்ணி இப்பூவுலகில் நாங்கள் இருக்கும் வரைக்கும்*
*உங்களை எம்நெஞ்சங்களில் நினைந்து நினைந்து*
*நெக்குருகி உங்களது இலட்சியங்களை நிறைவேற்றி*
*இறைசிந்தனையோடு வாழ்வோம்.*

என்றும் தங்கள் நினைவோடு,
அன்பு மனைவி, மக்கள்.

பலாலி வீதி.
கோண்டாவில் கிழக்கு.
கோண்டாவில்.
(27140) (26-11-19-21)

## வைத்தீஸ்வராக் கல்லூரி பொன்விழா மலர் வெளியீடு

குருநகர்,ஜன.14

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், பொன்விழா மலர் வெளியீடும் எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு கல்லூரி விவேகானந்தர் மண்டபத்தில் தலைவர் மு.சிவலோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன.

யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் பொன்விழா மலரை வெளியிட்டு வைப்பார். கல்லூரியின் முன்னாள் அதிபர் சி.சரவணபவன், மூத்த பத்திரிகையாளர் எம். கோபாலரட்ணம், பழைய மாணவர்மன்ற உறுபபினர்களான ந.மயில்வாகனம், வை. ஜெயலிங்கநாதன் ஆகியோர் இந்நிகழவில் கௌரவிக்கப்படவுள்ளனர்.(8-51)

## கல்வியங்காட்டில் பட்டப்பகலில் திருட்டு

வலி.கிழக்கு,ஜன.14

வீடொன்றினுள் .பட்டப்பகலில் புகுந்த திருடர்கள் அங்கிருந்த கையடக்கத் தொலைபேசியையும், 6ஆயிரம் ரூபா ரொக்கப்பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை 9 மணியளவில் கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் உள்ள வீடொன்றில் இடம் பெற்றுள்ளது.

வீட்டு முன்பக்க கதவினைத் திறந்து விட்டு வீட்டின் உரிமையாளர் கிணற்றடியில் குளித்துக் கொண்டிருந்த வேளை வீட்டினுள் புகுந்த திருடர்கள் மேசையின் மேல்வைக்கப்பட்டிருந்த கையடக்கத் தொலைபேசியையும் அறையில் இருந்த கைப்பையில் வைக்கப்பட்டிருந்த 6ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளதாகக் கோப்பாய் பொலீஸ நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருடர்கள் பகல் நேரங்களிலும் தமது கைவரிசையைக் காட்டுவதால் பொதுமக்கள் தமது உடைமைகள் மீது கவனமாக இருக்குமாறு கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (ம-8-180)

## தேவை

எமது நிறுவனத்துக்கு -
1. Hardware Technician.
2. Computer Type Setting
தெரிந்தவர்கள் தேவை. உடன் நேரில் வரவும்.

**SKY COMPUTER SYSTEMS,**
109, Kandy Road,
Chundikuli, Jaffna.
☎ 0777 283654. (27143)
(21-11-19-34)

## தவறிவிட்டது

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, சுன்னாகம் எனும் முகவரியில் வசிக்கும் தி.பிரகலாதன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.793414404V), விசேட அடையாள அட்டை என்பன யாழ்ப்பாணத்திற்கும் சுன்னாகத்திற்குமிடையிலான பிரயாணத்தின்போது கடந்தவாரம் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறித்த முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

*தகுந்த சன்மானம் வழங்கப்படும்.*

(21-26-19-11) (C/32767)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**இலங்கை**

## 23 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா

பட்டமளிப்பு விழாவில் பங்குபற்றவுள்ள மாணவர்களின் கவனத்திற்கு.

24.01.2004 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருந்த 23 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா 27.03.2004 சனிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

- பதிவாளர்.

12.01.2004. (C/32764)(34-21-19-11)


**பண்டிகைக் கால விசேட சலுகை**

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவுகளுடன் பேசி மகிழ விசேட சலுகை.

**ஒரு நிமிடத்திற்கு கட்டணம் 5/=**

இச்சலுகை 14.01.2004 தொடக்கம் 16.01.2004 வரை மட்டுமே

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
303, கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 2670
Fax:021 222 3214.
E.Mail: del-smskr@eureka .lk


# கண்ணீர் அஞ்சலி

பிரம்மஸ்ரீ
## மஹாதேவஜயர் கிருஷ்ணசாமிஜயர்
(கிச்சன்)

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய முன்னாள் உதவி அர்ச்சகராயிருந்த

**பிரம்மஸ்ரீ மஹாதேவஜயர் கிருஸ்ணசாமிஜயர்**

அவர்கள் கடந்த 11-01-2004 ஞாயிறு இரவு இந்தியா வளசரவாக்கத்தில் காலமாகி இறுதிக்கிரியைகள் (16-01-2004) வெள்ளிக்கிழமை நடைபெறுமென்ற செய்தி கேட்டு நாம் ஆழ்ந்த கவலையடைகிறோம்.

அவரது ஆத்மா தெல்லியூர் துர்க்கையம்மன் பாதங்களில் என்றும் சாந்திபெறப பிரார்த்திக்கின்றோம்.

அவர் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர், நண்பர்கள், உறவினர்கள்.

தொலைபேசி இலக்கம்
(இந்தியா) 0091-44-24760351 (27137)(21-11-19)

# நினைவுத் துளிகள்

| 4ஆம் ஆண்டு | 14ஆம் ஆண்டு |
|---|---|
|  |  |
| **ச.பரமானந்தன்** | **சி.விமலேந்திரன்** |
| (முன்னாள் பழைய மாணவர் சங்கத் தலைவர் R.M.C) | (சரஸ்வதி மில் உரிமையாளர்) |
| தோற்றம் 18.12.1949 | தோற்றம் 07.01.1951 |
| மறைவு 26.01.2000 | மறைவு 24.01.1990 |

ஆண்டுகள் பல அடிபட்டுப் போனாலும்
மீண்டும் ஒருமுறை உங்களை மீட்டுப் பார்க்கின்றோம்
இவ்வுலகில் முகங்கள் தெரியவில்லையே!
முகங்கள் தெரிந்திட்டால் முத்தங்கள் தந்திடலாம்.

*உங்கள் நினைவுடன்:*
சிவம் குடும்பத்தினர்,
கொக்குவில் நண்பர்கள்.

(C/32735)(35-21-11-14)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா கனகரத்தினம்

சுன்னாகம் மேற்கைச் சேர்ந்த கந்தையா கனகரத்தினம் நேற்று (13.01.2004) செவ்வாய்க்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் வள்ளிநாயகியின் அன்புக் கணவரும் சாந்தினி (ஆசிரியை, குப்பிளான் விக்கினேஸ்வர மகாவித்தியாலயம்), கலைச்செல்வி (ஆசிரியை, அறிஞர் ஐயன்னா பாலர் பாடசாலை, சுன்னாகம்), தனேஸ்வரன் (லண்டன்), காலஞ்சென்ற ஜெனீஸ்வரன் , தர்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் புலேந்திரனின் மாமனாரும் சரஸ்வதி (சுவிஸ்), இராசரத்தினம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (14.01.2004) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*சுன்னாகம் மேற்கு,*
*சுன்னாகம்.* (27149)(34-21-11-14)

தகவல்: தர்சன்
(மகன் - குட்டான்).

## Dr.K.S.பரமலிங்கம்

யாழ்ப்பாணம், நீராவியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இளைப்பாறிய அப்போதிக்கரி கந்தர் சின்னத்தம்பி பரமலிங்கம் அவர்கள் லண்டனில காலமானார்.

இவர் தையல்நாயகியின் அன்புக் கணவரும் Dr.சிவலிங்கம் (கனடா), சிவநாயகி (லண்டன்), சாந்தநாயகி (லண்டன்), சந்திரநாயகி (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் Dr.காஞ்சனா, இராசசிங்கம், மனோகரசிங்கம், சத்தியலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் தீப்பேஸ், ஐஸ்வரியா, டரா சாலினி, ஜீவா, நளனி, கோபிகன், ஜசீகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். இவர் காலஞ்சென்ற நாகம்மா சிவசுப்பிரமணியம், சரஸ்வதி மகாலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் ஜனவரி 17ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

7/1 1st Lane, Neeraviyadi,
Jaffna
T.P.021 - 222 - 2719
T.P.021 - 222- 3135 (27150)(35-21-11-19)

தகவல்:-
மகள்:- திருமதி சிவநாயகி இராசசிங்கம்
மருமகன்:- திரு.குமாரரெட்ணம்
T.P.173 - 735 8480 U.K

# தியாகி திலீபன் மருத்துவமனை புங்குடுதீவில் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.14

தியாகதீபம் திலீபன் மருத்துவ மனை நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு புங்குடுதீவு பெருங்காட்டில் திறந்து வைக்கப்பட்டது. வேலணைப் பிரதேச உதவிப்பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் மருத்துவமனையைத் திறந்து வைத்தார்.

தேசிய எழுச்சிப் பேரவையின் அனுசரணையுடன் புங்குடுதீவு - நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பகனகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் பொதுச் சுடரை கரும்புலி கப்டன் ரங்கனின் சகோதரன் கு.உதயன், ஸ்ரீ.நா. நாகேந்திரக்குருக்கள், தேசிய எழுச்சிப் பேரவையின் தீவகக் கோட்டச் செயலாளர் த.சத்தியசாஸன், தீவகக கோட்ட வளம் பேணும் அமைப்பின் தலைவர் அ.அருந்தவநாயகம், ஆசிரியை மகாலட்சுமி, தீவுப்பகுதி தெற்கு அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத் தலைவர் டாக்டர் ஆ.பேரின்பநாதன ஆகியோர் ஏற்றி வைத்தனர்.


தேசியக் கொடியை தீவகக் கோட்ட அரசியல்துறை சிறப்புப்பொறுப்பாளர் ந.கண்ணன் ஏற்றிவைத்தார்.

தியாகி திலீபனின் திருவுருவப்படத்திற்கு மருத்துவமனைப் பொறுப்பதிகாரி வண்ணன் சுடர் ஏற்றி வைக்க யாழ்.மாவட்ட அரசியல்துறை மகளிர் துணைப்பொறுப்பாளர் கலை விழி மலர் மாலை அணிவித்தார்.

தியாகி திலீபன் மருத்துவமனை பெயர்ப்பலகையை யாழ்.பல்கலைக் கழக உடற்கல்வித்துறை விரிவுரையாளர் மா.இளம்பிறை திரைநீக்கம் செய்தார்.

இதனையடுத்து யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சி.செம்மணன், விரிவுரையாளர் மா.இளம்பிறை, வைத்திய பொறுப்பதிகாரி வண்ணன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

புங்குடுதீவில் உள்ள மாவட்ட அரசினர் வைத்தியசாலை கடந்த 13 வருடங்களாக இயங்காமல் உள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் மருத்துவ வசதிகள் இல்லாமல் பல இன்னல்களை எதிர் நோக்கி வந்தனர். இதன் காரணமாகவே திலீபன் மருத்துவமனை இங்கு திறந்து வைக்கப்பட்டதெனத் தெரிவிக்கப்பட்டது. (ம-8)



ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 78ஆவது பிறந்த தினவிழா அண்மையில் கோப்பாய் சத்திய சேவா நிலையத்தில் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் சாயி சிறுவர் இல்ல சிறுவர்கள் வில்லிசை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.

# அமைச்சர் கைக்கூலி கோரியதால் வெளிநாட்டு முதலீடு கைநழுவியது!

கொழும்பு,ஜன.14

30கோடி ரூபா பெறுமதிகொண்ட வெளிநாட்டு முதலீட்டுத் திட்டத்தை இலங்கையில் மேற்கொள்வதற்கு அரசின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் 3 கோடி ரூபா கைக்கூலி கோரியதையடுத்து அத்திட்டத்தைக் கைவிடுவதற்கு அந்த வெளிநாட்டு நிறுவனம் தீர்மானித்துள்ளது.

'யூனியன் பிஷ்புரக்ட்ஸ்' என்ற பெயரில் மீன்களை ரின்களில் அடைக்கும் நிறுவனமொன்றை இலங்கையில் நிறுவ ரஷ்ய முதலீட்டாளர்கள் முன்வந்திருந்தனர்.

மேற்படி முதலீட்டுத் திட்டத்துக்குச் செலவு செய்யப்படும் தொகையில் நூற்றுக்குப் பத்து வீதம். கைக்கூலிப் பணமாக வழங்கப்படவேண்டுமென, அமைச்சர் முதலீட்டாளரிடம் கோரியதையடுத்து அவர்கள் திட்டத்தை இடைநிறுத்தி தமது நாடு திரும்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் மோதரையில் இந் நிறுவனத்திற்கான அத்திவாரக்கல் நடப்பட்டதாகவும் அதன்பின்னரே சிரேஷ்ட அமைச்சரால் கைக்கூலிக் கமிசன் தொடர்பாகப் பிரஸ்தாபிக்கப்பட்டதாகவும் மீன்பிடி மற்றும் கடல்வள அபிவிருத்தி அமைச்சின் உயரதிகாரி ஒருவர் கொழும்பிலுள்ள சிங்கள வார இதழுக்குத் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட ரின் மீன் உற்பத்தி நிறுவனத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்ச்சியில் மீன்பிடித்துறை மற்றும் கடல்வள அபிவிருத்தியமைச்சரான மஹிந்த விஜயசேகரவோடு ரஷ்ய முதலீட்டாளர்களும் சமுகமளித்திருந்தனர்.

இத்திட்டத்தை ஆரம்பிக்க சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தவேளையில் அமைச்சரொருவரின் இந்த நடவடிக்கையினால் அத்திட்டம் நாட்டுக்குக் கிடைக்காது கைநழுவிப போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-8)

# லண்டன் நிறுவனத்தின் கற்கை நெறி குடாநாட்டில் விரைவில் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம்,ஜன.14

மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சின் அனுசரணையுடன், 'லண்டன் சிற்றி அன்ட் கில்ஸ்' நிறுவனம் பொறியியல் உயர்தரக் கற்கை நெறி ஒன்றினை விரைவில் குடாநாட்டில் நடத்தவுள்ளது.

யாழ்குடாநாட்டில் தொழில் சார்ந்த விடயங்களை விருத்தி செய்யும் வகையிலேயே இக்கற்கை நெறியினை இங்கு ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கூறப்பட்டது.

இக்கற்கை நெறிக்கான பரீட்சைகள் 'லண்டன் சிற்றி அன்ட் கில்ஸ்' நிறுவனத்தினால் குடாநாட்டில் நடத்தப்படும். அதற்கான தகைமைச் சான்றிதழ்களும் அந்த நிறுவனத்தால் வழங்கப்படும்.

தேர்ச்சியடைந்த மாணவர்கள் லண்டனில் உள்ள பல்கலைக்கழகங்களில் இரண்டு வருடங்கள் மேலதிக கற்கை நெறிகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளும் அந்த நிறுவனத்தினால் செய்து கொடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-8-4-6)

## தொண்டு நிறுவனங்களிடமிருந்து

# விவசாய கழகங்களுக்குக் கிடைக்கும் உதவிகளின் விவரம் சேகரிப்பு

அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் விவசாயம் தொடர்பான உதவிகள் பற்றிய விவரங்களை விவசாயக் கழகங்கள் கமநல சேவை நிலையத்தினருக்கு அறிவிக்கவேண்டுமென உடுவில் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் செ.சோதிநாதன் விவசாயக்கழகத் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார்.

உடுவில் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட பல விவசாயக் கழகங்களுக்கு கடந்தகாலங்களில் பல அரசசார்பற்ற நிறுவனங்கள் நேரடியாக விவசாய உதவிகள் பலவற்றை வழங்கி உள்ளன.

அவ்வாறு வழங்கப்பட்ட விவசாய உதவிகள் பற்றியும், வழங்கப்பட்ட உதவிகளை பொருள்களை வகைப்படுத்தியும் தமக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

விவசாயக் கழகங்களிடம் கைவசம் இருக்கும் பொருள்கள் பற்றிய விவரம் தெரியாமல் எதிர்காலத்தில் கமநல சேவை நிலையத்தால் வழங்கப்படும் உதவிகளை நிர்ணயிப்பதில சிரமங்கள் ஏற்படலாம் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ-152)

### மலிவுவிலையில் மரக்கறி கன்றுகள்

வலிகாமம்தெற்கு,ஜன.14

திருநெல்வேலியில் இயங்கி வரும் 'சீட்கோ பாம்' நிறுவனத்தில் விவசாயிகளின் நடுகைக்கேற்ற கத்தரி, தக்காளிக் கன்றுகள் மிகவும் மலிவான விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

கத்தரிக்கன்று ஒன்று 30 சதமாகவும் தக்காளிக்கன்று ஒன்று பதினைந்து சதமாகவும் வழங்கப்பட்டு வருகின்றது. விவசாயிகளுக்குத் தேவையான மரக்கறி விதைகளை கமநல சேவை நிலையங்கள் ஊடாக நிறுவனம் வழங்கி வருகின்றது. (ஐ-152)

### இணுவில் ஆஸ்பத்திரியில் சிரமதானம்

வலிகாமம்தெற்கு,ஜன.14

கேணல் கிட்டுவின் 11ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு - நேற்று முன்தினம் திங்கட்கிழமை - இணுவில் மக்லியொட் ஆஸ்பத்திரி சுற்றாடலில சிரமதானப்பணி மேற்கொள்ளப்பட்டது.

வலிகாமம் தேசிய எழுச்சிப் பேரவையினரால் இந்தச் சிரமதான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

காலை ஒன்பது மணிதொடக்கம் பொது அமைப்புகள், விவசாய கழகங்கள், பெண்கள் அமைப்புகள் ஆகியவற்றின் பங்களிப்புடன் ஏராளமானோா சிரமதானத்தில் ஈடுபட்டனர். (ஐ-152)

### திருட்டுப்போன பொருள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன.14

உரும்பிராய் மேற்கில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் திருடப்பட்ட சுமார் 22ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் கோப்பாய பொலீஸாரால் மீட்கப்பட்டுள்ளன என்று பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீசெல்வம் தெரிவித்தார்.

கடந்த 10ஆம் திகதி தேவாலயத்தில் திருடப்பட்ட பொருள்கள் மறுநாளே மீட்கப்பட்டன என்றும் அவர் சொன்னார்.

திருடப்பட்ட பொருள்களை வாங்கிய இருவரும் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டார் என சந்தேகிக்கப்படும் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இவர்கள் மூவரும பின்னர் யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். திருட்டுச் சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (ம-7)

# மட்டு., அம்பாறை மாவட்டங்களில் சில தினங்களாக எரிபொருள் தட்டுப்பாடு

சாய்ந்தமருது,ஜன.14

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மட்டக்களப்புக் களஞ்சியத்தினூடாக அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்கு எரிபொருள விநியோகம் கடந்த நான்கு தினங்களாக நடைபெறவில்லை. இதனால் இம்மாவட்டங்களில் எரிபொருள்களுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இங்குள்ள சகல பெற்றோல் நிலையங்களிலும் 'எரிபொருள் இல்லை' என்ற வாசகம் எழுதப்பட்ட பலகைகளே வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக, மட்டக்களப்பு களஞ்சியத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு வினவியபோது, தமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணத்தால் கடந்த நான்கு தினங்களாக இப்பிரதேசங்களுக்கு எரிபொருள் பவுஸர்களை அனுப்ப முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக வாகன ஓட்டங்கள் குறைந்துள்ளதுடன் மண்ணெண்ணைக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எரிபொருள் லீற்றர் ஒன்றுக்கு 50 சதம் வரி அறவிடப்படுவதே இத்தட்டுப்பாட்டுக்குக் காரணம் என்று பெற்றோல் நிலைய உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

### புத்தக வெளியீடு


யாழ்ப்பாணம்,ஜன.14

மொழி பெயர்ப்பாளரும் சமாதான நீதிவானுமாகிய டேவிட் தம்பிராசா எழுதிய பொது (ஆங்கிலம் ஜி.சீ.ஈ.உயர்தரம் (General English - G.C.E (A/L) என்னும் புத்தக வெளியீடு இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டப் படிப்புகள் பிரிவில் நடைபெறவுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை தலைமையில் நடைபெறவுள்ள இவ்வெளியீட்டு விழாவில் ஓய்வு பெற்றநீதிபதி மு.திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். கௌரவ விருந்தினர்களாக புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்திரு.ஜஸ்ரின் ஞானப்பிரகாசம். யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன், கொக்குவில் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் ஆர்.மகேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

நூலின் முதற்பிரதியை டாக்டர் றெஜினோல்ட் பெர்னான்டோ பெற்றுக் கொள்வார். (ஐ-8)

# பத்திரிகையை வாழ்வாக்கிய கோபுவின் அரை நூற்றாண்டு அனுபவம்



இலங்கையின் முதுபெரும் தமிழ்ப் பத்திரிகையாளரான எஸ்.எம்.கோபாலரத்தினம் எழுதிய "பத்திரிகைப் பணியில அரை நூற்றாண்டு" என்னும் நூல் பொங்கல் தினமான இம்மாதம் பதினைந்தாம் திகதி வெளியிடப்படுகிறது.

1953ஆம் ஆண்டில் கொழும்பில் வீரகேசரியில் தமது பத்திரிகை வாழ்வைத் தொடங்கிய எஸ்.எம்.ஜி., கோபு, என்றும் அழைக்கப்படும் திரு.கோபாலரத்தினம், 1960ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணம் 'ஈழநாடு' பத்திரிகையின் செய்தியாசிரியராகவும் ஆசிரியராகவும் இருபத்தியொரு ஆண்டுகள் பணியாற்றினார். 1960 ஆம் ஆண்டில் வாரமிருமுறை வெளிவந்துகொண்டிருந்த 'ஈழநாடு', கோபுவின் வருகையைத் தொடர்ந்து 1961 ஆம் ஆண்டில் தினப்பத்திரிகையாக வெளிவரத்தொடங்கியது.

வாரமிருமுறையாக வெளிவந்தபோதும் பின்னர் தினப்பத்திரிகையானபோதும், பிந்திய பதிப்பு, விசேஷ பதிப்புக்கள் என நாட்டுநிலைமைக்கும், சம்பவங்களுக்கும் ஏற்ப வாசர்களுக்கு ஈழநாடு - செய்திகளையும் தகவல்களையும் உடனுக்குடன் கொடுத்து யாழ்ப்பாணத்தில் புதிய சாதனைகளை ஏற்படுத்தியது.

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன்பாக தந்தை செல்வநாயகம் தலைமையில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி 1961ஆம் ஆண்டில் ஆரம்பித்த சத்தியாக்கிரகப் போராட்டம், பின்னர் வடக்கிலும், கிழக்கிலும், அரசாங்க அலுவலகங்களுக்கு முன் விரிந்து பரவி அரசயந்திரம் செயலற்றுப்போகச் செய்தது. இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டம் மிக அமைதியாக சாத்வீகமாக நடைபெறுவதற்கு ஈழநாடு பெரும் பங்காற்றியது. இதில் கோபுவின் பங்கு அளப்பரியது. யாழ்ப்பணத்திலிருந்து இன்று நான்கு தினசரிப் பத்திரிகைகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இந்த நிலை உருவாகுவதற்கு கோபுவும் ஒரு வகையில் பங்களிப்புச் செய்திருக்கிறார்.

நாட்டில் அமைதியும் இன ஒற்றுமையும் நிலவிய காலத்தில் பத்திரிகையில் பணியாற்றத் தொடங்கிய எஸ்.எம்.ஜி அரசியல் போட்டிகள், சாத்வீகப் போராட்டங்கள், கட்சிப் போராட்டங்கள் ஆகியவற்றைச் சந்தித்தார். ஆயுதப் போராட்டங்களிலும் இராணுவ நெருக்கடிகளிலும் பலசோதனைகளை எதிர் கொண்டார்.

'ஈழநாடு', காலைக்கதிர், செய்திக்கதிர் (வாரப்பத்திரிகைகள்), ஈழமுரசு, ஈழநாதம் ஆகிய பத்திரிகைகளும் கோபுவின் கைவண்ணத்தில் வளர்ந்தவை. கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில் முதல் தினசரியாக இரண்டாயிரமாவது ஆண்டில் வெளிவந்த 'தினக்கதிர்' தினசரிப் பத்திரிகையும் கோபுவின சாதனைக்கு மற்றொருசான்று.

ஆணித்தரமான ஆசிரிய தலையங்கங்கள், ஆக்கபூர்வமான அரசியல் மற்றும் சமூகப்பிரச்சினைகளைக் கொண்ட கட்டுரைகள் ஆயிரக்கணக்கில் எழுதிக் குவித்திருக்கிறார். இன்றும் கட்டுரைகளும் பத்தி எழுத்தும் தொடர்ந்து எழுதி வரும் எஸ்.எம்.ஜி. கலைஞர்கள் பலரின் வளர்ச்சிக்கும் ஊக்கமளித்தார்.

பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் பலரை உருவாக்கியிருக்கும் கோபு - 1987ஆம் ஆண்டில் வடக்கு - கிழக்கில் அமைதியை நிலைநாட்டவந்த இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்டு, இரண்டு மாதங்கள் சிறை வைக்கப்பட்டார். இந்தச் சிறை அனுபவத்தை "ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை" என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டிருக்கிறார். இதற்கு முன் இந்தக் கட்டுரைகள் தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் 'ஜுனியர் விகடன்' சஞ்சிகையில் ஆறுமாதங்கள் தொடராக வெளிவந்தன.

பத்திரிகையையே தமது வாழ்வாக்கிக் கொண்ட திரு.எஸ்.எம்.ஜி கோபாலரத்தினம் பத்திரிகை வாழ்வில் ஐம்பதாண்டுகளுக்கு மேலாகப் புரிந்த சாதனைகள் சந்தித்த சோதனைகள், வேதனைகள் பற்றிய தமது அனுபவத்தை, 'பத்திரிகைப்பணியில் அரை நூற்றாண்டு' என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டிருக்கின்றார். இந்நூல் தைப்பொங்கல் தினமான நாளை பதினைந்தாம் திகதி வெளியிடப்பெறுகிறது.

- *சந்திரன்.*

# 2016 ஆம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டிகளை புதுடில்லியில் நடத்த இந்தியா முயற்சி

2016 ஆம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் உரிமையைப் பெறுவதற்கு இந்தியா தீர்மானித்துள்ளது.

இந்திய ஒலிம்பிக் சங்கம் நேற்று முன்தினம் இத்தீர்மானத்தை உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

"இந்தியத் தலைநகர் புதுடில்லியில் இப்போட்டிகளை நடத்தும் உரிமைக்கு போட்டியிடுவதென இந்திய ஒலிம்பிக்குழு ஏகமனதாகத் தீர்மானித்தது" என அதன்பொதுச் செயலாளர் ரந்தீர் சிங் தெரிவித்தார்.

2010 ஆம் ஆண்டு பொது நலவாய விளையாட்டு விழாவை புதுடில்லியில் நடத்தும் உரிமையை இந்தியா பெற்றுள்ளது.

இதைத்தொடர்ந்தே ஒலிம்பிக் போடடிகளை நடத்தும் உரிமையைப் பெறுவதற்கும் இந்தியா தீர்மானித்துள்ளது.

1951 மற்றும் 1982 ஆம் ஆண்டுகளில் ஆசிய விளையாட்டு விழா புதுடில்லியில் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடுத்த ஒலிம்பிக் விளையாட்டு விழா எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் கிறீஸ்நாட்டின் தலைநகர் ஏதென்ஸில் நடைபெறவுள்ளது.

2008 ஆம் ஆண்டு ஒலிம்பிக் விளையாட்டு விழாவை நடத்தும் வாய்ப்பு சீனாவின் பீஜிங் நகருக்கு வழங்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் விளையாட்டுவிழாவை நடத்தும் உரிமையைப் பெறுவதற்கு ஏற்கனவே 9 நகரங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன.

## விளையாட்டு

# போட்டியில் தோல்வியடைவதற்காக லஞ்சம் வழங்க முன்வந்தனர்!

### முன்னாள் குத்துச்சண்டை வீரர் கூறுகிறார்

போட்டி ஒன்றில் தோல்வியடைவதற்காக குத்துச்சண்டை ஊக்குவிப்பு நிறுவனமொன்று 5ஆயிரம் டொலர் லஞ்சம் வழங்க முன்வந்தது என அமெரிக்காவின் முன்னாள் குத்துச்சண்டை வீரர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

34வயதான மிட்சல் ரோஸ் எனும் இவ்வீரர் 1995ஆம் ஆண்டில் சக நாட்டவராக எரிக் எஸ்ச் என்பவருடன் போட்டியில் பங்கு பற்றினார்.

இப்போட்டி நடைபெறுவதற்கு முன்னர் "டொப் ரேங்க்" எனும் குத்துச்சண்டை ஊக்குவிப்பு நிறுவனத்தின் பிரதிநிதிகள் தம்மிடம் லஞ்சம் வழங்க முன்வந்தனர் என மிட்சல் ரோஸ் கூறுகிறார்.

மேற்படி போட்டிக்கு இரு வாரங்களுக்கு முன்னர் நான் வீட்டில் ஓய்வாக இருந்தேன். ஒரு மாலை வேளையில் இருவர் எனது வீட்டுக் கதவை தட்டினர்.

உங்களுக்காக ஒரு தொகைப் பணம் கொண்டு வந்துள்ளோம். எரிக் எஸ்ச்சுடனான போட்டி தொடர்பாகப் பேசவேண்டும் என்று அவர்கள் கூறினர்.

இப் போட்டியில் நான் எரிக்கைத் தோற்கடிப்பதை அவர்கள் விரும்பவில்லை. ஆனால், நான் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

- இவ்வாறு ரோஸ் கூறியுள்ளார். மேற்படி போட்டியில் ரோஸ் வெற்றி பெற்றமை குறிபிடத்தக்கது.

அமெரிக்க குத்துச்சண்டை துறையில் கடந்த 20 மாதங்களில் இடம் பெற்றன என்று கூறப்படும் ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து சமஷ்டி புலனாய்வு பிரிவினர் விசாரித்து வருகின்றனர்.

அதன் ஒரு அங்கமாக ரோஸின் குற்றச்சாடடையும் அவர்கள் விசாரித்துள்ளனர்.

எனினும் இக்குற்றச்சாட்டை எரிக் எஸ்ச் மற்றும் டொப் ரேங்க் நிறுவனத்தின் தலைவர் பொப் அரும் ஆகியோர் மறுத்துள்ளனர்.

## தென்மராட்சி கழகங்களிடையே போட்டிகள்

தென்மராட்சிப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 17 ஆம், 18 ஆம் திகதிகளில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறுமென பிரதேச விளையாட்டு அலுவலர் அறிவித்துளளார்.

இப்போட்டிகளில் 25 கழகங்கள் பங்குபற்றவுள்ளன.

இதேவேளை - ஏற்கனவே நடத்தப்பட்ட குழுநிலைப்போட்டிகளில் கிரிக்கெட் போட்டியில் கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டுக் கழகமும், வலைபந்தாட்டப் போட்டியில் சாவகச்சேரி தென்னகத் தாரகை விளையாட்டுக்கழகமும் எல்லே போட்டியில் சாவகச்சேரி சிவன் விளையாட்டுக்கழகமும் முதலிடத்தினை பெற்றுள்ளன.

(ஒ-8-117)

# இந்திய-பாகிஸ்தான் கிரிக்கெட்: அட்டவணைத் தயாரிப்பில் தாமதம்

14 வருடங்களுக்குப் பின்னர், இந்தியா எதிர்வரும் மார்ச் - ஏப்ரல் மாதங்களில் பாகிஸ்தானில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

ஆனால், இத்தொடருக்கான போட்டி அட்டவணையைத் தயாரிப்பதில் இரு நாடுகளின் கிரிக்கெட் சபைகளுக்கிடையில் இன்னும் இணக்கம் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானில் இரு அணிகளும் 3 டெஸ்ட் போட்டிகளிலும், 5 ஒருநாள போட்டிகளிலும் மோதவுள்ளன. இதற்காக 35 நாள் சுற்றுலா மேற்கொண்டு இந்திய அணி பாகிஸ்தானுக்குச் செல்லவுள்ளது. இத் தொடரில் முதலில் டெஸ்ட் போட்டிகளை நடத்திய பின்னர் ஒருநாள் போட்டிகளை நடத்த வேண்டும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விரும்புகிறது. ஒரு நாள் போட்டிகள் கூடுதலான ரசிகர்களை ஈர்க்கும் என்பதே இதற்குக் காரணம்.

## அணி ஒழுங்குத் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜன.14

கோப்பாய்ப் பிரதேசச் செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்த கழகங்களுக்கிடையேயான வருடாந்த விளையாட்டு விழாவுக்கான அணி ஒழுங்குத் தெரிவு எதிர்வரும் 16ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குபற்றுவதற்கு விண்ணப்பித்த விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர்களை அணி ஒழுங்குத் தெரிவில் கலந்து கொள்ளுமாறும் -

இதுவரை விண்ணப்பிக்காத கழகங்கள் தமது பதிவுகளை உடனடியாகப் பிரதேச செயலகத்தில் மேற்கொள்ளுமாறும் -

கோப்பாய் பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் தெரிவித்துள்ளார்.

(ஒ-5)

## உதைபந்தாட்டம்

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று புதன்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★பிற்பகல் 3.30 மணி நாவாந்துறை சென். மேரிஸ் வி.க எதிர் பாஷையூர் சென் அன்ரனிஸ் வி.க

★பிற்பகல் 5 மணி நாவாந்துறை சென். நீக்கலஸ் வி.க எதிர் உரெழு ரோயல் வி.க. (ஓ)

## இலங்கை - ஆஸ்திரேலிய கிரிக்கெட் போட்டி

இலங்கை - ஆஸதிரேலிய அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி அடுத்தமாதம் 20ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. 3 டெஸ்ட போட்டிகளிலும் 5 ஒருநாள் போட்டிகளிலும் இலங்கை -ஆஸ்திரேலிய அணிகள் மோதவுள்ளன. இவற்றில் முதல் இரு ஒரு நாள் போட்டிகள் தம்புள்ளையில் நடைபெறவுள்ளன. ஏனைய மூன்று போட்டிகளும் கொழும்பில் நடைபெறவுள்ளன. டெஸ்ட் போட்டிகள் காலி, கண்டி, கொழும்பு ஆகிய நகரங்களில் நடைபெறவுள்ளன.

## துயர் பகிர்கிறோம்

எமது தீவக அரிமாக்கழகத் தலைவர்
லயன் மு.மகேந்திரன் J.P அவர்களின் அன்புத் தாயார்
அமரர் முத்துத்தம்பி சிவயோகம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் உற்றார், உறவினர்களுடன் நாமும் துயர்பகிர்வதுடன், அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தீவக அரிமாக் கழகம்,
(ஊர்காவற்றுறை).

(27164)(32-18-17)


# வன்னி மண்ணில் மாபெருந் தைப்பொங்கல்

# சிறப்பு விழா 15.01.2004

உழவர் திருநாளாம் தைப்பொங்கல் நாளை
வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனம், சோழன் நிறுவனம்,
தமிழீழ வானொலி, நிதித்துறை, வணிக நிறுவனங்கள்,
தமிழீழ வைப்பகம் ஆகியன
இணைந்து நடத்தும் மாபெருந் தைப்பொங்கல் சிறப்பு விழா

**இடம் : வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவன முன்றில், யாழ்.சாலை, கிளிநொச்சி.**

**காலம் : 15.01.2004 காலை 9 மணி**

- இந்நிகழ்வில் கமக்கார அமைப்பினர், உழவர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
- நிகழ்வுகளை மக்கள் அனைவரும் தமிழீழ வானொலி ஊடாக காலை 9.00 மணி தொடக்கம். 10.00 மணி வரை நேரடி ஒலிபரப்பு மூலம் கேட்கலாம்.
- உழவர் பெருமக்கள் அனைவருக்கும் இந்நாளில் வாழ்த்துக் கூறுவதில் பெருமகிழ்வடைகிறோம்.

- விழா ஏற்பாட்டாளர்.

(27161) (22-13-18)

# மாகாண சபைத் தேர்தல்களில் மு. காங்கிரஸ் தனித்தே போட்டி!

## அரசியல் உயர்பீடக் கூட்டம் தீர்மானம்

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்துள்ளது.

கடந்த திங்கள் இரவு கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்ற அரசியல் உயர்பீடக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது.

வேறு பெரும்பான்மைக் கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்டால் முஸ்லிம் காங்கிரஸின் தனித்துவம் பாதிக்கப்படுவதோடு குழிபறிப்பு வேலைகளும் இடம்பெற வாய்ப்பிருக்கிறது.

ஆனால், மு.கா.தனித்தே போட்டியிட வேண்டும் என்று பெரும்பாலான உறுப்பினர்கள் கூட்டத்தில் வலியுறுத்தனர்.

மகாணசபைத் தேர்தலுக்கு முகம் கொடுப்பதற்காக மாவட்ட, மாகாண ரீதியாக பொறுப்பாளர்களும் நியமிக்கப்பட்டனர். அவர்கள் கட்சித்தலைவர் ஹக்கீமின் ஆலோசனையுடன் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான ஆயதங்களில் ஈடுபட்டிருக்கின்றனர்.

## தூவல் நீர்ப்பாசன அறிமுகவிழா

யாழ்ப்பாணம், ஜன.14

ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளையும், இரிடெக் தனியார் நிறுவனமும் இணைந்து வலிகாமத்தில் தூவல் நீர்ப்பாசனத் திட்டத்தை அறிமுகஞ்செய்யவுள்ளன.

இதற்கான அறிமுக விழா நாளை வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு அளவெட்டி மேற்கில் உள்ள மு.சேனாதிராசாவின் விவசாய நிலத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் விவசாய ஆர்வலர்கள் எவரும் கலந்து கொள்ளலாம் என்று அளவெட்டி மேற்கு கிராம அலுவலர் திருமதி மாலா மதிவதனன் தெரிவித்துள்ளார். (ஒ)

## பொங்கல் விழாக்கள்

தென்மராட்சி,ஜன,14.

சாவகச்சேரி, கண்டுவில் ஒழுங்கை பூவேந்தன் பாலர் பராமரிப்பு நிலையத்தில் இந்து சமய கலாசாரத்தை பரதிபலிக்கும் பொங்கல் விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில நடைபெறும்.

விழாவில் பாலர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளதாக நிலையச் செயலாளர் ம.விவேகானந்தன அறிவித்துள்ளார். (ஒ-8-117)

★ ★ ★

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் பொங்கல் விழா நாளை வியாழக்கிழமை நிலையத் தலைவர் மா.புலேந்திரன் தலைமையில் நிலைய முன்றலில் நடைபெறவிருக்கின்றது. (ம-75)

# அமைச்சர் அதாவுல்லா ஐ.தே.கவின் யானைச் சின்னத்தில் போட்டி?

தற்போதய நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு , திடீர் பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறும் பட்சத்தில் - முஸ்லிம் காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்று தனிக்குழுவாக இயங்கி வருகின்ற அஷ்ரப் காங்கிரஸ் தவிசாளரான அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தில் போட்டியிடுவார் என நம்பகமாகத் தெரியவருகிறது.

இது தொடர்பாக ஐ.தே.க. தலைவரான பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுடன் அவர் பேச்சுக்கள் நடத்தி வருகிறார் எனக் கூறப்படுகிறது.

தான் நேரடியாக ஐ.தே.கட்சியில் இணைந்து கொள்ளாமல் அக்கட்சியுடன் தனது தலைமையிலான அஷ்ரப் காங்கிரஸ் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதன் மூலமே அமைச்சர் அதாவுல்லா யானைச் சின்னத்தில் போட்டியிடத் தீர்மானித்திருக்கிறார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனை ஐதே.கட்சியின் முஸ்லிம் எம்பிஒருவர் உறுதிபடுத்தியதோடு மற்றும் சில தகவல்களையும தெரிவிததார்.

ஐ.தே.க. எம்பி எம்எம் மையோன் முஸ்தபா, சம்மாந்துறைத் தொகுதி ஐ.தே.க. அமைப்பாளர் எம்.எம்.மஹிர ஆகியோருடன் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா மற்றும் அவரது அணியைச சேர்ந்த எம்.பி.ஏ அஸீஸ் எம்.பி உட்பட எட்டு தமிழ் பேசும் வேட்பாளர்களும் , இரண்டு சிங்களவர்களும் அம்பாறை மாவட்டத்தில் ஐ.தே.க. சார்பில் போட்டியிடுவர் என அந்த முஸ்லிம் எம்.பி. கூறினார்.

## 5 மாணவர் ஆஸ்பத்திரியில்

யாழ்தேசியக் கல்வியியற் கல்லூரி மாணவர்கள் ஐந்து பேர் வயிற்றோட்டம் மற்றும் காய்ச்சல் காரணமாக யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஒரே நாளில் உடல நிலை பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

இவர்கள் உட்கொண்ட உணவு அல்லது குடிதண்ணீர் காரணமாக உடல் நிலை பாதிப்படைந்திருக்க வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.(ஒ-139)

## பாலத்துறை பகுதியில் ஒருவர் சுட்டுக் கொலை

கொழும்பு,ஜன.14

பாலத்துறை நாகலகம பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்;ஒரு சிறுவனும் பலியானான்.

தனது ஓட்டோவில் வைத்து பந்து என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவர் ஆவார். அருகில் நின்று கொண்டிருந்த சிறுவனும் பலியானான். இனந்தெரியாத ஒரு நபரே இவரைச் சுட்டுக் கொன்றார் என்று பொலீஸார் தெரிவித்தனர். பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணுக்கு வரவு 16 . 03 . 1937



விண்ணுக்கு விரைவு 15 . 12 . 2003

**அமரர் வேலுப்பிள்ளை இராசரத்தினம்**

(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர் - யா/புனித தெரேசா மகளிர் கல்லூரி)

பண்பின் சிகரமே! பாசத்தின் திருவுருவே!!
அன்பினால் எம்மை ஆண்ட பெருந்தகையே!!!
கனிவுடனே எம் குடும்பம் காத்த இனியவரே!!
காலத்தின் கோலத்தால் ஈசனடி இணைந்தீரே!!
துடுப்பற்ற தோணியாய் துடிக்கும் எமை கரைசேர்க்க,
துரிதமாய்ப் பூவுலகில் மீண்டொருகால் வாருமையா!!!
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

கடந்த 15.12.2003 அன்று காலமான எம்குடும்பத் தலைவரின் மறைவுச் செய்திகேட்டு இரங்கல்கள் தெரிவித்தோருக்கும், மலர்வளையம், கண்ணீர் அஞ்சலிகளை காணிக்கையாக்கியோருக்கும், மரணச் சடங்கில் கலந்து கொண்டு எம்துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று (14.01.2004) புதன்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

திருமதி இ.தனேஸ்வரி(மனைவி),
இ.துஸ்யந்தன்(மகன்),
இ.கிரிசாந்தன்(மகன்),

இராச வீதி,
அச்சுவேலி. (சி-327780)(36-17-18)குடும்பத்தினா.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1964 . 05 . 26



மறைவு 2001 . 12 . 21

**திருமதி மோகனதாஸ் உமாதேவி**

(யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை ஆசிரியை)

எமது வாழ்விற்கும் வளர்ச்சிக்கும்
அன்புத் தீபமாய் இருந்து தன்னை
உருக்கி எமக்கு ஒளியூட்டிய எமது உயிரினும்
மேலான அன்புத் தெய்வமே!
உங்களோடு எமக்கு ஏற்பட்ட உறவு
மீண்டும் மாறுமா தேவியே!

14.01.2004 புதன்கிழமை நடைபெறுகின்ற அன்னாரின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்விலும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சிவபுர வீதி,
வல்வெட்டித்துறை. (சி-32779)(36-17-18) தகவல்: சுபத்திரை(தாயார்).


## வேலை ஆள் தேவை

அச்சகம் ஒன்றிற்கு கணனி வேலையில் அனுபவமுள்ள பெண் பக்கவடிவமைப்பாளர் (டிசைனர்), ரைப்செற்றர் (Type setar) உடன் தேவை

தொடர்பு:
"தர்சா தமிழ்ப்பதிப்பகம்"
ஆஸ்பத்திரியடி,
அச்சுவேலி.
(27142)(36)

## THE ROYAL COLLEGE OF JAFFNA

ஆசிரியர் தேவை

சமூகக்கல்வி 9ஆம் ஆண்டிற்கு கல்வித்தகைமை குறைந்தது O/L சித்தி பெற்றிருக்கவேண்டும்.

தொடர்பு: தலைமை ஆசிரியர்
426(302)K.K.S வீதி,
(27165)யாழ்ப்பாணம்

## நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜய், ஜோதிகா நடித்த
குஷி (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
KEOMA
இரவு 8.45 இற்கு (பு.நே.)
(C-32370) (12)

## ராஜா யாழ்ப்பாணம்

இன்று மட்டும்
ராஜ்கிரண், ஸ்ரீ நடித்த
கொஞ்சி பேசலாம் (ரீல்ஸ்)
காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30, (பு.நே.)
15முதல் பிரசாந் நடித்த ஜெய்
(சி-32369) (32)

## லிபேட்டி அச்சுவேலி

நாளை -
பொங்கல் சிறப்புக்காட்சி -
பிரசாந் நடித்த
"வின்னர்" (ரீல்ஸ்)
தினசரி : 2.00, 7.00.
சனி, ஞாயிறு : 11.00, 3.00,7.00 (பு.நே.)
(C-32371) (32)

## நாகம்ஸ் சுன்னாகம்

நாளைமுதல் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடான
கமல், அபிராமி, நெப்போலியன், நாசர் நடித்த
E.A.P இன் பொங்கல் வெளியீடு
விருமாண்டி (சண்டியர்) (ரீல்ஸ்)

ஆசனப்பதிவுகளுக்கு
ரட்ணம்ஸ் பாட்டா-யாழ்ப்பாணம்
T.P.: 021-222 2917
நாகம்ஸ் பாட்டா-சுன்னாகம்
T.P: 060 221 2779
வீடியோ ஆனந் - மானிப்பாய்
T.P.: - 021-2222889
நாகம்ஸ் திரை அரங்கம், சுன்னாகம்.
(C-32739)(32)




## மரண அறிவித்தல்கள்

### நாகமுத்து குணரத்தினம்

**(இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபன முன்னாள் ஊழியர்)**

அச்செழுவைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நாகமுத்து குணரத்தினம் அவர்கள் நேற்று(13.01.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.01.2004) புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அச்செழு பொதுமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்செழு வடக்கு,
நீர்வேலி. (27166)(36-17-18) தகவல்: திருமதி குணரத்தினம் வசந்தகுமாரி.

### மரியாம்பிள்ளை சவரிமுத்து

மாதகலைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும கொண்ட மரியாம்பிள்ளை சவரிமுத்து நேற்று(13.01.2004) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மரியம்மாவின் அன்புக் கணவரும் அலெக்சாண்டர் (இத்தாலி), யூடினா(ஆசிரியை, யா / ஆனைக்கோட்டை றோ.க.த.பா), யூடிற்ஜெறோனி (புனித பத்திரிசியார் கல்லூரி), யூடெக்சியா பிறிட்ஜெற் (சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் செபறட்ணத்தின் அன்பு மாமனாரும் கிறோஷா (பல்கலைக்கழகம் வவுனியா), நிறோஷன், நிறோஷினி ஆகியோரின் அன்புப் பேரனும் சின்னத்தம்பி, அந்தோனியாப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான ஆரோக்கியம், சீமாம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை(15.01.2004) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் ஆனைக்கோட்டை இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு, மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுத்து பின் தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உயரப்புலம்,
அனைக்கோட்டை. (32781)(36-17-18) தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி சரஸ்வதி இராசதுரை

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கில் வசித்தவரும் தற்போது இணுவில் கிழக்கில் வசித்து வந்தவருமான சரஸ்வதி இராசதுரை 12.01.2004 திங்கட்கிழமை இரவு 11.30 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற உரும்பிராய் வைரவப்பிள்ளை இராசதுரையின் அன்பு மனைவியும் சிவகுமாரன் (சுவிஸ்), வாசுகி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற திரு. திருமதி செல்லத்துரை அவர்களின் மகளும் காலஞ்சென்ற இலங்கைநாதன் மற்றும் சின்னராசா, காலஞ்சென்ற அழகரத்தினம் மற்றும் மகேஸ்வரி, செல்வரத்தினம்(அம்மா அச்சகம், இணுவில்), ஞானமணி, இந்திராணி, அருளானந்தசிவம் (ஜேர்மனி), பத்மானந்ததேவி, மல்லிகாதேவி, ஸ்ரீ கிருஸ்ணராசா, சுபத்திராதேவி ஆகியோரின் சகோதரியும், கௌரி, பாலநாதன் ஆகியோரின் அன்பு மாமியும் அபிநயா, ஆரபி(சுவிஸ்), தருன், தக்ஷா (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் கிழக்கு.(27163)(36-17-18) தகவல்: ந.புஸ்பராசா (பெறாமகன்).


Edexcel International, UK

BTEC HND

World Class Qualification

NEW BATCH STARTS ON 23.01.2004

Delivered Locally
Recognised Globally

Institute of Informatics Studies ( IIS )
# 100, Clock Tower Road, Jaffna. TP No. 021 222 2531

## எதிர்வரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்.பீ.கே.நெலும்தெனிய தலைமை தாங்கினார்.

விமல் வீரவன்ஸ மேலும் தெரிவித்ததாவது:-

ஜே.வி.பி., - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டு முன்னணி உருவாவதன மூலம், இலங்கையின் அரசியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படலாம். ரணில் அரசு, ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டு வருட காலத்தில் நாடு குட்டிச சுவராகிவிட்டது. வளங்களைச் சுரண்டும் வகை யில் ஏகாதிபத்திய நாடுகள் திட்டமிட்டு செயற் பட்டு வருகின்றன. இதன் மூலம், நாடு பெரும் பொருளாதாரச் சீரழிவுக்கு முகம் கொடுக்கவேண்டிய அபாயம் உள்ளது.

- இப்படி அவர் கூறினார்.

## ஜனாதிபதி-பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தக சம்மேளனத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்திலேயே இந்த இணக்கம் காணப்பட்டது. பிரபல சமூக சேவையாளரான கலாநிதி ஏ.ரி.ஆரியரத்ன, தொழில்சார் நிபுணர்கள் சங்கங்களின் அமைப்பின் தலைவர் பராக்கிரம கருணாரத்ன, மதங்கள் காங்கிரஸின் பிரதிநிதியான ஷேர்லி திசேரா ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு தமது ஆலோசனைகளை முன்வைத்தனர்.

சமயத் தலைவர்கள், தொழில்சார் நிபுணர்கள், சமூகத் தலைவர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு கூட்டத்தில் கூட்டறிக்கை ஒன்று நிறைவேற்றப் பட்டு ஜனாதிபதியினதும் பிரதமரினதும் ஆராய்வுக்காகவும், நடவடிக்கைக்காகவும் சமர்ப்பிக்கப்படும் என்று கூட்டத்தில் இறுதியில் வர்த்தக சமூகத்தைப பிரதிநிதித்துவப்படுத்தும் 'கூட்டு வர்த்தக அமைப்பின்' தலைவரான மஹேந்திர அமரசூரிய தெரிவித்தார்.

கூட்டறிக்கையில் இடம்பெறும் மாற்று யோசனைகள் தொடர்பாக ஒரு கால வரையறைக்குள் இணக்கம் தெரிவிக்க ஜனாதிபதியும் பிரதமரும் தவறுவார்களேயானால் வர்த்தக சமூகம் தனது 'அழுத்தத்தைப் பிரயோகிக்கும் திட்டத்தை' நடைமுறைப்படுத்தும் என்று அமைப்பு வட்டாரமொன்று தெரிவித்துள்ளது.

## எங்கிருந்தோ வந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இவர் தங்கியிருந்த வீட்டின் முற்றத்தில் நேற்றிரவு நின்றுகொண்டிருந்தார் என்றும் -

அப்போது எங்கிருந்தோ சீறிப்பாய்ந்து வந்த ஈர்க்கு வாணம் இவரது வலது கண்ணில் பட்டு வெடித்துச் சிதறியதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)

## சர்வதேசம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்வை எமது வசமாக்க நாம் அனைவரும் பணியாற்ற களம் திறக்கப்படுகின்றது. கிழக்குப் பல்கலைக்கழக முன்றலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'பொங்குதமிழ்' எழுச்சியில் சங்கமிப்போம்.

தாயக விடுதலைப் போராட்டத்தின் தார்மீகத்தை, தர்மத்தின் பாற்பட்ட அதன் நியாயத்துவத்தை தெள்ளத் தெளிவாக அகில உலகிற்கும் மீண்டுமொரு தடவை அழுத்தந்திருத்தமாக ஒன்றுசேர்ந்து எடுத்துரைப்போம்.

சர்வதேச சமூகம் எமது ஏகபிரதிநிதிகளான விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதுடன், அரசின், தமிழின அழிப்பு யுதத்த்திற்கு துணைபோவதை நிறுத்தவேண்டும்.

இரண்டு ஆண்டுகளை எட்டும் "புரிந்துணர்வு உடன்படிக்கை" போரை மட்டுமே நிறுத்தியுள்ளதே தவிர, உருப்படியான தீர்வுகளையோ, ஏற்பாடுகளையோ தமிழ்பேசும் மக்களாகிய எமக்குத் தந்துவிடவில்லை.

புரிந்துணர்வு உடன்படிக்கை ஊடாக இதுவரை நிறைவேற்றப்படாத விடயங்கள் சரிவர நிறைவேற்றப்பட அரசு மீது அழுத்தம் பிரயோகிக்கப்பட வேண்டும்.

வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் அரச பயங்கரவாதத்தாலும், அடிவருடிச சக்திகளாலும் காணாமற்போனவர்கள் (குறிப்பாக அதிக படுகொலைகள் நிகழ்ந்த தென் தமிழீழப் பிரதேசத்தில் நடந்த காணாமற்போதல்கள்) விடயங்கள் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட்டு, நியாயம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் அறிக்கையில் அடங்கியுள்ளன.

## சக்தியின் பொங்கல் விழா

சக்தி ரிவி, சக்தி எப்.எம். ஏற்பாட்டில் நடத்தப்படும் பொங்கல் நிகழ்வுகள் நாளை காலை 7 மணியளவில் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்திலும். முற்பகல் 9 மணியளவில் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய முன்றிலிலும் நடைபெறுகின்றன.

## ஆஸி. கிராம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுகிறது.

சிட்னி, மெல்போர்ன் ஆகிய நகரங்களுக்கு வரும் மக்கள் நெருக்கடியைக் குறைப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் 85 ஆயிரம் பேர் ஆஸ்திரேலியாவில் குடியேறுகிறார்கள். அவர்களில் பெரும்பாலானோர் சிட்னி, மெல்போர்ன் நகரங்களில்தான் குடியேறுகிறார்கள், கிராமங்களில் குடியேற விரும்புபவர்கள ஜூலை மாதம் முதல் விசாவுக்கு விண்ணப்பிக்கலாம்.

## தனது பதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குமாரதுங்க அந்த செவ்வியில் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு அரசுக்கும் அவருக்கும் இடையிலான முரண்பாட்டை மேலும் தீவிரபடுத்தியிருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## 'யுனிசெவ்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தும் கந்துரையாடினர்.

'யுனிசெவ்' அமைப்பின் யாழ். அலுவலக அதிகாரிகளுடன் சுவீடிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுக் கலந்துரையாடினர். பின்னர் கோப்பாயில் மிதிவெடி அபாயம் குறித்து கல்வி போதிக்கும் பாடசாலை மற்றும் சாவற்காட்டில் விதவைப் பெண்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும் திட்டம் ஆகியவற்றை அவர்கள் பார்வையிட்டனர்.

நேற்றுப் பிற்பகல் யாழ். செயலகத்தில் திட்டப்பணிப்பாளர் மற்றும் அதிகாரிகளையும் பின்னர் யாழ். வர்த்தகர் கழகப் பிரதிநிதிகளையும் குழுவினர் சந்தித்தபின் கொழும்புதிரும்பினர். (ஒ-3)

# சமாதானப் பேச்சின் பொறுப்பை ஜனாதிபதியே கையேற்க வேண்டும்

### சமசமாஜக் கட்சி மத்தியகுழு கோருகிறது

கொழும்பு,ஜன.14

சமாதான நடவடிக்கையின் முழுப் பொறுப்பையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கையேற்க வேண்டுமென்று லங்கா சமசமாஜக்கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்திருக்கிறது.

சமாதான நடவடிக்கையை முன்னெடுத்துச்செல்ல பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஒத்துழைப்பு பயனுள்ளதாகக் கிடைக்காததால் அந்நடவடிக்கையின் முழுப்பொறுபபையும் ஜனாதிபதி கையேற்க வேண்டுமென்று கோருவதென சமசமாஜக்கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்திருக்கிறது.

இது தொடர்பாக கட்சியின் பிரதம செயலாளர் பட்டி வீரக்கோன் விடுத்திருக்கும் அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது.

சமாதான நடவடிக்கையை ஜனாதிபதி கையேற்கையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கும் பூரணமான அரசியல் தீர்வொன்று இருப்பது மட்டுமின்றி, அத்தீர்வுக்கு ஐ.தே.கவினதும் ஏனைய தமிழ்க் கட்சிகளினதும் இணக்கமும் கிடைத்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் ஐ.தேக அரசு அரசியல் தீர்வொன்றுககாக அதற்கு அப்பாலும் சென்றிருப்பதால், ஜனாதிபதி அந்த அடிப்படையின் மீது நின்று விடுதலைப் புலிகளுடன் ஏற்படுத்தக்கூடிய அரசியல் தீர்வை நிராகரிக்க ஐ.தே.கவுக்கு முடியாது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## அமைய ஊழியர் விவரம் திரட்ட அரசஅதிபர் பணிப்பு

அரச அலுவலகங்களில் அமைய அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களின் விவரங்களை உடனடியாக அனுப்பிவைக்குமாறு சகல பிரதேச செயலர்கள் மற்றும் உதவி அரச அதிபர்களை யாழ்.அரசஅதிபர் பணித்துள்ளார்.

அமைய அடிப்படையில் பணியாற்றுபவர்களுக்கு நிரந்தர நியமனம வழங்குவது தொடர்பாகப் பொது நிர்வாக அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது . (ஒ)

A/L அதி துரித மீட்டல் வினாவிடை வகுப்பு
2004
கணக்கீடு
திரு.பாலவாசன்
B.B.A. (Fm.Spl.)
Sat., Sun. => 1.30-3.00 S.L.T
ஆரம்பம்: 17.01.04 - Sat.=> 1.30
விக்னா கல்வி நிறுவனம்

பிரத்தியேக வகுப்பு...
வணிகக் கல்வி
A/L
2006
(27130)(36)
நாளை 3.00 p.m.
V. முரளி B.B.A. Fm. (Spl.)
பல்கலைக்கழகம் முன்பாக

CRYSTAL CENTRE
நெல்லியடி
வர்த்தகம், கலை
2006 A/L
ஆரம்பம்: 15.01.2004
பிற்பகல் 3.30
Com. - B.S.பசீல்
Eco. - K.உதயன்
Acc. - S.சயந்தன்
Tam. - N.பத்மநாதன்
H.c. - S.பத்மராஜா
Log. - S.றணேசன்
Geg. - K.கிரிதரன்
Sat. - B.தவசேகர்
Drama - S.வரதன்
Eng. - K.ஜெயக்குமார்
(சி-32746)

Lingam master - swiss
சுவிஸ் வாழ் தமிழர்களின்
முன்னணி ஆசிரியர்
Deutsch - பெரியவர்களுக்கு
Deutsch - பாடசாலை மாணவர்களுக்கு
தொடர்பு:
062 7974164 - 079 3344733,
4665 Oftringen - swiss.
(26642)(36)

SUBRA (14) சித்தன்கேணி
பொருளியல் A/L 2005
திரு.ஜெயகுமார B.A .(HONS) Eco-Spl.
புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு I
Mon. Wen. 6 - 7 a.m.
அலகு-பேரினப் பொருளாதார சமநிலை
ஆரம்பம்: 19.01.2004
திங்கள் காலை 6 மணி.
பிரிவு II
Tues. Thu. 6 - 7 a.m.
அலகு-சந்தைப் பொருளாதாரம்
ஆரம்பம்: 20.01.2004
செவ்வாய் காலை 6 மணி.
பிரிவு III
Sat. Sun. 6 - 8 p.m. (மின் ஒளியில்)
துரித மீட்டல் [ஆரம்ப அலகிலிருந்து]
ஆரம்பம்.17.01.2004 [சனி மாலை 6 மணி.]
தனிப்பட்ட அனுமதி வழங்கப்படும்
அனுமதிகள் வரையறுக்கப்பட்டவை
(சி-32762)(36-17-18)

வடமராட்சியில்...
வணிகக் கல்வி
A/L
2005
பகுதி II (27131)(36)
ஆரம்பம் இன்று 5.00 p.m.
V. முரளி B.B.A. Fm. (Spl.)
நியூ ரோயல் பருத்தித்துறை.

A/L 2006 வர்த்தகப் பிரிவு
Acc. → திரு.பாலவாசன்
Eco. → திரு.மோகன்
B.st. → திரு.யசோ (சனி.ஞாயிறு)
BEACON
வெலிங்டன் சந்தியருகில
குறிப்பு→ (2723)
கணக்கீட்டிறகான தனிப்பாட அனுமதி வழங்கப்படும் 6.30 a.m.

LOGIC
மாதிரிப்பரீட்சை ஆரம்பம்: -16.01.04
★ அனுமதி அட்டை பெறாதவர்கள் உடன் பெறவும்.
P.கமல்
BRIGHTMAN
மதுபாரத் - யாழ்.
(27134)(36)

அனைவருக்கும் எமது பொங்கல் நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்
திருமறைக் கலாமன்றம்
நடத்தும்
காலம்: நாளை (15.01.2004) வியாழக்கிழ
இடம் : திருமறைக்கலாமன்ற அரங்
காலையில்
6.00 மணி - பொங்கல் வைபவம்
7.30 மணி - பண்பாட்டு வழிபாடு
மாலையில் 6.45 மணி
கலை நிகழ்ச்சிகள்
பல்வகை நடனங்கள், கிராமியப் பாடல்கள், கவியரங்கம், நாடகம்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
திருமறைக்கலாமன்றம்,
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(சி-32771)(18-17-36)

மதுபாரத்
இந்து மகளிர் ஒழுங்கை,யாழ்
ஆறே மாதத்தில் ஆங்கிலம்
பேச, எழுத, வாசிக்க
SPOKEN ENGLISH
With Grammar
By:Mr.T.THANENDRAN.
B.Com (HONS) M.M.Spl., H.N.Dip.in.Acc
பகுதி நேர விரிவுரையாளர் (English)
தொழில்நுட்பக் கல்லூரி
sat.,sun. 4.p.m. (ப.நே.)
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
- நிர்வாகி.
பல்கலைக்கழக மாணவர்களுக்கான
English paper class நடைபெறுகின்றன.
(27109)(18)

விக்கி (B.Com.)
பிரத்தியேக வகுப்புகள்
(வீட்டில் வந்தும் கற்பிக்கப்படும்)
★ A/L 2006 வர்த்தக வகுப்புகள்
★ O/L வர்த்தகமும், நிதியும்
★ 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில
தொடர்புகளுக்கு:
ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு.
T.P.: 077 6218306
(26643)

## மரண அறிவித்தல்

### ஆண்டிஐயா அன்னம்மா

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆண்டிஐயா அன்னம்மா நேற்று(13.01.2004)செவ்வாய்க்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் ஆண்டிஐயாவின் அன்பு மனைவியும் சிவமணி, சிவநேசம் (கனடா), சிவபாலன்( விவசாய போதனாசிரியர்,கைதடி), சிவானந்தன்(சுவிஸ்) மற்றும் காலஞ்சென்ற சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(14.01.2004)புதன்கிழமை பி.ப.4 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு, சாவகச்சேரி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ஆ.சிவபாலன்(மகன்).

கண்டுவில் ஒழுங்கை, சாவகச்சேரி. (27167)




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.01.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.